


கல்கி

KALKI
14.8.1966
35 காசு
இலங்கையில்
35 சதம்
தபால் செலவு தனி



புது அழகுடன் விளங்க

பாண்ட்ஸ் வானிஷிங் க்ரீம் உபயோகியுங்கள்

சருமத்தைப் பட்டுப்போல் மிருதுவாக வைத்துக்கொள்ளுங்கள்

வெண்பனி போன்ற பாண்ட்ஸ் வானிஷிங் க்ரீமை உபயோகித்து உங்கள் சருமத்துக்கு புதுப் பொலிவை அளியுங்கள். பாண்ட்ஸ் வானிஷிங் க்ரீம் முகத்தில் கரும்புள்ளிகள் தோன்றுவதைத் தடுத்து, எண்ணெய் வழியும் தோற்றத்தை மாற்றி சருமத்தில் வெயிலினாலும் காற்றினாலும் வறட்சியேற்படாமல் பாதுகாப்பளிக்கும். பாண்ட்ஸ் வானிஷிங் க்ரீமை மட்டுமே உபயோகித்தால்கூட முகம் பட்டுப்போல் விளங்கும். அதன் மீது பவுடரும் போட்டுக்கொண்டால் பவுடர் ஒரே சீராகப் படிந்து மணிக்கணக்கில் அப்படியே கலையாமல் இருக்கும்.

சீஸ்ப்ரோ-பாண்ட்ஸ் இன்கார்ப்பொரேடட்
(வரையறுக்கப்பட்ட பொறுப்புடன் யு.எஸ்.ஏ.யில் இணைக்கப்பட்டது)



கல்கி

பொருளடக்கம்

பராபவ, ஆடி 29 ○ ஆகஸ்ட் 14

"கல்கி"யில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்களே; சம்பவங்களும் கற்பனையே.

ஜினோவுத் திரையில்


இரண்டு ? சீன வேதாந்திகள் ஒரு நதிக் கரையில் உட்கார்ந்து பின் வருமாறு சம்பாஷித்துக் கொண்டிருந்தார்கள்.


ஒருவர்: ஆஹா! இந்த மீன்கள் ஜலத்தில் எத்தனை சந்தோஷமாக வாழ்கின்றன!

மற்றவர்: அது உமக்கு எப்படித் தெரிந்தது? நீர் ஒரு மீனல்லவே?

முதல்வர்: எனக்குத் தெரியாதென்று உமக்கு எப்படித் தெரிந்தது? நீர் நானல்லவே?

கல்கி ஏப்ரல் 8, 1945




ரூபாயின் மதிப்புக் குறைப்பு
டி.டி.கே
மொரார்ஜி
மேனன்
பழைய ரூபாய் இங்கு அடக்கம் செய்யப் பட்டிரு க்கிறது.
PK
குற்றவாளிகளே துக்கம் காக்கிறார்கள்!

தமிழ்த்திருநாடு தன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா — பாரதியார்



மலர் 26 ● இதழ் 2

விடுதலை நாள் என்றோ?

ஆகஸ்டு பதினைந்தாம் தேதி நிகழுகிற சுதந்திர தினம் ஒரு மகத்தான நாள். சுதந்திர தினம் குடியரசு தினம் ஆகிய இரண்டு விழாக்களையும் ஒன்று சேர்த்துக் கொண்டாடினால் என்ன என்று நேரு அவர்களும் ராஜாஜியும் ஒரு முறை ஆலோசித்தார்கள். அப்போது, சுதந்திர தினமே குடியரசு தினத்தைவிட முக்கியமானது என்று இருவருமே கருதினார்கள். சுதந்திர தினத்தையும் விடப் பெருமை வாய்ந்தது மக்கள் அனைவரும் சர்க்காரின் அமிதமான கட்டுப்பாட்டிலிருந்து விடுதலை பெறுகிற தினம். தேசத்தின் சுபிட்சத்துக்காகவும் முன்னேற்றத்துக்காகவும் தொழில் துறையிலும் வியாபாரத்திலும் பணி செய்பவர்களைக் கட்டிப் போட்டிருக்கும் தளை என்று விலகி நமக்கு உண்மையான விடுதலை கிடைக்குமோ?

இந்தத் தளையின் பயனாகவே — சர்க்காருடைய தவறுகள் தோல்விகள் இவற்றின் உருவமாகவே — ரூபாயின் மதிப்புக் குறைவு உத்தரவு வெளியாகியுள்ளது. அக்பரின் காலத்தில் இந்திய ரூபாய் இரண்டு ஷில்லிங்கு ஆறு பென்ஸுக்குச் சமமாக இருந்தது. இப்போது அதில் மூன்றில் ஒரு பங்காக — பதினொரு பென்ஸாக — ஆகியிருக்கிறது. இந்த 'அதிகார பூர்வமான' மதிப்பும் சலுகை பெற்ற சில வியாபாரிகளுக்குத்தான் கிடைக்கிறது. மற்றவர்கள் ஒரு ரூபாய்க்கு எட்டு பென்ஸுதான் பெற முடிகிறது. ஆக்ராவில் அடக்கமாகியுள்ள அக்பர் இதை அறிந்து சமாதியிலேயே துடித்திருப்பார்!

48 கோடி மக்களுக்காக ஒரு மத்தியத் திட்டம் வகுத்துச் சர்க்காரின் நிர்வாகத்தில் உற்பத்தியும் விநியோகமும் செய்ய முயன்றது படுதோல்வியாகி விட்டது. ஆகாத காரியத்தில் இறங்கினால் இதுதான் முடிவு. பொருளாதார நிலை நமக்காகக் காத்திராது. ஆற்றோட்டம் போல் ஓடும். திட்டங்கள் தோல்வியுற்று, தேசமெங்கும் துயரமும் நேர்மைக் குறைவும் பரவி விட்டன. இனியேனும், பண்டங்களை வாங்கும் மக்களுடைய விருப்பத்துக்கிணங்க வியாபாரிகள் சுதந்திரமாகப் போட்டியிட்டுப் பொருட்களை உற்பத்தி செய்ய வழி காண வேண்டும். எல்லாச் சீர்திருத்தங்களிலும் முக்கியமானது அடக்கம். நாட்டைப் பரிபாலிக்கும் கூட்டத்துக்கு அடக்கம் வேண்டும். கட்சியின் நலனைவிடத் தேசத்தைப் பெரிதாகக் கருத வேண்டும். காங்கிரஸ் ஆட்சியில் இவற்றை எதிர்பார்த்துப் பயனில்லை. எனவே இந்த அரசாங்கத்தைத் தேர்தலில் நீக்க வேண்டும். அப்போதுதான் தேசம் சுதந்திரம் பெற்ற தினத்தை மட்டுமின்றி மக்களின் வாழ்க்கை விடுதலை பெற்ற தினத்தையும் கொண்டாடலாம். சுயவசமில்லாத சுயராஜ்யம் ஒரு ரஸமில்லாத பொருள் என்பதை நிதரிசனமாகக் கண்டோம். சுயவசம் வேண்டும்.

இரண்டாவது உலக யுத்தத்தில் மகத்தான கஷ்ட நஷ்டங்களுக்கு ஆளான ஜெர்மனி, சுதந்திரப் பொருளாதாரத்தினாலேயே இன்று மீண்டும் பொருளாதாரத்தில் தலை தூக்கி நிற்கிறது. ஒரு தனி மனிதனோ தேசமோ துயரப்படுவதும், அதிலிருந்து விமோசனம் பெறுவதும் உலகுக்கு ஓர் உதாரணமாக அமைவதற்கேயாகும். ஜெர்மனி காட்டிய ஆன்ம பலம் இந்தியாவுக்கு ஒரு வழி காட்டியாக விளங்க வேண்டும். அது நம்மை அறிவீனத்திலிருந்தும் பலவீனத்திலிருந்தும் காத்து விவேகமும், பலமும், நம்பிக்கையும் அளிக்குமாக!

பூவுலகம் தோன்றி உலக வாழ்க்கை நடப்பதற்கு மூல சக்தி சூரியன். மக்களின் மனோபலத்துக்கும் மற்ற எல்லா பலத்துக்கும் மூலம் சூரியன். அவனை நோக்கிப் பிரார்த்தித்து நமது உள்ளம் பிரகாசம் பெறுவதற்காக விசுவாமித்திர ரிஷி காயத்ரி மந்திரத்தைத் தந்தார். மந்திரத்தின் பயனை ஆன்ம பலம் பெற்று விடுதலை நாளைக் காண்போமாக.

என்ன சேதி?

பிரிவினைபற்றி

தந்திரம் பலிக்குமா?

விலை உயர்வுக்குக் காரணம்

ஏ.எல். முதலியார் எச்சரிக்கை

எல்லைப்புற காந்தி என்று இந்திய மக்களால் போற்றப்பட்டு வந்த கான் அப்துல் கபார்கான் அவர்களைச் சந்தித்த இந்திய நிருபர்களின் பேட்டி சமீபத்தில் எல்லாப் பத்திரிகைகளிலும் வெளியாகியுள்ளது. அதில் நிருபர்கள் 1947ல் இந்தியப் பிரிவினை எப்படி ஏற்பட்டது? என்று கேட்ட கேள்விக்கு அவர் அளித்துள்ள விடையை இங்கே கொடுக்கிறோம்.

''பிரிவினைக் கருத்துக்கு ஆட்பட்ட முதல் காங்கிரஸ் தலைவர் சர்தார் வல்லபாய் பட்டேல். இந்தக் கருத்துக்கு அடுத்தாற் போல் இணங்க வைக்கப்பட்டவர் ஸ்ரீ ஸி. ராஜகோபாலாச்சாரி. இவ்விருவரும் சேர்ந்து 1947ல் நாட்டில் உருவான நிலையைச் சமாளிக்கப் பிரிவினையைத் தவிர வேறு வழி இல்லை என்பதை ஜவாஹர்லால் நேருவுக்கு எடுத்துக் கூறி இணங்க வைத்தனர். பிறகு காங்கிரஸ் செயற் குழுவில் இந்த மூன்று தலைவர்களும் பிரிவினையை ஆதரித்துப் பேசிச் செயற் குழுவைச் சம்மதிக்க வைத்தனர்.''

பிரிவினைக்கு ராஜாஜி ஒருவரே காரணம் என்ற தப்பான கருத்தைத் தெளிவு படுத்த எல்லைக் காந்தியின் வாக்கு உதவுமென நம்புகிறோம்.

காங்கிரஸ் பார்லிமெண்டரி கட்சி சமீபத்தில் புதுதில்லியில் கூடியபோது ரூபாயின் மதிப்பைக் குறைத்ததைக் கண்டித்துப் பழைய நிதி மந்திரிகளான ஸ்ரீ டி. டி. கே., ஸ்ரீ மொரார்ஜி தேசாய், பழைய பாதுகாப்பு மந்திரி ஸ்ரீ கிருஷ்ண மேனன் ஆகியோர் பேசினர். நாட்டின் பொருளாதாரத்தை இவ்வளவு சீர்கேடான நிலைக்குக் கொண்டு வந்தவர்களே இந்த நபர்கள்தான். இவர்கள் பதவி வகித்த காலத்தில் செயல்படுத்திய கொள்கைகளின் காரணமாகவே ரூபாயின் மதிப்பு வெளிநாடுகளில் மிகவும் தாழ்ந்தது. இதை மறந்திருந்தும் இப்படி இவர்கள் பேசுவது பொதுமக்களை ஏமாற்ற அவர்கள் கையாளும் தந்திரம்தான் என்பதை ராஜாஜி சமீபத்தில் ஒரு பொதுக் கூட்டத்தில் எடுத்துக் காட்டினார். அதாவது ரூபாய் மதிப்புக் குறைப்பினால் ஏற்படும் விலைவாசி உயர்வு போன்ற விளைவுகளுக்குத் தாங்கள் பொறுப்பல்ல என்று மக்களுக்குக் காட்டிக் கொண்டு அவர்களிடம் நல்ல பெயர் தட்டிக் கொள்ளப் பார்க்கிறார்கள். அதிகாரத்தில் உள்ளவர்களைக் கண்டித்துத் தாங்கள் நல்லவர்கள் என்று பெயர் எடுத்து விடலாம் என்று பார்க்கிறார்கள். ஏமாந்து போக வேண்டாம் என்று எச்சரிக்கை விடுத்தார் ராஜாஜி.

இது நூற்றுக்கு நூறு உண்மை! என்று சொல்வது போல் காங்கிரஸ் ஆட்சியில் முக்கிய பொறுப்பு ஏற்றிருக்கும் ஸ்ரீ எஸ். கே. பாட்டீல் அவர்கள், மாஜி மந்திரிகள் பார்லிமெண்டரி கட்சிக் கூட்டத்தில் பேசியதைப் பகிரங்கமாக்கியதும், தாங்கள் ஆளும் கட்சியின் அபிப்பிராயத்துக்கு மாறுபட்டிருப்பதாகக் காட்டிக் கொள்வதும் ஜனங்களிடம் நல்ல பெயர் எடுக்க அவர்கள் கையாண்ட ஒரு தந்திரமே என்று கூறியிருக்கிறார். ஆனால் மக்கள் முன்போல் இல்லையே!

உற்பத்திக்குப் பிரயோசனமில்லாமல், பெரும்பாலும் நிர்வாக இலாகாக்களுக்காகவே தில்லி சர்க்காரும், ராஜ்ய சர்க்கார்களும் ஓர் ஆண்டில் 6000 கோடி ரூபாய் செலவிட்டால் விலைவாசிகள் எப்படி உயராமலிருக்கும்? சேமிப்புக்கும் முதலீட்டுக்கும் ஊக்கமில்லாததால் உற்பத்தி உயரவில்லை. உற்பத்தி உயராமல், பணப் புழக்கம் உயர்ந்தால் விலைகள் ஏற வேண்டியதுதானே! கண்ணுக்குத் தெரியாத ஒரு சங்கிலித் தொடரில் எல்லாப் பண்டங்களின் விலைகளும் பிணைக்கப்பட்டிருக்கின்றன. எனவே ஒன்றின் விலை உயர்ந்தால் எல்லாவற்றின் விலையும் உயருகிறது. வியாபார ஸ்தலங்களின் காரியக்கிரமத்தை உணராதவர்களுக்கு இது அநியாயம் என்றும், சதி என்றும் தோன்றும். சட்டம் போட்டு இதைத் தடுக்க நினைப்பார்கள். ஆனால் இயற்கை விதியை மாற்ற முடியாது.

பின்ளைப்பேறு வைத்திய நிபுணரும், அரசியல் அறிஞருமான துணைவேந்தர் லக்ஷ்மணசுவாமி முதலியார் அவர்கள், 'லூப்' இயக்கத்தை வன்மையாகக் கண்டித்திருக்கிறார். 'ஜனத்தொகைக் கட்டுப்பாடு என்பதை ஒரு தேவதையாக்கி வழிபடுகிறார்கள். ஓரளவுக்குக் கட்டுப்பாடு வேண்டுமென ஒப்புக்கொள்ளுகிறேன். ஆனால் இதன் விளைவாகத் தவறுக்கு மேல் தவறு நிகழக் கூடாது' என்றார் அவர். கிராமப் புறங்களில் முறையான வைத்தியம் பெற முடியாத பெரும்பாலான மக்களுக்கு 'லூப்' ஒத்து வராது.

டாக்டரவர்களின் பேச்சு பிரகாரமான அதே தினத்தன்று குடும்பக் கட்டுப்பாட்டுக்கு 95 கோடி ரூபாய் போதாது என்றும் 239 கோடி ரூபாய் வேண்டும் என்றும் திட்டக் கமிட்டி வற்புறுத்தியிருப்பதும் வெளியாகியுள்ளது. அருமையான செல்வத்தை வீணாக விரயம் செய்வதற்கு இதைவிட வேறு திட்டம் கிடையாது.



ராஜாஜியின் கருத்துக்கள்

ரூபாய் மதிப்பைக் குறைத்தது சரியா தவறா என்பதைத் தேர்தல் பிரச்னையாக்கினால் காங்கிரஸால் வெற்றி காண முடியும் என்று ஸ்ரீ எஸ். கே. பாட்டீல் அவர்கள் கருதுகிறார். இதனாலேயே இந்த நடவடிக்கை சரியானது என்று ஆதரித்துப் பேசுகிறார். உண்மையில் இப்போது ரூபாய் மதிப்பைக் குறைத்திருப்பதா பிரச்னை? அல்ல. இந்த நடவடிக்கையை அவசியமாக்கிவிட்ட நீண்ட காலக் கொள்கைகள்தான் தேர்தல் பிரச்னையாக வேண்டும். அந்தக் கொள்கைகளின் விளைவாகவே இப்போது மதிப்பைக் குறைக்கும் சஸ்திர சிகிச்சை செய்ய வேண்டியதாயிற்று. வியாதி முற்றிய பின் சஸ்திர சிகிச்சை செய்ய வேண்டியதுதான் என்பதை நாம் ஒருபோதும் ஆட்சேபிக்கவில்லை. சர்க்காரின் கண்மூடித்தனமான கொள்கைகளால் இத்தகைய சஸ்திர சிகிச்சை அவசியமாகிவிடும் என்று நாமே நீண்ட காலமாக எச்சரித்து வந்திருக்கிறோம். இதையெல்லாம் கவனியாமல் பேசியிருக்கிறார் ஸ்ரீ பாட்டீல். கொள்கைகளை மறந்து, அதன் விளைவான நடவடிக்கையைத் தேர்தல் பிரச்னையாக்குவதால் பயனில்லை.

முன்பே குற்றம் செய்தாகி விட்டது. அதற்குத் தண்டனை தர வேண்டியது வாக்காளர் பொறுப்பு. நமது அந்நியக் கடனை 2700 கோடி ரூபாயைப் பெரும் பாரமாகக் கருதினோம். இப்போது அது மேலும் பளுவாகி, 4100 கோடியாகி விட்டது. புதிய கடன் வாங்குவதற்காகப் பழைய கடன் சுமையை ஒரே வீச்சில் உயர்த்திவிட்டிருக்கிறார்கள்.

★

தனியார் துறையில் உள்ள உற்பத்தியாளர்கள், விலைவாசிகளை உயர்த்தாமல் கட்டுப்பட்டிருக்கும்போது சர்க்கார் நிறுவனமாகிய உலோக — கனிய வர்த்தகக் கார்ப்பரேஷன் (Metals and Minerals Trading Corporation) ரூபாய் மதிப்பைக் குறைப்பதற்கு முன்பு தன் கைவிருப்பில் இருந்த தாமிரத்துக்கு இப்போது விலையை உயர்த்தி யிருக்கிறது. விலைக் கட்டுப்பாட்டுக்கு உதவி செய்யும் பொருட்டு அகில இந்திய உற்பத்தியாளர் அமைத்துள்ள கமிட்டி இதை எடுத்துக் காட்டியிருக்கிறது.

★

தமிழ் நாட்டின் முக்கியமான ஒரு நகர சபைப் பகுதியில் உபயோகிக்கப்படும் ஓர் இலக்கணப் புத்தகத்தின் குறைகளைப் பற்றிப் பலர் கூறி யிருக்கிறார்கள். அதிலிருந்து தரப்படும் உதாரணப் பகுதிகளைப் பார்க்கும்போது, புத்தகத்தை நீக்கினால் மட்டும் போதாது என்று தோன்றுகிறது. எச்சரிக்கும் வகையில் புத்தக ஆசிரியர் பெயரை இதற்காக உரிய கறுப்புப் பட்டியலில் (Black List) போட வேண்டும். சாதிச் சண்டைகளையும் துவேஷத்தையும் பரப்புவதை மிகக் கடுமையான முறையில் தடுத்து நிறுத்த வேண்டும். அதற்கு இதை ஓர் உதாரணமாகக் கொள்ள வேண்டும்.


★

தமிழகத்தில் பிரபலமான ஒருவர் தமது மேடைப் பேச்சுக்களாலும் எழுத்தாலும் ஹிந்துக்களின் மத உணர்ச்சியைப் புண்படுத்துவதுபற்றி மிகவும் தாபத்துடன் பலர் சட்ட சபையில் பேசியிருக்கிறார்கள். இதைத் தடுக்க வேண்டும் என்று அவர்கள் சர்க்காரைக் கேட்டிருக்கிறார்கள். ஆனால் சர்க்கார் தரப்பிலோ சமாதானம் சொல்லி மழுப்பும் பாணியில் பதில் தரப்பட்டிருக்கிறது. சர்க்காரின் போக்கை மன்னிப்பதற்கில்லை.

ராஜ்யங்களுக்கிடையே யுள்ள துண்டு நிலங்களின் உரிமைப் பிரச்னை போன்ற விஷயங்களில்தான் காங்கிரஸாரின் கருத்து உள்ளதே தவிர, கோடிக்கணக்கான மக்களின் மன உணர்ச்சி பற்றி அவர்களுக்குக் கவலையில்லை.

ஒவ்வொரு மதத்துக்கும் புராணங்கள் சடங்குகள் இவை உண்டு. இவற்றில் ஒருசில பலவீனமான அம்சங்களும் உண்டு. இது காரணமாக மக்களின் உணர்ச்சிகளைப் புண்படுத்துவது நியாயமாகாது. உண்மையாகவே மதச் சீர்திருத்தம் செய்ய விரும்புகிறவர்களின் பேச்சுக்கும், புண்படுத்த வேண்டும் என்பதையே வாழ்க்கையின் நோக்கமாகக் கொண்டவர்களின் பேச்சுக்கும் உள்ள வித்தியாசத்தை யாரும் அறிவர். இப்படிப்பட்ட நடவடிக்கையைத் தண்டிக்க வேண்டுமானால் சட்டத்தைத் திருத்த வேண்டும் என்று சிலர் பேசுகிறார்கள். புதுச் சட்டமோ, பழைய சட்டத்தின் திருத்தமோ தேவையில்லை. அந்தரங்க சுத்தமான அரசாங்கமும், அரசியலுக்குப் பயப்படாத வழக்கறிஞர்களும் இருப்பின், இப்போதுள்ள 'இந்தியன் பீனல் கோடி'ன்படியே இக் குற்றத்தைத் தண்டிப்பதற்குப் போதிய இடமுள்ளது.

B·I



S. S. ரஜுலா

சென்னையிலிருந்து

1966 ஆகஸ்டு 26 — 1966 செப்டம்பர் 19

சென்னையிலிருந்து பினங்கு மற்றும் சிங்கப்பூருக்கு பிரயாணம் செய்ய விரும்பும் பிரயாணிகள் தயவு செய்து கீழ்க்கண்ட விலாசதாருக்கு விண்ணப்பிக்கவும்.

மெஸர்ஸ் பின்னி & கோ., லிமிடெட்
7, அரமனைக்காரத் தெரு, சென்னை - 1

அல்லது கீழ்க்கண்ட கம்பெனியின் அங்கீகாரம்
பெற்ற பாஸேஜ் புரோக்கர்களுக்கு விண்ணப்பிக்கவும்

C. M. குட்டி ப்ரொப்ரைட்டர் : குட்டி டிராவல் சர்வீஸ் 86 அங்கப்ப நாயக்கன் தெரு சென்னை - 1	மெஸர்ஸ் கேரளா டிராவல்ஸ் மாஸ்காட் ஹோட்டல் திருவனந்தபுரம்

நாகப்பட்டினத்திலிருந்து

1966 ஆகஸ்டு 27 — 1966 செப்டம்பர் 20

நாகப்பட்டினத்திலிருந்து பினங்கு மற்றும் சிங்கப்பூருக்குப் பிரயாணம் செய்ய விரும்பும் பிரயாணிகள் தங்களது பிரயாண டிக்கட்டுகளை கீழ்க்கண்ட விலாசத்தில் நேரிடையாகப் பெற்றுக் கொள்ளலாம்


மெஸர்ஸ் மதுரா கம்பெனி பிரைவேட் லிமிடெட்
முதல் லைன் பீச் ரோடு, நாகப்பட்டினம்

பினங்கு போர்ட் ஸ்வெட்டன்ஹாம், சிங்கப்பூர் முதலிய இடங்களுக்கு நேரடியாக ஏற்றிச் செல்லவும், சிங்கப்பூரில் கப்பல் மாற்றி ஆஸ்திரேலியா நியூஜிலாந்து துறைமுகங்களுக்கு அனுப்பவும் சரக்குகள் சென்னையிலிருந்தும் நாகப்பட்டினத்திலிருந்தும் ஏற்றுக் கொள்ளப்படும்.

பிரயாணிகள் மற்றும் சாமான்கள் ஏற்றும் விவரங்களுக்குத் தயவுசெய்து எழுதவும்:

பின்னி & கம்பெனி லிமிடெட் 7, அரமனைக்காரத் தெரு, சென்னை - 1	மதுரா கம்பெனி பிரைவேட் லிட். முதல் லைன் பீச் ரோடு, நாகப்பட்டினம்

ஏஜெண்டுகள்: பிரிட்டிஷ் இந்தியா ஸ்டீம் நாவிகேஷன் கம்பெனி லிமிடெட்



நன்றி

பொன் அகப்பட்டாலும் அகப்படாத புதன்கிழமை, புதுப் பிரவாகம் பூரித்துப் பொங்கும் ஆடிப் பதினெட்டு, ஆகஸ்ட் மூன்றும் தேதி மாலை 'கல்கி' பூங்கா கலியாணக் கோலாகலத்தில் ஆழ்ந்திருந்தது. 'எங்கும் காணக் கிடைக்காத திருக் கூட்டம்' என்று வியக்குமாறு பற்பல துறைகளைச் சேர்ந்த பெருமக்கள் ஒன்றுகூடி யிருந்தனர். ஆண்களும் பெண்களும் திருமண இல்லத்திற் கூடினாற்போல் மகிழ்ச்சியுடன் அளவளாவிக் கொண்டனர்.

பல துறைகளைச் சேர்ந்தவர்களை ஒன்று கூட்டிய அந்தச் சக்தி விநாயகப் பெருமானின் அருளே எனலாம். தமிழன்னைக்குத் தன்னாலியன்ற சிறு தொண்டினைப் புரிகிற கல்கியின் வெள்ளி விழாவினைத்தான் அவனது அருள் மேற்சொன்னவாறு பொலிய வைத்தது. பொதுமக்களும், பிரமுகர்களும் கல்கியிடம் வைத்துள்ள அன்புக்கு ஓர் அடையாளமாகவே இவ்வெள்ளி விழா ஒரு மகோற்சவமாக நடந்தது.

முதலில் திறந்த வெளியில் தேநீர் விருந்து நடைபெற்றது. அதன் பின் கொட்டாரப் பந்தலில் வெள்ளி விழா வைபவங்கள் தொடர்ந்தன. கான சரஸ்வதி ஸ்ரீமதி டி.கே. பட்டம்மாள் அவர்கள் 'பூங்குயில்' என்று தொடங்கும் பாடலைப் பாடி அதனை இயற்றிய பேராசிரியர் கல்கியின் நினைவை அவைக்கு ஏற்படுத்தினார். அடுத்து சங்கீத வாணி ஸ்ரீமதி எம். எல். வஸந்தகுமாரி அவர்கள் 'நீங்காத செல்வம் நிறைய' ஆண்டாளின் பாசுரத்தைப் பாடினார். கல்கி துணை ஆசிரியர் திரு கி. ராஜேந்திரன் அவர்கள் வரவேற்புரை நிகழ்த்தினார். இந்த மங்களங்களுக்கு மூலகாரணமான இறைவனின் திரு அருளே விழாவுக்கு வந்தாற் போல ஸ்ரீ காஞ்சி சங்கராசாரிய சுவாமிகள் அனுப்பியிருந்த மந்திராட்சதை வேத கோஷங்களுக்கு இடையே வழங்கப்பட்டது. அஹோபிலம் மடம் ஜீயர் சுவாமிகளின் அருட் பிரசாதமும் நல்லாசியும் டாக்டர் ஸ்ரீஹரி அவர்களால் வழங்கப்பட்டன. திருப்பதி வேங்கடேசுவரப் பெருமான், மயிலை கபாலீசுவரன், திருவல்லிக்கேணி பார்த்தசாரதி ஸ்வாமி, வடபழனி ஆண்டவன் முதலிய தெய்வ சந்நிதானங்களி லிருந்தும் பிரசாதங்கள் வந்திருந்தன.

விழாவுக்கு வந்திருந்த ஆசிச் செய்திகளை அளவிடவே முடியவில்லை. ருசியான சிலவற்றைக் கல்கி அதிபர் படித்தார். ஸ்ரீரங்கம் ஆண்டவன் ஸ்வாமிகள், வானமாமலை ஜீயர் ஸ்வாமிகள், நாங்குனேரி ஜீயர் சுவாமிகள், திருவாவடுதுறை மகா சந்நிதானம் அவர்கள், தருமபுரம் மகா சந்நிதானம் அவர்கள், காஞ்சி ஞானப் பிரகாச தேசிக சுவாமிகள், மயிலம் சிவஞான பாலய சுவாமிகள், திருவண்ணாமலை ஈசான்ய மடாதிபதிகள், மதுரை ஞானசம்பந்த மட ஆதீன கர்த்தரவர்கள், பாலிமார் – புட்டிகே–பாலேகுத்ரு முதலிய கர்நாடக மடாதிபதிகள் ஆகியோர் அனுப்பியிருந்த ஆசியுரைகளைக் கல்கி பெரும் பாக்கியமாகக் கருத வேண்டும். திருவாவடுதுறை ஆதீனகர்த்தரவர்கள், ''கல்கி பத்திரிகைக்குச் சுக்கிர தசை தொடங்கியிருப்பது தெரிந்து மகிழ்கிறோம். வெள்ளி–சுக்கிரன்; வெள்ளி விழா – சுக்கிர விழா'' என்று தமது திருமுகத்தில் அருளியிருந்ததைக் கேட்டுக் குழுமியிருந்த அனைவரும் கரகோஷம் செய்து மகிழ்ச்சி தெரிவித்தனர்.

பிரதமர், கவர்னர்கள், முதன் மந்திரிகள், மத்திய – மாநில மந்திரிகள், தொழிலதிபர்கள், அரசியல் பிரமுகர்கள், கலைஞர்கள், பேராசிரியர்கள், எழுத்தாளர் பெருமக்கள், நண்பர்கள், ஏஜண்டுகள் ஆகியோரிடமிருந்து வாழ்த்துக்கள் வந்து குவிந்திருந்தன. நாமக்கல் கவிஞர் அவர்கள் தமது வாழ்த்துரையில் சுமார் நாற்பதாண்டுகளுக்கு முன் திரு சதாசிவம் பாரதியார் பாடல்களைப் பாடிக் காங்கிரஸ் பிரசாரம் புரிந்ததை நினைவுகூர்ந்திருந்தார். இது குறித்து, ''எம். எஸ். பாடத் தொடங்குவதற்கு முன்பே நான் பாடிப் பெயர் வாங்கியிருக்கிறேன்'' என்று கல்கி அதிபர் கூறியது அவையினரைச் சிரிப்புக் கடலில் ஆழ்த்தியது.

விழாவுக்குத் தலைமை தாங்கப் பேரன்புடன் இசைந்திருந்த தமிழக கவர்னர் சர்தார் உஜ்ஜல் சிங் அவர்கள் தமது அரிய உரையை நிகழ்த்தினார். தமிழுக்கும் நாட்டுக்

னும் காலஞ்சென்ற பேராசிரியர் 'கல்கி' அவர்களும், கல்கிப் பத்திரிகையும் செய்துள்ள அரும்பணிகளை அவர் மனமாரப் பாராட்டினார். 'கல்கியோடு நெருங்கிய தொடர்பு கொண்ட ராஜாஜி ஒரு வசிய சக்தி வாய்ந்த கதாசிரியர். தமக்கே உரிய அவரது தூய பாணி இலக்கிய அன்பர்களை யெல்லாம் கொள்ளை கொண்டிருக்கிறது' என்றார். ஜனநாயக முறையில் ஒரு நாட்டைச் சக்தி வாய்ந்ததாக அமைக்கும் பணியில் பத்திரிகைகளுக்கு உள்ள பெரும் பொறுப்பை எடுத்துக் கூறி, இத்துறையில் கல்கியின் பணியைப் பாராட்டினார்.

அடுத்து வெள்ளி விழாவின் மையமான வைபவம் நிகழ்ந்தது. தலைவர் ராஜாஜி தமது பொற் கரத்தால் வெள்ளி விழா நாவல் போட்டியில் பத்தாயிரம் ரூபாய் பரிசினைப் பெற்ற திரு உமாசந்திரன், ஏழாயிரத்தைந்நூறு ரூபாய் பரிசு பெற்ற திரு ர. சு. நல்லபெருமாள், ஐயாயிரம் ரூபாய் பரிசு பெற்ற திரு பி. வி. ஆர். ஆகியோருக்கும் சிறுகதைப் போட்டியில் ஆயிரம் ரூபாய் பரிசு பெற்ற ஸ்ரீமதி என். பத்மா, ஐந்நூறு ரூபாய் பரிசு பெற்ற திரு கு. வேங்கடரமணி, மற்றும் நூறு ரூபாய் பரிசுகள் பத்தினைப்பெற்ற 'சொல்லேர் உழவர்'களுக்கும் பரிசுத் தொகையை வழங்கி ஆசீர்வதித்தார். 25 ஆண்டு நிறைவை ஒட்டி 25,000 ரூபாய் பரிசு வைத்த கல்கிக்கும், இப்பரிசுகளைப் பெற்ற திறமைசாலிகளுக்கும் சபையோர் தங்களது பாராட்டுதலை இடைவிடாத மகிழ்ச்சியாரவாரத்தின் மூலம் தெரிவித்துக் கொண்டனர்.

தமிழவேள் பி. டி. ராஜன் அவர்கள் கல்கி வெள்ளி விழா மலரினை வெளியிட்டார். சங்கம் வளர்த்த மதுரையம்பதியிலிருந்து வந்த அவர் கல்கி வளர்க்கும் தமிழையும், அரசியலறிவையும் வாயாரப் பாராட்டி ஆசி கூறினார்.

பிரதம நீதிபதி திரு மா. அனந்தநாராயணன் அவர்கள் 'தமிழ் நாவல் இலக்கியத்தின் முன்னோடிகளில் ஒருவரான மாதவையாவின் புதல்வர் என்கிற முறையிலும், அவரது சஞ்சிகையை மேற்பார்த்தவன் என்கிற முறையிலும் இவ்விழாவில் கலந்துகொள்ள எனக்கு ஒரு விசேஷ உரிமை உள்ளது' என்று தமது பேச்சைத் தொடங்கினார். கல்கி பெற்றுள்ள பொதுமக்களின் பேராதரவைக் குறிப்பிட்ட அவர் தமது நீதித் துறை வாழ்க்கையிலிருந்து ஒரு சுவாரஸ்யமான தகவலைக் கூறினார். மாட்டுப் பெண்ணைக் கொடுமைப்படுத்தியதாகக் கூண்டிலேற்றப்பட்ட ஒரு மாது, 'நீதிபதியவர்களே! எனக்கு மருமகளைக் கொடுமைப்படுத்தப் பொழுதே இல்லையே! 'கல்கி', 'ஆனந்த விகடன்' முதலிய பத்திரிகைகளைப் படிப்பது போக எனக்கு வேறெதற்குமே அவகாசம் கிடையாதே' என்றாளாம்!

திரு கி. வா. ஜகந்நாதன் அவர்கள் தமக்கே உரிய சொல்லோட்டத்துடன் கல்கிக்கு வாழ்த்துக் கூறி, விஷயதானம் செய்பவர்களில் தலைவர் ராஜாஜியை முக்கியமாகக் கொள்ளும் பாக்கியம் கல்கிக்குக் கிடைத்திருப்பதை வெகுவாகப் பாராட்டினார். வியாபார சாமர்த்தியம் பத்திரிகை வளர்ச்சிக்கு எத்துணை அவசியமானது என்பதை விளக்கிவிட்டு, திரு சதாசிவம் அவர்களுக்கு இத்துறையில் உள்ள ஆற்றலைப் பாராட்டினார்.

தர்ம ரக்ஷாமணி திரு கி. பாலசுப்பிரமணிய அய்யரவர்கள் "கல்கிப் பத்திரிகையைப் படித்தே அறியாதவன் நான்" என்று கூறிச் சபையோரைச் சிறிது ஆச்சரியத்தில் ஆழ்த்தி விட்டுப் பிறகு அதற்குக் காரணமும் கூறினார். "வீட்டிலுள்ள அனைவரும் போட்டி போட்டுக்கொண்டு இந்தப் பத்திரிகையைப் படிப்பதால், என் கைக்கு வருமுன் அது ஏடு ஏடாகி விடுகிறது" என்றார். சிரிப்பொலி கொட்டகை உச்சியை எட்டியது.

'தினமணி' துணை ஆசிரியர் திரு ஏ. ஜி. வேங்கடாச்சாரியார் அவர்கள் கல்கி வெகு தைரியமாகப் புரிந்து வரும் அரசியல் பணியைச் சிலாகித்தார்.

'ஹிந்து' துணை ஆசிரியர் திரு வி. கே. நரசிம்மன் அவர்கள் கல்கிப் பத்திரிகை பேராசிரியர் கல்கிக்கு ஒரு தக்க நினைவுச் சின்னமாக இருப்பதாகப் பாராட்டினார்.

திரு 'சித்ரா' எஸ். நாராயணசுவாமி அவர்கள் கல்கிப் பத்திரிகை ஜனநாயக வளர்ச்சிக்காகப் புரிந்து வரும் துணிச்சலான பணியை வெகுவாக மெச்சிப் பேசினார். பத்திரிகை தருமத்தையும், பத்திரிகை சுதந்திரத்தையும் காப்பதில் கல்கிப் பத்திரிகையின் மனோதிடத்தை வாழ்த்தினார்.

ஸ்ரீமதி சௌந்தரா கைலாசம் அவர்கள், "ஒரு பெண்மணி என்ற முறையில் இப்பத்திரிகையின் வளர்ச்சியில் எம். எஸ். அவர்களுக்கு உள்ள பங்குதான் எனக்கு முக்கியமாகத் தோன்றுகிறது. விஞ்ஞான வளர்ச்சி காரணமாய் விண்வெளிப் பயணம் செய்யும் போது, இவற்றை யெல்லாம் படைத்த கடவுளை மறந்துவிடுவது போல், கல்கியின் வளர்ச்சியைப் பற்றிப் பேசியவர்கள் எல்லாம் இதற்குக் காரணமான எம். எஸ்.ஸை மறந்து விட்டாற் போல் தோன்றுகிறது" என்று 'பெண்ணுரிமை'யின் குரலை முழங்கினார். பரிசு பெற்ற நாவல்களைத் தேர்ந்தெடுத்த ஒருவர் என்ற முறையில் திரு உமாசந்திரனின் முதற் பரிசு நாவலை ஓர் அற்புத சிருஷ்டி எனப் பாராட்டினார்.

'ஆனந்த விகடன்' அதிபர் திரு எஸ். எஸ். வாசன் அவர்கள் தமது மனம் திறந்து நிகழ்த்திய உரையின் மூலம் கூடியிருந்தோரைப் பெரிதும் கவர்ந்து விட்டார். "தம்பி வீட்டுத் திருமணத்துக்கு அண்ணன் வந்திருப்பது போல் இங்கு மன நிறைவுடன் வந்திருக்கிறேன். எழுத்துத் துறையில் கல்கி ரா. கிருஷ்ணமூர்த்தி அவர்களும், வியாபாரத் துறையில் சதாசிவம் அவர்களும் 'ஆனந்த விகடனை' பலப்படுத்திய பிறகே இந்தக் 'கல்கி'யைத் தொடங்கினார்கள். விகடனுக்கு இவ்விதம் பெரும் உதவி புரிந்த இருவரையும் எனக்குத் தந்தவர் எங்கள் மூவருக்கும் தந்தையான ராஜாஜி. கல்கிப் பத்திரிகையும், சதாசிவமும், ராஜாஜியும் பல்லாண்டு வாழ வேண்டும்" என்றார் விகடன் அதிபர்.

செம்மங்குடி ஸ்ரீ ஸ்ரீநிவாசய்யர் அவர்கள் இசை வளர்ச்சிக்குக் கல்கி புரிந்துள்ள பணியைப் பெரிதும் புகழ்ந்து பேசினார். எதையும் பெரிய அளவில் சிறப்பாகச் சாதிக்கும் இன்றைய ஆசிரியரின் உதாரத்தையும், ஊழியர்களைத் தமது குடும்ப அங்கத்தினர்களாகவே கருதும் பண்பையும் சிலாகித்தார்.

திரு டி. கே. சண்முகம் அவர்கள் நாடகக் கலையின் முன்னேற்றத்துக்குக் கல்கி செய்துள்ள சேவைகளை நெகிழ்ச்சியோடு தெரிவித்து நன்றி கூறினார்.

திரு அகிலன் அவர்கள் இலக்கியத்தின் தரத்தைக் காப்பதில் கல்கிக்கு உள்ள உறுதிப்பாட்டை விசேஷமாகப் பாராட்டினார்.

திரு மீ. ப. சோமசுந்தரம் (சோமு) அவர்கள் பேசியபின்னர், ''குமுதம்'' ஆசிரியர் திரு எஸ். ஏ. பி. அண்ணாமலை அவர்கள், ''இது ஐந்து வள்ளல்கள் இணைந்த ஸ்தாபனம். கற்பனை வள்ளல் கல்கி, அறிவு வள்ளல் ராஜாஜி, தமிழ் வள்ளல் டி. கே. சி, கொடை வள்ளல் சதாசிவம், இசை வள்ளல் எம். எஸ். ஆக ஐவருடன் தொடர்பு கொண்டது கல்கி'' என்று கூறினார்.

திருவையாறு அண்ணாசுவாமி பாகவதர் அவர்கள், காமகோடி ஆசாரியாள் — ராஜாஜி ஆகிய சத்தியத் திருமூர்த்திகளின் சாந்நித்தியத்தால் கல்கிப் பத்திரிகை அபரிமிதமான சத்தியத்தின் சக்தியைப் பெற்றிருப்பதாகப் போற்றினார்.

ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தரத் தம்பிரான் அவர்கள் கல்கியின் சமயப் பணியை மனமாரப் பாராட்டியதோடு, தருமை மகா சந்நிதானம் மனமுவந்து அனுப்பியிருந்த பொன்னாடையைத் திரு சதாசிவத்துக்குப் போர்த்தினார்.

கல்கி காரியாலயத்தில் பணியாற்றும் அனைவருமாகச் சேர்ந்து தங்களது நன்றியறிதலை அதிபருக்குத் தெரிவிக்கு முகமாகத் திரு சதாசிவத்துக்கும், ஸ்ரீமதி எம். எஸ். ஸுக்கும் பொன்னாடைகளைப் போர்த்தி மகிழ்ந்தனர்.

கல்கி தொடங்கியதிலிருந்து இருபத்தைந்தாண்டுகளாக இப்பத்திரிகையில் நற்பணி புரிந்து வரும் அறுவருக்கும் வெள்ளி விழாக் கொண்டாடப்பட்டது. அதாவது அவர்களுக்குத் திரு சதாசிவம் மலர் மாலை அணிவித்து, வெள்ளிக் குத்துவிளக்குகளை அன்பளிப்பாகத் தந்தார். ஹாஸ்யச் சிறுகதைகளும், சினிமா விமரிசனமும் நிறைய எழுதியுள்ள திரு ஸோமாஸ் அவர்கள், கௌரவமான நகைச்சுவைக்குப் பெயர் எடுத்துள்ள திரு சாமா அவர்கள், கணக்கர் பிரிவிலும் செலாவணிப் பிரிவிலும் நற்பணி புரிந்துள்ள திரு எம். பி. கலியாணசுந்தரம் அவர்கள், சிறந்த உழைப்பாளிகளும் விசுவாசம் மிக்கவர்களுமான அச்சக ஃபோர்மன் திரு டி.எம். ராஜாபாதர் அவர்கள், இயந்திர ஃபோர்மன் திரு மணவாள நாயுடு அவர்கள், 'கம்பாஸிடர்' திரு வரதன் அவர்கள் ஆகிய அறுவர் இந்தப் பெருமையைப் பெற்று மகிழ்ந்தவர்கள். நீண்ட காலமாகக் கல்கிப் பத்திரிகையில் தெய்வ மணம் கமழும் சித்திரங்களைத் தீட்டி வரும் திரு மணியம் அவர்களுக்கு ராஜாஜி வெள்ளிக் குத்து விளக்கொன்றினைப் பரிசாக வழங்கினார்.

அலுவல்கள் பலவற்றுக்கிடையே நேர மேற்படுத்திக்கொண்டு இச்சமயத்தில் விழாவுக்கு வந்த முதன் மந்திரி திரு பக்தவத்சலம் அவர்கள் பத்திரிகைக்குத் தமது நல்வாழ்த்துக்களை அளித்தார். யாருக்கும் காலம் போனதே தெரியாவிடினும் மணி ஒன்பதைத் தாண்டிவிட்டது என்பதில் ராஜாஜியின் கவனம் விழுந்துவிட்டது. எனவே வெகு வெகு சுருக்கமாகத் தமது ஆசி உரையையும் (அதோடு ஸ்தாபனத்தின் சார்பில் நன்றி உரையையும் கூட) கூறிவிட்டார். அவர் எவ்வளவு சுருக்கமாகப் பேசினாலும் ஆசீர்வாத பலனுக்குக் குறைவில்லை.

வெள்ளி விழா அற்புத வைபவமாக நிகழக் காரணமாயிருந்த பேச்சாளர்களுக்கும், பேச்சைக் கேட்டு ரசித்த பேரன்பர்களுக்கும் நமது நன்றி.

எத்தனையோ அலுவல்களையுடைய பல பிரமுகர்கள் கல்கிபால் உள்ள தங்களின் சொந்த ஈடுபாட்டினால் விழாவுக்கு வந்திருந்து மூன்று மணிகளுக்கு மேல் உற்சாகத்துடன் அமர்ந்திருந்து பத்திரிகையைக் கௌரவித்ததற்கு மெத்த நன்றி.

இதை ஓர் எழுத்தாளர் திருவிழாவாகச் செய்த பேனா மன்னர்களுக்குப் பிரத்தியேகமாக நன்றி.

பல வெளியூர்களிலிருந்து ஆர்வத்தோடு வந்திருந்து விழாவில் கலந்து கொண்ட கல்கி ஏஜெண்டுகளுக்கெல்லாம் நெஞ்சம் நெகிழ நன்றி கூறுகிறோம்.


'கல்கி'யின் வளர்ச்சிக்குக் காரணமான பொது மக்கள் இவ் விழாவில் காட்டிய ஈடுபாட்டுக்கு எவ்வளவு நன்றி சொன்னாலும் தகும்.


பல்லாண்டு கடந்தானுக்கும் பல்லாண்டு கூற ஆழ்வார் முற்பட்டது போல், நன்றி கடந்த நலமாகிய ஸ்ரீ காஞ்சி ஜகத்குரு அவர்களுக்கும் நன்றி கூறித் தண்டனிடுகிறோம். இச்சந்தர்ப்பத்தில் அவர்களுக்கு நன்றி கூற ஒரு விசேஷ காரணமுண்டு. ஏனெனில் கல்கிப் பூங்காவில் நடைபெற்ற விழாவினை ஸ்ரீ காளஹஸ்தியில் அவர்கள் நிறைவுறச் செய்து அருளினார்கள். வெள்ளி விழாவை முடித்த கையோடு மறுநாள் கல்கி அதிபரும், காரியாலயத்துடன் சம்பந்தப்பட்ட மற்ற சிலரும் ஜகத்குருவை வணங்கிவர ஸ்ரீ காளஹஸ்திக்குச் சென்றனர். மடத்துச் சிப்பந்திகள் வழக்கம் போல் விபூதி, குங்கும, அட்சதைப் பிரசாதங்கள் எடுத்து வைத்தனர். ஆனால் ஜகத்குருவோ மடத்துக்கு வந்திருந்த அனைவருக்கும் வழக்கமான பிரசாதத்துடன் சந்தனமும், தாம்பூலமும், கற்கண்டும், திராட்சையும் தமது திருக்கரத்தாலேயே தொட்டு வழங்கச் செய்தார்கள். ''வாழையடி வாழையாக, 'கல்கி' அவதாரம் வரையில் இந்தப் பத்திரிகை அமோகமாக நடக்கட்டும்'' என்று ஸ்ரீ சுவாமிகள் பிரசன்னமாகக் கூறி அருளினார்கள். அவர்களது அநுக்கிரக விசேஷத்தால் நாமும் ஏதோ நம்மாலியன்ற சிறு பணியைத் தொடர்ந்து புரிவோம் என்ற நம்பிக்கை வெள்ளி முளைத்தாற் போல் முளைக்கிறது.


கல்கி


வெள்ளி விழா

கோலாகலமான இந்த வைபவத்தின் போது பிரதம விருந்தினர்களான கவர்னர் தம்பதியை கல்கி அதிபர் ஸ்ரீ சதாசிவமும், ஸ்ரீமதி எம். எஸ். சுப்புலக்ஷ்மியும் வரவேற்றனர். ஸ்ரீமான்கள் வாஸன், முசிரி சுப்பிரமணிய அய்யர், பார்த்தசாரதி ஐயங்கார், ஜி. நரசிம்மன், டி. கே. ஷண்முகம்] முதலியவர்களை வரவேற்றார் ஸ்ரீ சதாசிவம்.





















வெள்ளி விழா நாவல் சிறு கதைப் போட்டிகளில் கலந்து கொண்டு வெற்றி பெற்றவர்களுக்கு ராஜாஜி பரிசுகளை வழங்கி ஆசி கூறினர்.

மேலிருந்துகீழாக: நாவல்கள்: ஸ்ரீ உமாசந்திரன் - முதல் பரிசு ரூபாய் பத்தாயிரம் - ''முள்ளும் மலரும்''. ஸ்ரீ ர. சு. நல்ல பெருமாள் - இரண்டாம் பரிசு ரூபாய் ஏழாயிரத்து ஐந்நூறு - ''கல்லுக்குள் ஈரம்''. ஸ்ரீ பி. வி. ராமகிருஷ்ணன் - மூன்றாம் பரிசு ரூ. ஐயாயிரம் ''மணக் கோலம்''.



சிறுகதைகள்: ஸ்ரீமதி என். பத்மா - முதல் பரிசு ரூபாய் ஆயிரம் - ''லலிதா''. ஸ்ரீ கு. வேங்கடரமணி - இரண்டாம் பரிசு ரூபாய் ஐந்நூறு - ''பிரமை''.

ஸ்ரீமதி என். பத்மா, ராஞ்சியிலிருந்தும் ஸ்ரீ நல்லபெருமாள் பாளையங்கோட்டையிலிருந்தும் இன்னும் பல எழுத்தாளர்கள் விழாவுக்கென்றே நெடுந்தூரம் பிரயாணம் செய்தும் வந்திருந்தனர். வேறு பல எழுத்தாள அன்பர்கள் தங்கள் வீட்டில் நடக்கும் ஒரு விசேஷம்போலவே கருதி குடும்பத்துடன் விழாவுக்கு வந்திருந்து மகிழ்வித்தனர்.











"வெள்ளி விழாவில் சொற்பொழி வாளர்களின் எண்ணிக்கை இருபத் தைந்துக்குக் குறையக் கூடாதெனத் திட்டமோ?" என்று வேடிக்கையாகக் குறிப்பிட்டார் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தரத் தம்பிரான். மூன்று மணி நேரத்துக் கும் அதிகமாக நடந்த விழாவில் வாழ்த்துரை வழங்க ஆவலுடன் முன்வந்தனர் பலர். ஸ்ரீமதி டி. கே. பட்டம்மாளும், ஸ்ரீமதி எம். எல். வசந்தகுமாரியும் பிரார்த்தனை கீதங் களைப் பாடினார்கள். வரவேற்புரைக் குப் பின் ஆசிச் செய்திகளைப் படித் தார் ஸ்ரீ சதாசிவம். வெள்ளி விழா மலரை வெளியிட்ட ஸ்ரீ பி. டி. ராஜன் அதனை கவர்னருக்கு அளித்தார். ஸ்ரீமான்கள் பக்தவத்சலம், கி. வா. ஜகந்நாதன், ஸ்ரீஹரி, வாசன், சோமு, அகிலன், சித்ரா நாராயண சாமி, கே. பாலசுப்பிரமணிய அய்யர், ஏ. ஜி. வேங்கடாச்சாரி, செம்மங்குடி ஸ்ரீநிவாச அய்யர், வி. கே. நரசிம் மன், எஸ். ஏ. பி. அண்ணாமலை, ஸ்ரீமதி சௌந்தரா கைலாசம் முத லிய பலர் பேசிய பின்னர் தருமபுர மகா சந்நிதானம் சார்பில் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தரத் தம்பிரான் கல்கி அதிபர் ஸ்ரீ சதாசிவத்துக்குப் பொன் னாடை போர்த்திக் கௌரவித்தார்.

விழாவில் ஏராளமான பெண்மணி கள் பங்கு பற்றினர். மிகப் பெரிய விசாலமான பந்தல் நிரம்பிவிடப் பலர் நின்றுகொண்டே சொற் பொழிவுகளைக் கேட்டனர். ஓவியர் மணிஅத்துக்கு வெள்ளிக் குத்து விளக்குப் பரிசளித்தார் ராஜாஜி. விழாவுக்குப் பின் தவைர்களுக்கு விருந்துபசாரம் நடைபெற்றது. கல்கி காரியாலயத்தில் இருபத்தைந்து ஆண்டுகள் சேவை செய்தவர்கள் கௌரவிக்கப்பட்டனர்.













13

ஹர ஹர சங்கர



ரா. கணபதி



அத்தியாயம் 1

மகாலக்ஷ்மி, வருகவே!

மறுவிலா மரபின் வந்து
மாறிலா ஒழுக்கம் பூண்டார்;
அறுதொழில் ஆட்சியாலே
அருங்கலி நீக்கி உள்ளார்;
உறுவது நீற்றின் செல்வம்
எனக்கொளும் உள்ளம் மிக்கார்;
பெறுவது சிவன்பால் அன்பாம்
பேறெனப் பெருகி வாழ்வார்.

ஞானமே முதலா நான்கும்
நவையறத் தெரிந்து மிக்கார்;
தானமும் தவமும் வல்லார்;
தகுதியின் பகுதி சார்ந்தார்;
ஊனமேல் ஒன்றும் இல்லார்;
உலகெலாம் புகழ்ந்து போற்றும்
மானமும் பொறையும் தாங்கி
மனையறம் புரிந்து வாழ்வார்.

பெரிய புராணம் :
(தில்லைவாழந்தணர் சருக்கம்)

ஆதியும் அந்தமும் இல்லாத பொருளை எழுதத்

தொடங்கும்போது திரு அண்ணாமலை க்ஷேத்திரத்தை நினைப்பது மிகப் பொருத்தம்.

ஆதியும் அந்தமுமில்லா ஈசனின் அடிமுடியைப் பிரமனும் திருமாலும் திரு அண்ணாமலையில் தேடிய வரலாற்றை யாவரும் அறிவோம். ஆனால் அது முடிந்து போன கதை அல்ல. கலைவாணியின் காந்தனாகிய பிரமன் கல்வியினால் கடவுளைக் காண முயல்பவனுக்கு ஓர் உருவம். தனத்தினால் தெய்வ தரிசனம் பெற முயல்பவனுக்கு இக்கதையில் திருமகள் நாயகன் ஓர் உருவம். கல்வியினாலும் செல்வத்தினாலும் அண்ட முடியாத அண்ணாமலையாகவே அன்று போல் இன்றும் இருக்கிறான் ஆண்டவன். அடி முடி தேடுவது இன்னமும் நிகழ்ந்து வரும் சம்பவமேயாகும்.

தேடுவது ஒரு சிறந்த காரியம். கலை உலகில் பிரவேசித்தவர்களுக்குத் தேடுவதன் அழகு தெரியும். 'தேடிக் கண்டு கொண்டேன்' என்று அப்பர் பெருமானும் பாடினார். தேடுகிறவர்கள் யாவரும் பெரியவர்கள். தங்களை விடப் பெரியதாக ஒன்று இருக்கிறது என்ற எளிமை உணர்ச்சி உண்டானால்தானே அந்தப் பெரிய வஸ்துவைத் தேடத் தோன்றும்? எனவே, அரியும் அயனும் 'தேடியவர்கள்' என்ற முறையிலும் பெரியவர்களாக விளங்குகிறார்கள்.

நித்தமும் தேடிக் கொண்டிருக்கும் இப்பெரியவர்களுக்கு ஏதேனும் உபகாரம் செய்ய வேண்டாமா?

இவ்வாறு ஒருவர் சிந்தித்து உபகாரமும் செய்தாராம். இதை ஒரு சுலோகம் சொல்கிறது:

ஸரோ கபீரம் புரி
  கோபுரம் ச ய:
ஸமுன்னதம் சோணகிரீ
  சிதுர் வ்யதாத்।
அசக்நுவோரங்க்ரி
  சிரோ விலோகிதும்
மகாபதௌ மாதவ
  வேதஸோரிவ॥

பரம்பொருளின் முடியைக் காண்பதற்காக அன்னப் பட்சியாகப் பறந்தவருக்கு என்ன உதவி செய்யலாம்? உயரே போகும்போது தங்குவதற்கு ஓர் இடம் அமைத்துக் கொடுக்கலாம். அடியைக் காண்பதற்காகப் பூமியைத் தோண்டும் வராக வடிவினருக்கு என்ன உதவி செய்யலாம்? அவர் சிரமப்பட்டுப் பூமியை அகழாதபடி சிறிது ஆழம் வரை வெட்டிக் கொடுக்கலாம். இந்த இரு உதவிகளையும் ஒருவர் செய்தார் என்கிறது சுலோகம். அவர் என்ன செய்தார்? திரு வண்ணாமலையில் ஒரு கோபுரமும், திருக்குளமும் அமைத்தார். அதைத்தான் இப்படிச் சமத்காரமாகச் சொல்கிறார் கவி.

இப்படி உபகாரம் செய்தவர் யார்? சுமார் நான்கு நூற்றாண்டுகளுக்கு முன் தஞ்சையிலிருந்து ஆட்சி புரிந்த முதல் நாயக மன்னனாகிய சேவப்பன் என்று சொல்வார்கள். ஆனால் இது முழு உண்மையும் ஆகாது. சேவப்ப நாயக்கனை தருமத் திருப்பணிகள் செய்ய வைத்த அவனது அமைச்சர் ராஜா கோவிந்த தீக்ஷிதரே புகழில் அதிகப் பங்குக்கு உரியவர்.

கோவிந்த தீக்ஷிதர் பூர்வீகத்தில் தமிழ் நாட்டைச் சேர்ந்தவரல்லர். ஆயினும் எதையும் தன்னுடன் சேர்த்துக் கொள்ளும் பண்பு தமிழ் மண்ணுக்கு உண்டல்லவா? அதிலும் எந்நாட்டுப் பெருமைகளையும் தன்னகத்தே கொண்டு, அந்தப் பெருமைகளை மேலும் விருத்தி செய்யும் மகிமை சோழ நாட்டு மண்ணுக்கு விசேஷமாக உண்டு. குடகில் பிறக்கும் காவிரியும் இந்தச் சீமையைத் தொட்ட பின்தானே சகல சௌபாக்கிய வடிவாகத் தரிசனம் தருகிறாள்? அதே போல் கர்நாடகத்தைச் சேர்ந்த பல அந்தணக் குடும்பங்களை வேதம் விளையும் தஞ்சை மண் விரும்பி வரவேற்றது. கன்னடம் தாய் மொழியாயினும் தமிழகத்தைப் பிறந்த வீடாகப் பாவித்து, சூழலோடு இழைந்து பழகிய அத்தகைய மரபினைச் சேர்ந்தவரே கோவிந்த தீக்ஷிதர். வைதிகக் கல்வியும், லௌகிகக் கல்வியும் நிரம்பப் பெற்றவர். அளவற்ற வினைத் திட்பமும் மனோதிடமும் பெற்றவர். மக்கட் குலத்தின் நன்மையை நாளும் கருதியவர்.

சேவப்ப நாயக்கனுடைய தருமப் பணிகளுக்கு மட்டுமின்றி அவன் மன்னனாவதற்குமே காரணமாக இருந்தவர் இந்தக் கோவிந்த தீக்ஷிதர்தான். சேவப்பனுடைய ஜாதகத்தைப் பார்த்தே அவனுக்கு ராஜயோகம் இருப்பதை அறிந்தார் கோவிந்த தீக்ஷிதர். அவனை அரசனாக்கி அபிஷேகமும் செய்து வைத்தார். நல்ல நகராகிய தஞ்சையைச் சுற்றிக் கருட வியூகமான கோட்டை எடுப்பித்து அதனை யாரும் போர் தொடுக்க முடியாத 'அயோத்யா' வாக்கினார். மக்களும் 'மன்னர் பெருக்குத்தான் இருக்கிறார்; மதி மந்திரிதான் ராஜ்யபாரம் நடத்தி நாட்டை நல்வழிப்படுத்து



இருர்' என்று அறிந்திருந்தார்கள். அவரை 'ராஜா கோவிந்த தீக்ஷிதர்' என்று கூறினார்கள். 'ஐயன்' என்று அன்போடும் மதிப்போடும் அழைத்து வந்தார்கள். அண்ணாமலையில் மட்டுமின்றிச் சோழ நாடு முழுவதிலும் சுற்றுப் பிரதேசங்களிலும் ஐயன் பல உத்தமமான பணிகளைச் செய்தார். சோழவள நாட்டுக்குப் பெற்றதாய் அமுதம் புகட்டுவது போல் ஊட்டம் தருகிற காவிரியாற்றின் இரு கரைகளிலும் அநேக இடங்களில் கருங்கல் படித்துறை எடுத்தார். அவற்றை ஒட்டி மண்டபங்கள் எழுப்பினார். ஆலயத் திருப்பணிகளோடு, பல நீர்ப்பாசனக் கால்வாய்களையும் வெட்டித் தந்து மக்களின் இக—பர நலன்களுக்காகச் சேவை புரிந்தார். இன்றும் ஐயன் குளம், ஐயன் வாய்க்கால், ஐயன் தெரு, ஐயன் கடை என்றெல்லாம் தஞ்சைச் சீமையில் பல இடங்களும் நீர் நிலைகளும் வழங்கி வருகின்றன அல்லவா? இவற்றையெல்லாம் வழங்கியவர் ஐயனாகிய ராஜா கோவிந்த தீக்ஷிதர்தாம்.

'ராஜா' என்று கூறப்பட்டாலும் அவர் அதிகார ஆடம்பரத்துக்கு ஆசைப்படவில்லை. அந்தண குல தருமத்தை வழுவாது ஆற்றுவதிலேயே அவர் நிறைவு கண்டார். வேத சாஸ்திரங்களில் பெரும் விற்பன்னரான கோவிந்த தீக்ஷிதர் நாட்டின் நலனுக்காக வேள்விகள் பல புரிந்தார். மந்திரிக்குரிய பொறுப்புக்களையும், வேதியருக்குரிய பொறுப்புக்களையும் ஆற்றுவதோடு அவர் திருப்தியுறவில்லை. ஏகாந்தமாக இறைவனை வழிபட அவருள்ளம் அடிக்கடி விழையும். ராஜ்யபாரத்திடையே ஓய்வை உண்டாக்கிக் கொண்டு, கும்பகோணத்துக்கு அண்மையில் உள்ள பட்டீச்வரம் என்ற பாடல் பெற்ற ஸ்தலத்துக்கு அடிக்கடி செல்வார். ஏகாந்த வழிபாடு செய்வார். ஏகாந்தம் என்பது முற்றிலும் சரியல்லதான். ஏனெனில் அவரது தரும பத்தினியும் உடன் சென்று சிவ தருமத்தை வளர்த்து வந்தாள். ஆயினும் அவள் அவரது ஏகாந்தத்தைக் குலைத்திருக்க முடியாது என்பதைப் பட்டீச்வரத்தில் இன்றும் உள்ள அவளது கம்பீரமும் கனிவும் ஒருங்கே வாய்ந்த திருவுருவச் சிலை உணர்த்துகிறது. சிலையுருவிலுள்ள அந்த உத்தமத் தம்பதியின் படத்தை இந்த அத்தியாயத் தொடக்கத்தில் காண்கிறோம்.

ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடத்தின் இன்றைய இளைய சுவாமிகளாகிய பூஜ்ய ஸ்ரீ ஜயேந்திர சரஸ்வதி அவர்களைத் தவிர, கடந்த சில பட்டங்களாக இப்பீடாதிபதிகள் கர்நாடக ஸ்மார்த்தர்களிலிருந்தே தேர்வு செய்யப்பட்டிருப்பதைக் காண்கிறோம். பல ஆசாரிய சுவாமிகளைத் தந்த சமூகம் என்றால் அதற்கு ஒரு தனி மகிமை இருக்கத்தானே வேண்டும்? இந்த மகிமைக்கு ஊற்றுக்கண்ணாக இருந்தவர் கோவிந்த தீக்ஷிதர்.

கோவிந்த தீக்ஷிதர் மறைந்த பின்னும், அவரது சிறப்பியல்புகள் மறையாத வண்ணம் ஓர் உயர்ந்த பரம்பரை உருவாயிற்று. கர்நாடக இசையில் ஒரு பிரமாண நூலாகக் கருதப்படும் 'சதுர் தண்டிப் பிரகாசிகை' தந்த வேங்கட மகியும், மற்றும் வாஞ்சி கவி, யக்ஞ நாராயண தீக்ஷிதர் முதலிய பெரும் வித்வான்களும் இம்மரபைச் சேர்ந்தவர்களே யாவர். இறை உணர்வு, வைதிகப் பற்று, பொதுமக்கட் சேவை, நிர்வாகத் திறன், ஆராய்ச்சி மனப்பான்மை, இலக்கிய இதயம், கலை ஆற்றல் முதலிய எக்குணங்களை இன்று குருநாதனிடம் காண்கிறோமோ அவையெல்லாம் இந்தப் பரம்பரையின் பண்புகள் என்றே கூறலாம்.

திருவையாற்றுக்குக் கிழக்கே நான்காவது மைல். காவிரியின் வட கரை. ரம்மியமான ஈச்சங்குடி கிராமம். சென்ற நூற்றாண்டில் அங்கு கோவிந்த தீக்ஷிதரது பரம்பரையின் கீழ்க் கன்று ஒன்று தோன்றியது. நாளாவட்டத்தில் அக்கன்று கல்வித் தருவாக வளர்ந்தது. நாகேச்வர சாஸ்திரிகள் என்று அந்தத் தருவுக்குப் பெயர். ரிக் வேதத்தை லக்ஷணத்துடன் அத்யயனம் செய்திருந்த அவர், 'சாஸ்திரிகள்' என்ற அடைமொழிக்கேற்ப சாஸ்திரங்களில் விசேஷமான தேர்ச்சி பெற்றிருந்தார். திருவையாற்றையும், கும்பகோணத்தையும் சேர்ந்த பல குடும்பங்கள் அவரைத் தங்களது ஆசாரியராகவே கருதி ஆச்ரயித்து வந்தன.

கும்பகோணத்தைச் சேர்ந்த கணபதி சாஸ்திரிகளின் குடும்பமும் அவற்றுள் ஒன்று. அந்தக் குடும்பத்தில் ஒரு சுப காரியம். அதற்கு நாகேச்வர சாஸ்திரிகளை அழைத்திருக்கிறார்கள். அவரும் மகிழ்ச்சியோடு வருகிறார். மகிழ்ச்சிக்குக் காரணம் இப்போது நடக்கவிருக்கும் விசேஷம் மட்டுமல்ல. இனி நடக்க வேண்டிய இன்னொரு சுப காரியத்தைப் பற்றியும் திட்டமிடுகிறார் சாஸ்திரிகள்.

'கணபதியின் குடும்பத்தை விட உயர்ந்ததாக வேறு எங்கே கிடைக்கப் போகிறது?' என்று எண்ணி அந்தச் சுபகாரியத்தைச் சிந்திக்கிறார் சாஸ்திரிகள்.

உயர் குடிதான் அது. ஆட்சேபமே இல்லை. கணபதி சாஸ்திரிகளின் முன்னோரும் கன்னட தேசத்தில் ஹொய்சாலப் பகுதியில் வாழ்ந்த ஸ்மார்த்தர்களே. இவர்கள் பயிர் வளரும் பசுமையைக் குறிக்கும் ஹரிதஸ கோத்திரத்தைச் சேர்ந்தவர்கள். இவர்களில் திருவிடைமருதூரில் குடியேறித் தழைத்த குடும்பத்தைச் சேர்ந்தவர் கணபதி சாஸ்திரிகள். இவர்களைச் செம்மங்குடியார் என்று சொல்வதிலிருந்து பூர்வத்தில் சில காலம் செம்மங்குடியில் வசித்தவர்கள் எனக் கருதலாம். 'செம்மல் குடி' என்றும் இன்று நாம் பொருள் கொண்டு அப்பொருத்தத்தை ரசிக்கலாம். கர்நாடக ஸ்மார்த்தரிடையே குடிப்பெயர் இருப்பது போல் ஒவ்வொரு குடிக்கும் அடையாளமாக ஓர் இலை உண்டு. செம்மங்குடியாருக்கு ஆலிலை அடையாளம். ஆல் என்றவுடன் விழுதுகள் தழைத்து வளரும் தன்மையான விஸ்தாரம் மனத்தில் தோன்றும்; ஜகத் குருவான தக்ஷிணாமூர்த்தி தோன்றுவார்; கைமலரால் கால் விரலைப் பற்றி வாய் மலரில் நுழைத்துக் கொள்ளும் குட்டிக் கிருஷ்ணனின் நினைவும் வரும். அவன்கூட ஜகத்குருதான்.

இக்குடும்பத்தின் முந்தையர் சிலர் சரபோஜி மன்னரின் சிறிய தந்தையான அமர

சிம்ம மகாராஜாவின் தர்பாரில் பெரும் பதவிகளை வகித்தவர்கள்.

கணபதி சாஸ்திரிகள் இளமையிலேயே ரிக் வேதத்தையும் சாஸ்திரங்களையும் நன்கு கற்றுத் தேர்ந்தார். சம்ஸ்கிருதத்தில் மட்டு மின்றித் தாய் மொழியான கன்னடம், செவிலித் தாய் மொழியான தமிழ், மற்றும் தெலுங்கு, மகாராஷ்டிரம் இவற்றிலும் புலமை பெற்றிருந்தார். ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடத்தின் அறுபத்தி நாலாவது ஆசாரியர்களான ஸ்ரீ சந்திர சேகரேந்திர சரஸ்வதி ஸ்வாமிகள் இவரை ஸ்ரீமடத்தின் சர்வாதிகாரியாக நியமித்தார். இந்த ஸ்வாமிகளுக்கு அடுத்தாற் போல் பீடாதிபத்தியம் வகித்த ஸ்ரீ மகாதேவேந்திர சரஸ்வதி ஸ்வாமிகள் தமது பூர்வாசிரமத்தில் தமது கணபதி சாஸ்திரிகளின் தமையனார் புதல்வராவார். இவரது ஞான ஆட்சிக் காலத்தின் பெரும் பகுதியிலும் கணபதி சாஸ்திரிகள் மடத்தின் சர்வாதிகாரியாக இருந்து அரும் சேவை செய்தார்.

ஸ்ரீ சந்திர சேகரேந்திர சரஸ்வதி ஸ்வாமிகள் 1840ஆம் ஆண்டில் காஞ்சி காமாக்ஷி ஆலயத்துக்குக் கும்பாபிஷேகம் செய்த போதும், 1846ல் திரு ஆனைக்காவில் அகிலாண்டேஸ்வரிக்குத் தாடங்கப் பிரதிஷ்டை செய்தபோதும் கணபதி சாஸ்திரிகள் தளராமல் உழைத்து அவற்றைப் பெரு விழாவாக்கினார். மடத்து நலனில் அவருக்கிருந்த அந்தரங்கமான ஈடுபாடு ஒப்புயர்வற்றது. நல்ல முறையில் தருமப் பிரசாரம் புரிய வேண்டுமாயின் மடத்துக்குப் போதுமான சொத்துக்கள் இருக்க வேண்டும் எனக் கருதி, கண்ணும் கருத்துமாகப் பல சொத்துக்களைத் தேடி வைத்தவர் கணபதி சாஸ்திரிகள்.

அதுவோ மடத்தின் பல சொத்துக்கள் கைமாறிப் போயிருந்த காலம். காரணம் இதுதான்: நவாபுகள் ஆட்சிக் காலத்தில், ஆங்கிலேயர் இங்கு பிரவேசித்த பின், வடார்க்காடு செங்கல்பட்டு மாவட்டங்களில் பல சண்டைசச்சரவுகள் ஏற்பட்டுக்கொண்டேயிருந்தன. இது காரணமாக, காஞ்சீபுரத்தில் இருந்த ஸ்ரீமடம் கும்பகோணத்துக்கு இடம் பெயர்ந்தது. அப்போது, பல நூற்றாண்டுகளாகப் பழைய மன்னர்களால் தான சாஸனம் செய்யப் பட்டிருந்த கிராமங்களில் பல மடத்து நிர்வாகத்திலிருந்து பிரிந்து போய்விட்டன. அக்காலத்திலிருந்த அரசாங்கம் ஓரளவு மோஹினித் தொகை அளித்தது. சிஷ்ய கோடிகளின் ஆதரவும் இருந்தது. இவற்றைக் கொண்டு மடம் செயலாற்றி வந்தது. எனினும் மடத்துக்கு எனச் சொந்தமாகப் பூமி வாங்கி வைக்க வேண்டும் என்று கணபதி சாஸ்திரிகள் பேரவாக் கொண்டிருந்தார். இந்த அவா



"எதற்கு என் கழுத்தில் மாலை போடுகிறாய்?"

"எங்க வீட்டில் ஆறு மாதமாகத் தங்கியிருந்து விட்டுக் கிளம்பியிருக்கிறீர்களே! பிரிவு உபசார விழா நடத்த வேண்டாமா?"

நிறைவு காணக் கூடிய ஒரு வாய்ப்பும் கிடைத்தது.

1850-ம் ஆண்டில் ஸ்ரீ சந்திர சேகரேந்திர சரஸ்வதி ஸ்வாமிகள் தஞ்சைக்கு விஜயம் செய்தார். அப்போது அங்கு அரசாண்ட மராட்டி மன்னரான சிவாஜி மகாராஜா ஸ்வாமிகளுக்கு ஐயாயிரம் வராகன்களைப் பொழிந்து கனகாபிஷேகம் செய்து மகிழ்ந்தான். இந்தத் தங்கத்தைக் கொண்டு மடத்துக்கு நிலம் வாங்கக் கருதினார் கணபதி சாஸ்திரிகள்.

ஸ்வாமிகள் சொத்து விவகாரத்தில் ஈடுபாடு காட்டவில்லை. "பொருள் சேர்ந்தால் ஆபத்துத்தான்! அதை ஜாக்கிரதை செய்வதிலேயே கவனம் போகும். இது ஆன்ம விசாரத்துக்கு இடையூறு" என்றார் அவர்.

சந்நியாச தருமம் எப்படிப் பேச வேண்டுமோ அப்படிப் பேசினார் ஸ்வாமிகள்.

நிர்வாக தருமம் எப்படிப் பேச வேண்டுமோ அப்படி மறுமொழி பேசினார் கணபதி சாஸ்திரிகள்.

தனிப்பட்ட சந்நியாசிகளுக்கும், ஆசாரிய பீடத்திலிருந்து உலகை உத்தாரணம் செய்யும் பொறுப்பேற்ற மடாதிபதிகளுக்கும் உள்ளதொரு மாறுபாட்டை மரியாதையுடன் சுட்டிக் காட்டினார் கணபதி சாஸ்திரிகள். "மதம் செழிக்க வேண்டுமானால் மடம் செழிக்க வேண்டும். ஆன்ம பலம் இருப்பதோடு செல்வ பலமும் கூடினால் மடம் சக்தி வாய்ந்த முறையில் இயங்கி மக்களுக்கு நல் வழி காட்டுவது எளிதாகும்" என்றார்.

"இந்த மொகராக்களை யெல்லாம் இப்போதே இங்கு கூடியுள்ள வித்வான்களுக்குப் பகிர்ந்து கொடுக்க எண்ணினேன். வேண்டாம் என்கிறாய்" என்றார் ஸ்வாமிகள்.

அதுவே நிலமாக ஆகிவிட்டால் ஒரு முறை கொடுப்பதோடு தீர்ந்து விடாமல் ஒவ்வொரு அறுவடைக் காலத்திலும் பயிர் தந்து பக்தர்களுக்கு உதவுமல்லவா? இதைச் சர்வாதிகாரி எடுத்துக் காட்டினார்.

ஒருவாறு ஸ்வாமிகளின் அநுமதியும் கிடைத்தது.

மிகுந்த உற்சாகத்தோடு புரவி மீது அமர்ந்து வரும் வேதியரைக் கண்டு கபிஸ்தலம் கிராமத்தைச் சேர்ந்த மக்களுக்கு வியப்பாக இருந்தது.

பெருநிலக் கிழாரான மூப்பனாரின் வீட்டு வாசலில் குதிரை நின்றது. கீழே குதித்தார் கணபதி சாஸ்திரிகள்.

"ஆகா. பெரியவங்க வரணும். என்ன இப்படிச் சொல்லாமல் கொள்ளாமல்?" என்று முகமலர்ந்து முகமன் கூறி வரவேற்றார் மூப்பனார்.

இந்த அழுக்கடைந்து காணும் பில்டர் இன்சர்டுதான் உங்களுக்கு அதிக லாபம் கொடுக்கும்.



உபயோகப்படுத்தப்பட்ட உங்கள் மைக்கோ பில்டர் இன்சர்ட்டை சற்று கவனியுங்கள் அது அழுக்கடைந்து இருக்குமே! ஆமாம், அது அப்படித்தான் அழுக்கடைந்து இருக்க வேண்டும். டீசல் எண்ணெயிலுள்ள எல்லா அழுக்குகளையும், அது தானே தன்னுள் தேக்கி வைத்துக்கொண்டு சுத்தமான எண்ணெயை ப்யூயல் இன்ஜெக்ஷன் கருவிக்கு அனுப்பி, கருவியை நன்முறையில் பாதுகாக்கின்றது. உயர்ந்த அளவு வடிகட்டும் திறமையுள்ள அசல் மைக்கோ பில்டர் இன்சர்டுகளை உபயோகித்து, அதன் பலனாக, திடீர் பழுது அடிக்கடி கருவியை சுத்தம் செய்தல் போன்ற சிலவுகளைக் குறைத்துக் கொள்ளுங்கள். எல்லா டீசல் இன்ஜின் உற்பத்தியாளர்களும், மைக்கோ பில்டர்களையே, இன்ஜினின் சொந்த பாகத்தில் ஒன்றாக உபயோகப் படுத்துகிறார்கள். நீங்களும் எப்பொழுதும் அசல் மைக்கோ பில்டர் இன்சர்டுகளை உபயோகப்படுத்த இதுவே ஓர் நல்ல உதாரணம்.

மைகோ சிறப்பான ரஸ்தாப்போக்குவரத்திற்கு பணிசெய்கின்றது

MICO

LICENCE **BOSCH**

மோட்டார் இன்டஸ்ட்ரீஸ் கம்பெனி லிமிடெட், பெங்களூர்

விற்பனை நிலையங்கள் உ-79, டாக்டர் அன்னி பெஸண்ட் ரோடு, ஒர்லி, பம்பாய்-18 (W.B.) 91, A, பார்க் ஸ்ட்ரீட் கல்கத்தா-16, 1/155, மவுண்ட் ரோடு, சென்னை-2, கேசியாபாத் இன்ஜினிரிங் கம்பெனி, 29/A-1, அஸப் அலி ரோடு, புது தில்லி-1.

ASP/MICO/102

"உங்களிடம் மட்டுமல்ல. மடத்திலேயே ஸ்வாமிகள் தவிர யாரிடமும் சொல்லாமல் தான் புறப்பட்டு வந்திருக்கிறேன். முக்கியமான காரியம்" என்று கூறிய கணபதி சாஸ்திரிகள் வந்த விஷயத்தை விளக்கினார்.

மடத்துக்கு நிலம் வாங்கிக் கொடுப்பதில் தமது உதவி கோரப்படுவது பாக்கியம் எனக் கருதினார் மூப்பனார். அணைக்குடிக் கிராமத்தைச் சேர்ந்த நிலச்சுவான்தார் ஒருவர் நிலங்களில் சிலவற்றை விற்க உத்தேசித்திருந்ததாக மூப்பனார் அறிந்திருந்தார். 'அணைக்குடிப் பிள்ளை' என்று அழைக்கப்படும் அவரிடம் கணபதி சாஸ்திரிகளைத் தகுந்த பந்தோபஸ்துடன் அனுப்பி வைத்தார். ஆர்வத்தில் ஐயாயிரம் வராகன்களைத் தனி மனிதராக எடுத்து வந்தவருக்குப் பந்தோபஸ்து வேண்டும்தானே?

அணைக்குடிப் பிள்ளையிடம் பட்டுக் கத்திரித்தாற் போல் பேசினார் கணபதி சாஸ்திரிகள். மடத்துக்குக் கௌரவம் தரும் முறையில், பிள்ளைக்கும் கௌரவம் தரும் முறையில் விஷயத்தைச் சொன்னார். "இதோ ஐயாயிரம் வராகன். இதற்கு ஈடாக எவ்வளவு நிலம் சாஸனம் செய்ய முடியுமோ அவ்வளவு செய்துவிடுங்கள்" என்று கூறிவிட்டு, வந்த வேகத்திலேயே அங்கிருந்து போய்விட்டார்.

மடத்திடம் அவருக்குள்ள ஈடுபாடு, தம்மிடம் அவர் காட்டிய நம்பிக்கை, இவ்விரண்டிலும் பிரதிபலிக்கும் அவரது தூய்மை இவற்றை எண்ணிப் பெருமிதம் அடைந்தார் அணைக்குடிப் பிள்ளை. நிலச் சொத்துக்களை மாற்றுவதில் உள்ள பூர்வாங்கங்களைச் செப்பம் செய்து கொண்டு ஒருசில மாதங்களிலேயே கருப்பூர் கிராமத்தில் தமக்குச் சொந்தமாக இருந்த நாற்பது வேலி நிலத்தை ஸ்ரீமடத்துக்கு சாஸனம் செய்தார்.

சொல்லாமல் கொள்ளாமல் தங்கப் பையுடன் சென்று, வெறுங் கையுடன் திரும்பிய கணபதி சாஸ்திரிகள் எப்பேர்ப்பட்ட தங்கமான காரியத்தைச் செய்திருக்கிறார் என்பதை மடத்தினர் அப்போதுதான் அறிந்து மகிழ்ந்தார்கள்.

மடத்துக்கு நல்ல வருமானம் தரும் நிலச் சொத்துக்களில் இன்றும் கருப்பூர் கிராமத்தை முக்கியமாகக் குறிப்பிட வேண்டும். கணபதி சாஸ்திரிகள் மடத்திடம் பூண்ட தொழும்பும் மகசூல் தந்து கொண்டேதான் இருக்கிறது. இந்த மடத்துக்காக உடல் பொருள் ஆவியைத் தருவதென ஒரு வம்சாவளி முறியே ஏற்படுத்தியிருப்பார் போலும்!

ஃ ஃ ஃ

கணபதி சாஸ்திரிகளுக்கு மூன்று குமாரர்கள். மூத்தவர் சுப்பிரமணியம். இதோ, ஈச்சங்குடி நாகேசுவர சாஸ்திரிகள் கும்பகோணத்திலுள்ள இவர்களுடைய வீடு தேடி வருகின்ற இச்சமயத்தில் சுப்பிரமணியத்துக்கு வயசு பதினெட்டு. மெட்ரிகுலேஷன் பரீட்சையில் கும்பகோணம் அரசினர் பள்ளியிலேயே முதல்வராக அவர் தேறியிருந்த சமயம். நல்ல புத்திமான். சங்கீதம் முதலிய கலைகளில் நல்ல ஞானம்; சிறப்பான ரசிகத் தன்மை. இதெல்லாம் சேர்ந்துதான் நாகேசுவர சாஸ்திரிகளைச் சிந்திக்க வைத்தது. சுப்பிரமணியத்தைப் பற்றிய சிந்தனையை ஒட்டி, ஈச்சங்குடியில் தமது அகத்தில் அடக்கமாக வேலை செய்து கொண்டும், தோத்திரம் பாடிக் கொண்டும் வளருகின்ற ஏழு வயசுப் பெண் குழந்தையைப் பற்றி அவரது எண்ணம் படர்ந்தது.

"கணபதி, உனக்கு ஒரு தானம் செய்ய ஆசைப்படுகிறேன். பெற்றுக் கொள்வாயா?" என்று கேட்டார் நாகேசுவர சாஸ்திரிகள்.

கணபதி சாஸ்திரிகளுக்கு ஆச்சரியமாக இருந்தது. 'ஆசாரிய ஸ்தானத்திலுள்ள இவர் நமக்கு தானம் செய்வதாவது?' என்று வியந்தார்.

"தானமா? எனக்கா?"

"ஆமாம். கன்னிகாதானத்தைத்தான் சொல்கிறேன். நம் மகாலக்ஷ்மியை சுப்ரமணியனுக்குப் பண்ணிக் கொள்ளுகிறாயா?" என்று கேட்டார் நாகேசுவர சாஸ்திரிகள்.

கணபதி சாஸ்திரிகளின் செவியில் அமுதம் பாய்ந்தாற் போலிருந்தது. ஆசாரியார் தரும் பரிசு! அதுவும் மகாலக்ஷ்மி! வலிய வரும் மகாலக்ஷ்மியை வேண்டாம் என்று யாரேனும் சொல்வார்களா?

'சுபஸ்ய சீக்கிரம்' என்பார்கள். நாமும் அதிகம் வளர்த்துவானேன்? ஈச்சங்குடியார் குடும்பத்திலிருந்து செம்மங்குடியார் குடும்பத்துக்குள் அடியெடுத்து வைத்தாள் மகாலக்ஷ்மி. இல்லை வாழ் அந்தணரைப் பற்றிச் சேக்கிழார் பெருமான் கூறிய பெருமைகளெல்லாம் பொதிந்த இரு பெரும் குடிகள் அரசும் வேம்பும் போல் இழைந்தன!

அத்தியாயம் 2

சின்னஞ்சிறு கிளியே, செல்வக் களஞ்சியமே!

இங்கேயே அமிருதத்தைப் பெறவேண்டுமானால் நாம் முதலில் குழந்தையாக வேண்டும். குழந்தையே தெய்வமாகிவிட வேண்டும்.

— ஸ்ரீ காஞ்சி காமகோடி சங்கராசாரிய ஸ்வாமிகள்

இது 1894ம் ஆண்டு. நாம் மணமகனைச் சந்தித்த சுப்பிரமணியம் இப்போது முப்பத்தொன்பது வயது நிறைந்த சுப்பிரமணிய சாஸ்திரிகளாக விளங்குகிறார். கும்பகோணத்தில் சில காலம் பள்ளி ஆசிரியராக இருந்து, அதற்குப் பின் காவலாகுடியில் ஒரு கனவான் வீட்டில் கல்விப் பயிற்சி அளித்து, அதையும் விட்டுச் சர்க்காரின் கல்வி இலாகாவில் ஆசிரியராகப் புகுந்து, சூபர்வைசராக உயர்ந்து, தென்னார்க்காடு மாவட்டத்தில்

பல இடங்களில் பணியாற்றி இப்போது விழுப்புரத்தில் உத்தியோகம் வகிக்கிறார். அவரைப் பொறுத்த மட்டில் உத்தியோகம் இரண்டாம் பட்சம். சங்கீதம்தான் அவருக்கு உயிராக இருந்து வருகிறது. மகா வைத்தியநாத அய்யரவர்களின் இசையைத் தவிர வேறு எதையும் கேட்க மறுக்கிறது அவரது செவி. தாமே அந்தப் பாணியில் குழைந்து கொண்டிருக்கிறார். தெலுங்கில் பாண்டித்தியம் பெற்றிருந்த இவருக்குத் தியாகராஜ கிருதிகளில் ருசி அதிகம். சுவைத்துக் கொண்டேயிருக்கிறார்.

நடைமுறைக்கு எது ஒவ்வும், எது ஒவ்வாது என்பதில் சுப்பிரமணியருக்கு நல்ல கண்ணோட்டமுண்டு. அவரை மிகவும் கண்டிப்பான ஆசாரசீலர் என்று கூறிவிட முடியாது; அதே போதில் ஆசாரமீனர் என்றும் சொல்ல முடியாது. நித்திய கர்மானுஷ்டானம், உத்தியோகம், சங்கீதம் என்றிப்படி சந்துஷ்டியுடனே வாழ்க்கை நடத்தி வருகிறார் அவர்.

உள்ளே, அன்று ஏழு வயதுச் சிறுமியாக இருந்த மகாலக்ஷ்மி இருபத்தெட்டுப் பிராயத்து ஸ்திரீயாக கிருக தர்மங்களை அனுஷ்டிக்கிறாள். அன்றைய அடக்கம் இன்றும் மாறவில்லை. இருந்த இடம் தெரியாமலே பதியையும், குழந்தையையும் பேணுகிறாள். ஆம், தாத்தாவின் பெயரைச் சூட்டிக் கொண்டு கணபதி என்று அவளுக்கு ஒரு பிள்ளையும் இருக்கிறான். இன்னொரு மகவை இப்போது எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறாள். சச்சங்குடியில் பாலியாகச் சொன்னது போலவே இன்றும் சம்ஸ்கிருத சுலோகங்களும், தமிழ்த் துதிகளும், கன்னடப் பாடல்களும் சொல்லி இறைவனை வழிபட்டு வருகிறாள். சீலமோடு தவ விரதம் யாவும் அனுஷ்டித்து வருகிறாள். இயல்பான அடக்கத்தோடு அனுஷ்டான பலனும் கூடி அவளது மனத்தைக் கனிய வைத்திருக்கிறது. ஒருபோதும் ததும்பாமல் நிறைகுடமாக அமைதியுடன் காலம் கழிக்கிறாள். துக்கம் வந்தால் மனம் தொடிப்பதில்லை; இன்பம் வந்தால் பூரித்து விடுவதுமில்லை.

கணவனிடம் பண்; மனைவியிடம் பண்பு. உத்தமமானதொரு முத்துத் தோன்ற தகுதி வாய்ந்த சிப்பிதான்.

முத்து உதிப்பதற்குத் தக்க உத்தமமான காலமும் வாய்க்கிறது!

ஜய வருடம், வைகாசி மாதம், கிருஷ்ண பட்ச பிரதமை, அநுராதா நட்சத்திரம் கூடிய சுபதினம். ஆங்கிலத் தேதிப்படி 20-5-1894. அன்று ஞாயிற்றுக்கிழமை நண்பகல் ஒரு மணி பதினாறு நிமிஷத்துக்கு மகாலக்ஷ்மியின் மணி வயிறு மணிப் புதல்வனை ஈன்றெடுத்தது.

பிள்ளை பிறந்த தினத்தில் பல விசேஷங்களைக் காண்கிறோம். முக்கியமாகக் குறிப்பிட வேண்டியது இது ஸ்ரீராமநவமிக்கும், ஸ்ரீ கிருஷ்ண ஜயந்திக்கும் சரியாக மையத்தில் அமைந்திருப்பதே. சுக்ல பட்ச நவமிக்கும் கிருஷ்ண பட்ச அஷ்டமிக்கும் நடு மத்தியில் கிருஷ்ண பிரதமை அமைந்திருப்பது மட்டுமல்ல. நாட்கணக்கிலேயே ராம நவமிக்கும் ஜன்மாஷ்டமிக்கும் மையத்தில் இத்தினம் திகழ்வதைப் பஞ்சாங்கத்தில் காணலாம். பிறந்த வருஷத்தின் பெயர் 'ஜய'; வெற்றியைக் குறிக்கிறது. வைகாசி மாதத்தின் பெருமையைச் சொல்லப் புகுந்தால் அதற்கு ஈடு இணை இல்லை. ''உருத் தெரியாமல் வந்து உலகையெல்லாம் மாற்றும் வசந்த காலம் போலவே மகான்கள் உலகில் சஞ்சரிக்கின்றனர்'' என்று ஆதி சங்கரரே பாடியுள்ள பருவம் அது. பருவங்களின் மன்னனான வசந்தத்தின் இரு கண்களில் ஒன்று வைகாசி. அதற்கு 'மாதவ' என்றும் ஒரு பெயர். மாதவத்தோரான ஆதிசங்கரரும், ராமானுஜாசாரியரும், நம்மாழ்வாரும், புத்தரும் தோன்றிய இம்மாதம் விசாகப் பெருமான் என்றே பெயர் கொண்ட முருகனுடைய ஞான தீபத்துக்கு உகந்ததாகும். விசாகம் என்றால் கொடி எனலாம். சாகை — கிளை — இல்லாதது விசாகம். படர்ந்து கொண்டேயிருக்கும் கருணை யென்னும் கற்பகக் கொடி விசாகம்.

விசாகத்தை ராதா என்பார்கள். குழந்தை தோன்றிய நட்சத்திரம் விசாகத்தை அநுசரிக்கும் அநுராதா. ராதாவை அநுசரிப்பது மோகனகிருஷ்ணன். ராதா சுபிட்சத்தையும், வெற்றியையும் குறிப்பிடும். வெற்றி வருஷத்தில், வெற்றியை அநுசரிக்கும் நட்சத்திரத்தில் இந்த ஜயந்தி நிகழ்ந்திருக்கிறது.

அநுராதாவின் நட்சத்திர தேவதையான ஆதித்தனின் ஒளி நமக்கு உச்சத்தில் கிடைக்கும் மாதத்தில், அவனுக்குகந்த ஞாயிற்றுக் கிழமையில், அம்பிகையை சூரிய மண்டலத்தில் உபாசிக்க வேண்டிய முதல் தினமாகிய கிருஷ்ண பிரதமையில், நல்ல பகல் வேளையில் ஜனனம் — இதை நினைத்தாலே வெட்ட வெளிச்சமான ஒரு தூய வாழ்க்கை பிறந்து விட்டது போல் தோன்றுகிறது. (தொடரும்)

நாவலுக்குப் பெயர் வைப்பது எப்படி?



சர் ஜேம்ஸ் பாரி என்ற ஓர் எழுத்தாளர் இருந்தார். ஆரம்ப எழுத்தாளர்கள் பலபேர் அவரிடம் வந்து தொந்தரவு கொடுப்பது வழக்கம். அப்படி ஒருத்தர் 1500 பக்கங்கள் கொண்ட ஒரு நாவலை அவரிடம் கொடுத்து, ''இதற்கு ஒரு பொருத்தமான தலைப்புச் சொல்லுங்கள்'' என்று கேட்டார். ஜேம்ஸ் பாரி அதைப் பிரித்துக்கூடப் பார்க்காமல் ''இந்த நாவலில் தாரை, தப்பட்டை ஏதேனும் வருகிறதா?'' என்று வினவினார். எழுத்தாளர் திகைப்புடன், ''இல்லை'' என்றார் எழுத்தாளர். ''பின்னே என்ன?' தாரையுமில்லை, தப்பட்டையுமில்லை' என்று நாவலுக்குப் பெயர் வையுங்கள்'' என்று சொல்லியனுப்பினார் ஜேம்ஸ் பாரி!

— தகவல்: ச. சத்தியமூர்த்தி

அசுத்தமான ரத்தமே சரும வியாதிகளின் காரணம்!





சரும வியாதிகள் அகல—

- சருமத்தைப் பாதுகாத்து, கிருமிகளை ஒழிக்கக்கூடிய
- உடம்பிலுள்ள ரத்தத்தைச் சுத்தப்படுத்தி சருமப் பகுதிகளுக்குப் புத்துயிர்ப்பு அளிக்கக்கூடிய வைத்தியம் தேவை. இதற்காக, டாக்டர் ரிச்லே (Dr. Richelet) என்ற பிரெஞ்சு நிபுணர் மூன்று மருந்துகளைத் தயாரித்திருக்கிறார். குணமளிக்கும் தன்மைக்கு உலகப் புகழ் பெற்ற அவை:

ரிச்லேஸ் பிளட் பியூரி:பையர் (RICHELET'S BLOOD PURIFIER) சொறி சிரங்கு, கட்டிகள், முகப் பருக்கள், படை போன்ற பெரும்பாலான சரும வியாதிகள் அகலச் சிறந்த மருந்து. ரத்தத்தைச் சுத்தி செய்கிறது, விருத்தி செய்கிறது.

கல்லாஸ் ஆயின்ட்மென்ட் (GALLA'S OINTMENT) கொதிக்கும் சீழ் வடியும் சொறி சிரங்குகள், வெட்டுக் காயங்கள், புண்களுக்கு ஏற்ற மருந்து. சக்தி வாய்ந்த கிருமிநாசினி.

ரிச்லேஸ் லாக்ஸட்டிவ் (RICHELET'S LAXATIVE) மலச்சிக்கலை அகற்றுகிறது. ஜீரண சக்தி அதிகரிக்கச் செய்து, ஆகாரம் உடலோடு ஒட்டச்செய்கிறது. அதனால் ரத்தவிருத்தி ஏற்படுகிறது.

ரிச்லேஸ்

பிளட் பியூரி:பையர்

எல்லா மருந்துக் கடைகளிலும், ஸ்டோர்களிலும் கிடைக்கும்.
விவரங்கள் அறிவிக்கும் இலவச அறிவிப்புக்கு (FOLDER) எழுதுங்கள்.
இந்தியாவெங்கும் ஏஜண்டுகள் தேவை. விண்ணப்பிக்கவும்

இந்தியாவில் ஸோல் டிஸ்ட்ரிபியூட்டர்கள்:

மஹாஸ்வரி ஜெனரல் ஸ்டோர்ஸ்,

19/35, பெரிய கடை வீதி, கோயமுத்தூர் - 1.



தியாகராயநகர் அமராவதி கல்யாண நிலையத்தில் சுதந்திரக்கட்சிக் கூட்டம் சிறப்பாக நடைபெற்றது. இந்தக் கூட்டத்தில் மேற்கு மாம்பலம் சுதந்திரக் கட்சி ஊழியர் திரு தேவநாதன் அவர்கள் ராஜாஜியிடம் கட்சி நிதிக்காக ரூ. 1001 பண முடிப்பு வழங்கினார். அரங்கில் ஸ்ரீ எம். ஆர். மஸானி, ஸ்ரீ என். ஜி. ரங்கா, ஸ்ரீ டாண்டேகர் ஆகிய சுதந்திரக் கட்சி பார்லிமெண்ட் உறுப்பினர்கள் அமர்ந்திருக்கிறார்கள்.





மேலே: பாரதிய நாட்டிய அகாடமியின் மாணவர்களாகிய முரளி–ராதாவின் பரதநாட்டிய அரங்கேற்றத்துக்கு ஸ்ரீ மொரார்ஜி தேசாய் வந்திருந்து சிறப்பித்தார்.
மதுரையில் தமிழ்நாடு வாசகர் பேரவையில் நடைபெற்ற கருத்தரங்கு.

கீழே: மதுரையிலுள்ள டி. வி. எஸ். உயர்நிலைப்பள்ளியினர் சிறுவர் சிறுமியருக்கெனப் போக்குவரத்துப் பயிற்சிப் பூங்கா ஒன்றை நிர்மாணித்துள்ளனர்.

புதுதில்லியிலுள்ள தென்னிந்தியப் பள்ளிகள், கோயில்களுக்குத் தேவார இசைத் தட்டுக்களை முதன் மந்திரி பக்தவத்ஸலம் வழங்குகிறார்.







முள்ளும் மலரும்



அத்தியாயம் 2

அவ்வளவு கடுமையாக அன்று கூறினானே ஒழிய வெள்ளாத்தாளுக்கு வேலை வாங்கிக் கொடுத்து அருவிக் கரையில் அவர்களுக்காகக் குடிசையும் போட்டுக் கொடுத்தவன் காளியண்ணன்தானே என்று நினைத்துக் கொண்டபோது வள்ளிக்குச் சிரிப்பு வந்தது. இப்போது கூட வெள்ளாத்தாள் அதை மறக்கவில்லை. வள்ளி எப்போது அவர்கள் குடிசைக்குப் போனாலும் சொல்லுவாள்.

"என்னமோ வள்ளி, இந்த மலைக்கு வந்ததிலேயிருந்து நாங்க திங்கற சோறு நீங்க போட்டதுதான். மொத மொதல்லே நீ உன் கையாலே சோறு போட்டே. அப்புறம் நான் வேலையிலே சேர்ந்து நாலு காசு சம்பாதிக்கிற வரையிலே உங்க அத்தை சோறு போட்டுக் காப்பாத்தினாள். வேலையிலே சேர்ந்தது மட்டும் எப்படி? உங் கண்ணன் சொல்லியிருக்கலேன்னா என்னை ஒரு ஆளா மதிச்சு யாரு வேலையிலே சேர்த்துப்பாங்க?" என்று நன்றியுடன் பேசுவாள் வெள்ளாத்தாள்.

ஒரு சமயம் வெள்ளாத்தாள் காளியண்ணனைப் பற்றிப் புகழ்ந்து பேசிக்கொண் டிருந்தபோது மங்கா அருகில் இருந்தாள். வள்ளியைத் தோளில், இடித்து முகத்தைச் சுளித்துக் கொண்டே கூறினாள். "வள்ளி, எங்கம்மா என்ன வேணும்னாலும் சொல்லிக்கட்டும். ஆனால் எனக்கு உங்கண்ணனைக் கட்டோட பிடிக்கலை. சுத்த முரடு!"

"ஆமாம்.... நீ இருக்கிற லட்சணத்துக்கு மத்தவங்களைப் போய்ச் சொல்றது வேறே வச்சிருக்கா?" என்றாள் தாயார்.

"ஆமாம். நீ பேசுவே. என்னைக் கண்டா அதுக்கு வர ஆத்திரம் எனக்கில்லே தெரியும்....."

"நீ வேலை வெட்டி ஒன்னும் செய்யாமே சோறு தின்னுட்டுத் திரியறதைப் பார்த்தால் யாருக்குத்

உமாசந்திரன்

தான் ஆத்திரம் வராது?'' என்று சீறினாள் வெள்ளாத்தாள்.

''உனக்கு ஆத்திரம் வரட்டும், வேண்டாங்கலே. ஆனா இவங்கண்ணன் யாரு, நான் யாரு.... அதுக்கு என்ன ஆத்திரம் என் மேலே? எப்ப எதிரே வரட்டும், மொறைப்புத்தான். கண்டுக்கிட்டாப்பிலேயே காட்டிக்கிடறது கிடையாது.... எனக்கென்ன வந்தது? நானும் மொகத்தைத் திருப்பிக்கிட்டுத்தான் போறது'' என்று கூறிய மங்கா உரிமையுடன் வள்ளியின் தோளில் சாய்ந்து கொண்டாள்.

''எங்க வள்ளியக்கான்னா எனக்கு உசிரு. அதுக்கு அந்த மாதிரி அண்ணன் எப்படித்தான் வந்து வாய்ச்சுதோ....'' என்று செல்லமாகக் கூறியவாறு அவள் கன்னத்தை வருடினாள்.

காளியண்ணனின் முரட்டுச்சுபாவம் வள்ளிக்குத் தெரியாததல்ல. சமயங்களில் அஞ்சலை அத்தையையே தூக்கியெறிந்தாற்போலப் பேசி விடுவானே. அவன் ஒரு சத்தம் போட்டால் எதிர்த்துப் பேச யாருக்குமே வாய் இருக்காது. தோற்றத்திலும் அதற்கேற்றாற்போல்தான் இருந்தான் காளியண்ணன். சற்றுக் குட்டையாயிருந்தாலும் இரும்புக் குண்டு போலிருக்கும், அவன் சரீரம். பளபளவென்று மெருகேறிய கறுப்பு. கரளை கரளையாகக் கை கால்கள். செம்மறியாட்டு ரோமம்போல் சுருட்டை சுருட்டையான தலைமயிர் வார வேண்டிய அவசியமே இல்லாமல் அவன் தலைக்கு மேல் அநாயாசமாகக் குவிந்து கிடக்கும். அவன் தலையை ஆட்டினால் அவ்வளவு சுருள்களும் குதித்தெழுவதுபோல் எழுந்து அடங்கும். இரண்டொரு சுருள்கள் முன்நெற்றியில் வந்து விழுந்திருப்பது அவனுடைய முரட்டுத்தனத்துக்கு முன்னறிவிப்பாகத் தோன்றும். கண்களும் அப்படித்தான். பெரிய பெரிய முரட்டுக் கண்கள். அவ்வளவு செவ்வரிகள் அந்தக் கண்களில் எப்படித்தான் வந்து படர்ந்தனவோ! போதை வெறியால் படர்ந்த செவ்வரிகள் அவை என்பதைப் பார்த்தாலே சொல்லிவிடலாம். சந்தர்ப்பம் கிடைத்தபோதெல்லாம் காளியண்ணன் குடிக்கத் தவறுவதில்லையென்று வள்ளிக்குத் தெரியும். அஞ்சலையத்தைக்கும் தெரியும். அந்த வட்டாரத்திலேயே எல்லோருக்கும் தெரிந்த ரகசியம்தானே அது! அடிக்கடி காளியண்ணன் இருளர் குடியிருப்புக்கள் நிறைந்த முள்ளி மலையை நாடிச் செல்வது வேறு எதற்காக?

காளியண்ணனின் இந்தச் 'சுதந்திர' மனப்போக்கை நினைத்து வள்ளி ஒரு விதப் பெருமையுடன் தனக்குள்ளேயே சிரித்துக் கொண்டாள். இன்று என்னவோ அவளுக்கு எதிலுமே மனசு செல்லவில்லை. இதமான வெய்யிலும் மெல்லிய தென்றலும் அவள் பறித்த மலர்களின் மணமும் சேர்ந்து இனம் புரியாததோர் இன்ப போதையை அவள் மனத்தில் நிரப்பி விட்டிருந்தன. எந்த வேலையும் செய்யாமல் அந்த இன்ப போதையிலேயே கிறங்கிக் கிடக்கவே அவள் விரும்பினாள். அவளுக்குச் சிரிப்பு வந்தது. அவள் புறப்பட்டு வந்த வேலையென்ன, இத்தனை நேரம் செய்த வேலை என்ன? மூலைக் கடைக்குப் போய் மசாலைச் சாமான் வாங்கி வரச் சொல்லியல்லவா அஞ்சலையத்தை அவளை அனுப்பினாள்! இவள் இங்கு மலர் பறித்துக் கொண்டு உட்கார்ந்திருந்தால் என்ன அர்த்தம்?

கடைச் சாமான்கள் வாங்கி வரும் வேலையெல்லாம் சாதாரணமாக அஞ்சலையத்தைதான் கவனித்துக்கொள்வாள். மாதம் முழுதுக்கும் தேவையான சாமான்களைச் சிரமத்தைப் பார்க்காமல் பத்து மைல் தூரம் கீழே இறங்கிச் சென்று வேலன் கடவு ராவுத்தர் கடையிலிருந்து மொத்தமாக வாங்கிக் கொண்டு வந்து வீட்டில் சேர்த்து விடுவது அவள் வழக்கம். முட்டுக்குத் தப்புக்கு ஏதாவது சாமான் தேவைப்படும் போதுதான் மூலைக் கடையில் வாங்கி வரச் சொல்லி வள்ளியை அனுப்புவாள்.

25 கல்கி வெள்ளி விழா பரிசுத்திட்டம்

முதல் பரிசு நாவல்

அந்த மூலைக் கடைக்குப் போவதென்றாலே வள்ளிக்கு அவ்வளவாகப் பிடிக்காது. அருவிக்கரைக்குச் செல்லும் பாதை திரும்பும் இடத்தில் ஓர் ஓடைப் பாலத்தை ஒட்டினாற்போல் இருந்தது அந்தக் கடை. கிருதாமீசை முனியாண்டிதான் இரண்டு வருஷங்களாக அந்தக் கடையை நடத்தி வந்தான். ஆரம்பத்தில் ஒரு சிற்றாளாக அந்தப் பிரதேசத்துக்கு வந்து சேர்ந்தவன் முனியாண்டி. பலசரக்குச் சாமான்களுக்கும் மற்றச் சாமான்களுக்கும் அங்கு இருந்த தேவையை அறிந்ததும் சிற்றாள் வேலையை விட்டு விட்டு ஒரு கடையையே ஆரம்பித்து விட்டான். அவன் கிருதா மீசை வைத்துக் கொண்டதே கடையை ஆரம்பித்த பிறகுதான்.



புன்னகை போலியும் உவகைத் தோற்றம்...
...இளமையும் எழிலும் தவழும் இளநோக்கு
இவற்றுடன் இணைந்த

கட்டாவ்

வாயில்கள்

ஸ்ரீ கட்டாவ் மகன்ஜி ஸ்பின்னிங் & வீவிங் கோ. லிட்., தலைமை ஆபீஸ்: லக்ஷ்மி பில்டிங், பல்லார்டு எஸ்டேட்,
... ரோடு, பைகுல்லா, பம்பாய்-27 மொத்த விற்பனைக் கடை ... முத்தி ஜெதா மார்கெட்,
சில்லறை விற்பனைக் கடை: 216, நேதாஜி சுபாஷ் சந்திர போஸ் ரோடு, செ

முனியாண்டியின் கடையில் இது தான் கிடைக்கும், இது கிடைக்காது என்பதில்லை. எல்லாச் சாமான்களிலும் கொஞ்சம் கொஞ்சம் அங்கே சேகரம் செய்து வைத்திருந்தான். எல்லாம் யானை விலை, குதிரை விலைதான். அவ்வளவு விலை கொடுத்து வாங்குவதற்கும் ஆட்கள் இல்லாமல் இல்லை. பத்து மைல் தூரம் வேலன்கடவு ராவுத்தர் கடைக்கு நடந்து போய் வாங்கி வருவதற்கு எல்லாருக்கும் பொறுமை ஏது?

முனியாண்டிக்குக் கிருதா மீசையும் பிடரிக் கிராப்பும்தான் பிரமாதமாயிருக்குமே ஒழிய ஆசாமி ஒல்லிக்குச்சியாய் ஒடிந்து விழுவதுபோல்தான் இருப்பான். ஓயாமல் பீடியைக் குடித்துக் குடித்து இணைபிரியாத இருமலை வேறு இழுத்து விட்டுக் கொண்டிருந்தான். இருமலோடு இருமலாகப் பீடியையும் புகைத்துக் கொண்டிருப்பான். அவன் கடையில் இரண்டொரு நிமிஷங்கள் நின்று ஏதாவது சாமான் வாங்கி வருவதற்குள் வள்ளிக்கு எரிச்சல் எரிச்சலாக வரும். போதாக்குறைக்கு அந்தக் கடையை அடுத்த ஓடைப் பாலத்தின் ஒட்டுச் சுவரில் எப்போது பார்த்தாலும் இரண்டொரு காலிகள் உட்கார்ந்து ஏதாவது அரட்டையடித்துக் கொண்டிருப்பார்கள். காளியண்ணனுக்குப் பயந்து யாரும் வள்ளியிடம் வாலை ஆட்ட மாட்டார்கள். இருந்தாலும் வள்ளிக்கு அந்தக் கடைப் பக்கம் போவதற்கே அருவருப்பு. ஆனால் அத்தை சொல்லைத் தட்ட முடியாதே.


முந்திய தினம் காளியண்ணனுக்கு ''டூட்டி'' இல்லாததால் நிறைய மீன் பிடித்து வந்திருந்தான். காலையில் வேலைக்குப் புறப்பட்டுப் போகும்போது அன்று தனக்குக் காரசாரமாக மீன் குழம்பும் பொரியலும் செய்து அனுப்ப வேண்டுமென்று அஞ்சலை அத்தையிடம் சொல்லிவிட்டுப் போயிருந்தான். அந்த மாதிரிச் சமையலில் அஞ்சலையத்தைக்கு இணையேது? ஆனால் காளியண்ணன் கேட்ட அளவு காரசாரமாகச் சமையல் செய்யப் போதுமான மசாலைச் சாமான் வீட்டில் இல்லை. மூலைக் கடைக்குப் போய் அவற்றை வாங்கி வரும்படி வள்ளியிடம் சொல்லியிருந்தாள். அதற்காகத்தான் அவ்வளவு சீக்கிரமாக வீட்டை விட்டுப் புறப்பட்டிருந்தாள் வள்ளி. நடுவே அவள் கண்களில் பட்ட மலர்க்கொத்து அவள் கவனத்தை வேறு திசையில் திருப்பி விட்டது.

பாதையோரமாயிருந்த பாறையில் உட்கார்ந்திருந்தாள் வள்ளி. அங்கிருந்து அவள் கண்களுக்குப் புலனான காட்சி அவளது உள்ளத்தின் உவகையைப் பன்மடங்கு அதிகப்படுத்துவதாக இருந்தது. அவளுக்கு வலப்புறத்தில் மூன்று திசைகளிலும் மரங்களடர்ந்த மலைகளும் குன்றுகளும் கணக்கில்லாமல் பரந்து கிடந்தன. இடப்புறம் பள்ளத்தாக்குப் பகுதியை நோக்கி வேலன் கடவுப் பக்கமாகச் செல்லும் பாதை தலையும் வாலுமில்லாத பெரிய மலைப் பாம்பு போல். இரு புறமும் அடர்ந்த மரங்களுக்கிடையே வளைந்து வளைந்து சென்றது. அந்தப் பாதை பள்ளத்தாக்கை நோக்கி இறங்கும் திருப்பத்தில்தான் சற்று ஒதுங்கினாற்போல் வீரன் வாய்க்காலையடுத்து அவர்கள் வீடு அமைந்திருந்தது. எதிரே ஒரு குன்று மறைத்துக் கொண்டிருந்ததால்



வீடு வள்ளியின் கண்களுக்குப் புலனாகவில்லை. ஆனால் வலப்புறத்தில் வீரன் வாய்க்கால், நீர்த் தேக்கத்தில் சென்று கலக்கும் இடத்தை அவளால் பார்க்க முடிந்தது.

நீர்த் தேக்கத்துக்கு வலது புறத்தில்தான் செங்குத்தான மலைச் சரிவுக்கு நேர் கீழே பவர்ஹவுஸ் வேலைகள் நடந்துகொண்டிருந்தன. பவர்ஹவுஸை வள்ளி இங்கிருந்து பார்க்க முடியாவிட்டாலும் அந்தச் செங்குத்தான சரிவு வழியே பவர்ஹவுஸுக்கு நீரைக் கொண்டு செல்லும் நான்கு பிரம்மாண்டமான குழாய்கள் வெய்யிலின் ஒளி பட்டு மின்னிக் கொண்டிருந்ததைக் காண முடிந்தது. அந்த இடத்தில்தான் காளியண்ணன் வேலை செய்யும் விஞ்ச் ஷெட் இருந்தது. அதோ குழாய்களை அடுத்தாற்போல் அந்தச்



''ரயில் கோச் பாக்டரியிலிருந்து நான் ரிடையர் ஆனதும் சொந்தமா ப்ளாட் வாங்கி என்னுடைய ப்ளான்படி கட்டிய வீடு சார் இது!''

சரிவில் அமைந்த தண்டவாளங்களில் விஞ்ச் டிராலி கீழ் நோக்கி இறங்க ஆரம்பித்து விட்டதே! விஞ்ச் ஷெட்டில் இருந்து கொண்டு காளியண்ணன் டிராலியோடு பொருத்தப்பட்டிருந்த உருக்குக் கயிற்றை மெதுவாக விடுவித்துக் கொண்டிருக்கிறான் என்பதை டிராலி மெதுவாக ஊர்ந்து செல்வதிலிருந்தே புரிந்து கொள்ள முடிகிறது. பெரிய உருளையில் ஏறக்குறைய ஒரு மைல் நீளமுள்ள அந்த உருக்குக் கயிறு சுற்றப்பட்டிருக்கும். கைப்பருமனுள்ள அந்தக் கயிற்றின் பலத்தை ஆதாரமாகக் கொண்டுதான் அந்த டிராலி அந்தச் செங்குத்தான சரிவில் இறங்கவும் ஏறவும் முடிகிறது.

காளியண்ணனுக்குப் பகல் உணவு எடுத்துச் செல்லும் போதெல்லாம் வள்ளி அந்த உருக்குக் கயிற்று உருளைகளையும் அவற்றை இறுக்கிப் பிடித்திருந்த பல் சக்கரங்களையும் பார்த்துப் பிரமித்துப் போவாள்.

''இந்தப் பல் சக்கரங்கள் இல்லாம இருந்தால் என்ன ஆகும், அண்ணே?'' என்று கேட்டாள் ஒரு சமயம். அப்போது மங்காவும் அவளுடன் இருந்தாள்.

''என்ன ஆகுமா? இந்த உருளைக்குப் பிடிப்பு ஏது அப்புறம்? இதிலே சுத்தியிருக்கிற உருக்குக் கயிறு பொல பொலன்னு அவுந்துக்கும். அப்புறம் அதிலே கட்டியிருக்கிற டிராலி வண்டி என்ன கதி ஆகும்னு சொல்லணுமா?''

''ஆயையோ! நெனைக்கவே பயமாயிருக்கே.''

''ஆரம்பத்திலே ஒரு தரம் இங்கே அந்த மாதிரி நடந்திருக்காம் தெரியுமில்லே. பல் சக்கரத்திலே ஏதோ பழுது ஏற்பட்டு ரெண்டும் கழண்டுக்கிடுச்சாம். அவ்வளவுதான். ஏழெட்டு ஆள்களை ஏத்திக்கிட்டுச் சரிவிலே மெதுவா நகந்துக்கிட்டிருந்த டிராலி வண்டி திடீர்னு தறி கெட்டு ஓடிப் பாறைகள்லே மோதித் தூள் தூளாயிடுச்சாம்!'' என்றான் காளியண்ணன்.

பயம் தாங்காமல் மங்கா வள்ளியைக் கட்டிக் கொண்டாள். ''அக்கா, இனிமே ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் கன்னிமலைக்குச் சந்து வழியாவே போயிடலாமே!'' என்றாள்.

''ஏய்.... எப்பவோ நடந்ததைச் சொன்னா இப்ப நீ ஏன் பயந்து சாவறே? இந்தப் பல் சக்கரத்துக்கு நான் என்ன பேர் வைச்சிருக்கேன் தெரியுமா? உடும்புச் சக்கரம். பிடிச்சால் ஒரே பிடிதான். நாமாத் தளர்த்தினாலொழியத் தளராது!'' என்றான் காளியண்ணன்.

சரிவில் அந்த டிராலி வண்டி நகர்ந்து சென்று கொண்டிருந்ததைப் பார்த்து இப்போது வள்ளிக்கு அந்தப் பேச்செல்லாம் நினைவுக்கு வந்தது. பவர் ஹவுஸுக்கு வேலை செய்யச் செல்லும் தொழிலாளிகள் ஐந்து பேர்கள் ஆறு பேராக அந்த டிராலியில்தான் கீழே சென்று கொண்டிருக்கிறார்கள். அவ்வளவு பேருடைய உயிரும் காளியண்ணனுடைய கையில்தான் இருக்கிறது என்று நினைத்தபோது வள்ளிக்குப் பெருமையாகக்கூட இருந்தது.


மங்காவின் தாயாருக்குச் சில நாட்களில் மலை மேலேயே வேலை இருக்கும். இப்போது நாலைந்து நாட்களாக அவள் பவர்ஹவுஸ் பகுதிக்குத்தான் போய் வந்து கொண்டிருப்பதாக மங்கா கூறியிருந்தாள். சரிவில் ஊர்ந்து செல்லும் அந்த டிராலியில் வெள்ளாத்தாளும் இருக்க மாட்டாளென்று யார் சொல்ல முடியும்?

வெய்யில் ஏறிக் கொண்டிருந்தது. அஞ்சலையத்தை மீனையெல்லாம் ஆய்ந்து விட்டு அவனுக்காகக் காத்திருந்தாலும் காத்திருப்பாள். உச்சிப் பொழுதுக்குள்ளாவது ஆக்கி முடித்தால்தான் காளியண்ணனுடைய பசி நேரத்துக்குச் சாப்பாடு எடுத்துச் செல்லச் சரியாயிருக்கும். மூலைக் கடைக்குப் போய் வாங்க வேண்டியதை வாங்கிக் கொண்டு நேரமிருந்தால் அருவிக் கரைக்குப் போய்க் குளித்துவிட்டே வீட்டுக்குப் போகலாமென்று எண்ணியவாறு அங்கிருந்து எழுந்தாள் வள்ளி. **(தொடரும்)**


ஆயுட்கால செவியின்பத்தைப் பெற்று மகிழுங்கள்!



மாடல் யு-819
5 வால்வுகள், 3 பாண்டுகள்
ப்ளாஸ்டிக் காபினெட், ஏஸி/டிஸி
ரூ. 298.00



மாடல் யு-806/ஏ-806
6 வால்வுகள், 3 பாண்டுகள், மரக் காபினெட்,
யு-806-ஏஸி/டிஸி ஏ-806-ஏஸி
ரூ. 395.00



மாடல் ஏ-786 (ஹை-ஃபி செட்)
6 வால்வுகள், 5 பாண்டுகள், 2 ஒலிபெருக்கிகள்,
மரக் காபினெட், ஃபெர்ரைட் ஏரியல், ஏஸி
ரூ. 675.00

(விலைகள் ஸ்தலவரி உட்பட: இதர வரிகள் தனி)

நேஷனல் எக்கோ

இந்தியாவின் ஒரே
மான்ஸூன்ப்ரூஃப்
ரேடியோ!

ஜெனரல் ரேடியோ & அப்ளையன்ஸஸ் லிமிடெட்,
பம்பாய் • கல்கத்தா • மதராஸ் • டெல்லி • பாட்னா • பெங்களூர் • ஸெகந்திராபாத்



வீதியில் கேட்ட கீதம்!

பாப்பா மலர்

இன்பவண்ணன்

செகந்நிரா பாத்தெனும் நகர்தனிலே - முன்னர்
சிறுவன் ஒருவன் புகழடைந்தான்!
செகந்நா தனெனும் பெயருடையான் - அவன்
சிறந்த குணங்கள் மிகவுடையான்!
பள்ளியிற் சென்ற காலேயிலும் - மற்றும்
பயின்று திரும்பும் வேளையிலும்,
பிள்ளையில் இவன்நற் பிள்ளையென - கண்டோர்
பேசிப் புகழந டந்திடுவான்!
கற்பவை நன்கு கற்றிடுவான் - கற்ற
கல்வியைத் துணையாய்க் கொண்டிடுவான்!
நிற்பதும் அவ்வழி மற்றதில்லே - நல்ல
நெறியினில் நீங்கி நின்றதில்லே!
காலேக் கடன்களை முடித்தொருநாள் - அவன்
கல்விக் கூடம் விரைந்திட்டான்!
சாலை வழிச்செலும் போதினிலே - தூறல்
சடசட வென்று தூறியதே!
பேய்மழை பெருமழை பிடித்துவிட - நடை
பின்னிப் பிந்திப் போயிற்று!
தோய்ந்திடு மழைநீர் மேனியெல்லாம் - சொட்ட
சுனைநீர் குளித்தாற் போலானுன்!
பேய்மழைக் கோரிடம் நின்றிடவா - இன்றிப்
பெய்திடும் போதே சென்றிடவா?
ஆய்விடும் நேரம் என்பதனுல் - அவன்
அடைமழை தன்னிலும் ஓடலுற்ருன்!
குறித்த காலம் தவருமை - நல்ல
குணங்களில் ஒன்றும் என்பதனுல்,
சிறுத்த பொழுதும் விருக்க - அவன்
சிந்தை ஒப்பிட வில்லேயில்லே!
பள்ளிக்குக் கால் கல் தொலேவிருக்கும் - பள்ளிப்
பையன்கள் வாயிலில் நின்றிருந்தார்!
பிள்ளைகள் ஓர்குரல் தானெடுத்து - தேசப்
பாடலே ஓதிடத் தொடங்கிவிட்டனர்!
இன்னப் பையன் செகந்நாதன் - அந்தத்
தேசப் பாடலைச் செவியுற்று,
நின்ற விடத்தில் நின்றிட்டான் - மழை
நீரைச் சற்றும் எண்ணவில்லே!
பாடி முடித்திடும் வேளைவரை - அந்தப்
பாலகன் நீர்சொட்ட நின்றிருந்தான்!
ஆடி நடுக்கும் குளிரிடையே - பள்ளி
ஆரம்ப மாகுமுன் சென்றிட்டான்!
பள்ளித் தலைவர் இவன்நிலையை - வந்து
பார்த்தார் ஏதும் தோன்ருராய்,
"உள்ளது கூறிடு பிந்தியதேன் - இன்று
ஓரிரு மணித்துளி தாமதமேன்?"
என்றத் தலைவர் கேட்டிடவும் - அவன்
இதயம் கனியக் கூறலுற்ருன்!
"இன்று பெருமழை வயப்பட்டேன் - மழை
இருந்தும் அதனில் வழிநடந்தேன்!
பாதி வழிநான் வந்திருப்பேன் - தேசப்
பாடல் அதற்குள் ஒலித்ததுவே!
வீதியி லுடனே நின்றுவிட்டேன் - அந்த
வீர வணக்கம் முடிந்ததுமே,
ஓடிவந் தேன்மிக வேகமொடு - ஆயின்
ஓரிரு மணித்துளி தாமதமே!
தேடிய பிழையில் யாதலினுல் - இதைச்
சிந்தையில் வைக்கலா காதெ"னலும்,
பள்ளித் தலைவர் வியப்புற்ருர் - அந்தப்
பாலகன் மீதுதம் விழிபதித்தார்
"பிள்ளைக ளேயிவன் செய்தசெயல் - என்றும்
போற்றற் குரிய பெருஞ்செயலாம்
கொட்டும் மழைநீர் எண்ணவில்லே - அவன்
குளிருக்குச் சற்றும் அஞ்சவில்லே!
நட்ட மரம்போல் வீதியிலே - நின்று
நாட்டுப் பாடலேக் கௌரவித்தான்!
இன்றே யிவன்புகழ் ஓங்கிடுக - மற்ற
இளைஞர்க் கிவனேர் இலக்கணமே
நன்றே புரிந்தான் செகந்நாதன் - இந்த
நாட்டின் மாணவ மணியானுன்."
(ஓர் உண்மைச் சம்பவத்தை அடிப்படையாகக் கொண்டது.)



தமிழ்த் திரைப்பட உலகின் போக்கு இன்று இல்லாவிட்டாலும் நாளை மாறித்தான் ஆகவேண்டும். மாறுதல்களுக்கான அறிகுறிகளும் அவ்வப்போது தோன்றி வருகின்றன. 'யாருக்காக அழுதான்' திரைப் படத்தில் தேடிப் பார்த்தால் குறைகள் என்று இல்லாமல் இல்லை. ஆனால் வருங்காலத்தில் இதைவிட மிகச் சிறந்த தமிழ்த் திரைப்படங்கள் உருவாவதற்கு இன்று முன்னோடியாக உள்ள குறிப்பிட்ட ஒருசிலருள் திரு ஜெயகாந்தனும் ஒருவர் என்று துணிந்து கூறலாம். சம்பிரதாயத்துக்கு விரோதமான காரியங்களில் ஆரம்ப முயற்சிகள் எப்போதுமே சிரமமானவை. பலத்த எதிர்ப்புக்கு இலக்காகக் கூடியவை. எளிதில் வெற்றி காண முடியாத இத்தகைய ஆரம்ப முயற்சிகளில் ஈடுபட அசாதாரணமான துணிவு வேண்டும். அந்தத் துணிவு ஜெயகாந்தனிடம் உண்டு. அதை எப்படிப் பெற்றார் என்பதை அவரது வாழ்க்கைக் கதை நமக்குக் கோடி காட்டுவதாகத் தோன்றுகிறது.

ஒரு கதாசிரியரின் கதை

அச்சக ஊழியராக ஆரம்பித்து, எழுத்தாளராக உருவெடுத்து, திரைப்படக் கதை-வசன- டைரக்டராகப் புதிய பாதையில் அடியெடுத்து வைத்திருக்கும் ஜெயகாந்தனின் வாழ்க்கை வரலாறு, அவர் எழுதும் சிறு கதைகளைப் போலவே சுவையானது, பிரமிப்பூட்டுவது.

பள்ளிக்கூடம் என்றாலே வேப்பங்காய்+எட்டிக்காய்+விளக்கெண்ணெய் இவருக்குச் சின்ன வயதிலே. பள்ளிக்கூடம் போகிறேனென்று வீட்டில் சொல்லிவிட்டுப் புறப்படுகிறவர் கடைத்தெருவில் ஒவ்வொரு கடையாக நின்று பார்த்து விட்டுப் போய்ச் சேர்வதற்கும், இடைவேளைக்கெனப் பள்ளி விடப்படுவதற்கும் சரியாக இருக்கும். படிப்பில் அத்தனை ஆர்வம்! மீண்டும் வீட்டுக்கு வந்து சாப்பிட்டு விட்டுப் 'பள்ளிக்கூடம்' போவார். இந்த ரீதியில் படிப்பு எப்படி வரும்?

ஜெயகாந்தனின் மாமா அப்போது சென்னையில் இருந்தார். அவர் ஒரு கம்யூனிஸ்ட். "நீ என்னவோ ஊரையே, உலகத்தையே திருத்தப் போவதாகச் சொல்லிக் கொண்டிருக்கிறாயே, முதலில் என் பையனைத் திருத்துவதற்கான வழியைப் பார்!" என்று சொல்லி, கடலூரில் இருந்த ஜெயகாந்தனைச் சென்னைக்கு அனுப்பி வைத்தார் அவரது தாயார்.

பையனைத் திருத்துவதற்கு முதற்படியாக 'ஜனசக்தி' அச்சகத்தில் கொண்டு போய் வேலைக்குச் சேர்த்தார் ஜெயகாந்தனின் மாமா. அச்சகத்தில் வேலை என்று பெயர் ஆனால் இதர எடுபிடி வேலைகளும் வந்து சேரும். மாலை வேளைகளில், தெருக்களில் பத்திரிகை, புத்தகங்கள் விற்கப் போவதும் உண்டு. ("அந்தப் 'பீரியட்' லேதான் கம்யூனிஸம் பற்றிய புத்தகங்களையெல்லாம் திறையப் படித்தேன்.") என்னதான் வேலையில் முழு மனத்துடன் ஈடுபட்டிருந்த போதிலும், இயற்கையான முரட்டுக் குணம் அவரை விட்டுப் போக வில்லை. இந்திலேயே வளைய மறுத்தவர், பதினேந்திலா வளைந்துவிடப் போகிறார்?.... தினமும் சக ஊழியர்களுடன் ஏதாவது தகராறு, சண்டை, அடிதடி. "நாங்கள் இங்கே வேலை செய்ய வேண்டுமென்றால் அவனை உள்ளே வர விடக் கூடாது!" என்று சக ஊழியர்கள் நிர்வாகத்திடம் புகார் செய்யுமளவுக்கு நிலைமை முற்றவே, மாமா கோபித்துக் கொண்டார்.

ரோஷக்காரராயிற்றே! சொல் பொறுக்கவில்லை. ஓடிப் போய் விட்டார் சென்னையை விட்டு. மதுரை எங்கே, திருச்சி எங்கே, ராமநாதபுரம் எங்கே என்று ஊர் ஊராகச் சுற்றினார். (அந்த நாட்களில் தஞ்சாவூரில் ஒரு தோல் கடையில் வேலை செய்ததும் உண்டு!)

1950ம் ஆண்டு டிசம்பர் 5-ம் தேதி அவரது வாழ்வில் இன்னொரு திருப்பம். வெளியூர் வாழ்க்கை அலுத்துப் போகவே, ஓசைப்படாமல் பழையபடி சென்னைக்கே வந்து சேர்ந்து விட்டார்.

வந்தவர் நேரே 'ஜனசக்தி'க்குப் போனார். அச்சக வேலை லாயக்கில்லை என்று சொல்லி, கொஞ்சம் உயர்வாக, ஃப்ரூப் – ரீடர் வேலை கேட்டார். கொடுத்தார்கள். அதிலே அவர் காட்டிய உற்சாகத்தையும், திறமையையும் கண்டு மெச்சி, ஆசிரியக் குழுவில் ஓர் உறுப்பினராகவும் சேர்த்துக் கொண்டார்கள்.

'ஜனசக்தி'யில் வார இதழ் என்று இரண்டு பக்கங்கள் அதிகமாகச் சேர்ப்பார்கள் ஞாயிறு தோறும். அந்த வார இதழில் வெறும் கட்டுரைகளே நிரம்பி இருந்ததைக் கண்ட ஜெயகாந்தன், "சிறு கதை ஒன்று போட்டால்



திரு ஜெயகாந்தன்

என்ன?'' என்று கேட்டதோடு, கதை ஒன்றையும் எழுதிக் கொடுத்தார். ''வறுமைச் சுவர்'' என்ற தலைப்பு அதற்கு. (''என்ன கதை அது?'' ''ஓ! தட் வாஸ் ஜஸ்ட் நான்சென்ஸ்!'') அந்தக் கதையும் பிரசுரமாகியது. ஜெயகாந்தனின் புதுமைப் போக்கும், புரட்சிகரமான நடையும் பிடிக்காத சக ஊழியர்கள் சிலர் வேண்டுமென்றே அந்தக் கதையைக் குறை கூறவே, கோபம் பீறிட்டுக் கொண்டு வந்தது அவருக்கு. ஒரே உதறல் : 'ஜனசக்தி' வேலையை உதறித் தள்ளிவிட்டார்.

''எழுதுவதற்கு வருவதற்கு முன்பு நிறையப் படிக்க வேண்டும்!'' என்று ஒருவர் சொன்னதைக் கேட்டு, ஜெயகாந்தனுக்கு ஓர் ஆவேசம் பிறந்தது. தமிழைக் கரைத்துக் குடித்து விடுவது என்ற முடிவுடன், வித்துவான் பரீட்சைக்குப் படிக்க முனைந்தார். டாக்டர் ப. நடராஜனின் சகோதரரான திரு சொக்கலிங்கம் (''பாசொலி'')தான் இவருக்குக் குரு. முறையாகத் தமிழ் கற்றார். பரீட்சை எழுதுவதற்கு முன்பு ஒரு பிரச்னை எழுந்தது. 'பரீட்சையில் தேறி விட்டு என்ன செய்வது?' என்று. ''தருமபுரம், திருப்பனந்தாள் இப்படி ஏதாவது ஒரு மடத்திலே தமிழ் வித்துவானாகச் சேர்ந்து விடலாம்!'' என்று யோசனை கூறினார் ஒருவர். ''ஆதீன வித்துவான் என்றால் தலையை மொட்டையடித்துக் கொள்ள வேண்டும்!'' என்று யாரோ பயமுறுத்தவே, 'பரீட்சை எழுதவும் வேண்டாம்; பாஸ்செய்துவிட்டு அவஸ்தைப் படவும் வேண்டாம்' என்று ஒதுங்கிவிட்டார்.

வேலை வேண்டுமே?.... சும்மா இருந்தால் எப்படி?.... அப்போது கும்பகோணத்தில் இஸ்மத் பாட்சா என்பவர் 'சமரன்' என்ற பத்திரிகையை ஆரம்பித்தார். பாட்சா நெருங்கிய நண்பரானதால், ஜெயகாந்தனுக்கு அதில் உதவியாசிரியர் வேலை போட்டுக் கொடுத்தார். கொஞ்ச காலத்துக்குள்ளேயே 'சமரன்' அமரனாகி விட்டதால் மீண்டும் சென்னைக்கே வந்தார் ஜெயகாந்தன்.

வீட்டிலோ, ''வேலைக்குப் போ! வேலைக்குப் போ!'' என்று விரட்டினார்கள். இலக்கிய வாசனையற்ற எந்த வேலையிலும் மனம் ஒட்ட மறுத்தது. 'தப்பித் தவறி எவனாவது ஏதாவது வேலை கொடுத்து இழுத்துப் போட்டுவிடப் போகிறானே' என்று பயந்து, வேலை கிடைக்காமல் இருப்பதற்காகச் சில வழிகளையும் கையாள வேண்டியிருந்தது.

ஓர் இடத்தில் ஆபீஸ் பையன் வேலைக்கு என்று அனுப்பினார்கள். சிகரெட்டும் கையுமாகப் போய் நின்றார் ஜெயகாந்தன். ''என்ன வேண்டும்?'' என்று கேட்டார் முதலாளி. ''ஆபீஸ் பாய் வேலைக்காக வந்திருக்கிறேன்!'' என்று பதிலளித்தார் விறைப்பாக. ஒரு முறை ஆசாமியை ஏற இறங்கப் பார்த்த அந்த முதலாளி, ''வேலை காலி இருந்தால் சொல்லி அனுப்புகிறேன்! அநாவசியமாக வந்து அலைய வேண்டாம்!'' என்று கூறினார். இனிமேல்தான் அவர் சொல்லியனுப்பப் போகிறார்...!

புத்தக வெளியீட்டாளர் ஒருவர், ''நல்ல புரூப் ரீடர் ஒருவர் வேண்டும். யாராவது இருந்தால் சொல்லுங்களேன்!'' என்றார். ''நானே வருகிறேன் ஐயா, அந்த வேலைக்கு!'' என்று ஒப்புக் கொண்டார் ஜெயகாந்தன். சம்பளம்: ஃபாரம் ஒன்றுக்கு ஐந்து ரூபாய்!

வெளியீட்டாளரின் நிதி நிலைமைக்கேற்பவே புத்தக ஃபாரங்களும் அச்சாகிக் கொண்டிருந்தனவாதலால், மாத வருமானம் ஒரு சீராக இல்லை. மாதச் சம்பளம் என்று ஏதாவது போட்டுக் கொடுக்கும்படி கேட்டார் ஜெயகாந்தன். வெளியீட்டாளரும் ஒப்புக் கொண்டார். சம்பளம்: ஐம்பது ரூபாய்! இது தவிர, சிற்றுண்டி, சிகரெட், வெற்றிலை பாக்கு ஆகியவை இலவசம்! காலம் நன்றாகத்தான் போய்க் கொண்டிருந்தது.

ஆனால் விதி யாரை விட்டது? ஒரு நாள் சாதாரணமாக ஆரம்பித்த ஏதோ ஒரு விவகாரம் காரசாரமான வாக்குவாதமாக முற்றியது. விளைவு? ஜெயகாந்தன் (வழக்கப்படி!) வெளியேறினார்.

அப்போது தேனாம்பேட்டையில் பொருட்காட்சி நடந்து கொண்டிருந்தது. அதிலே, கம்யூனிஸப் பிரசார சம்பந்தமான புத்தகங்கள் அடங்கிய ஸ்டாலுக்கு ஓர் ஆள் தேவையாக இருக்கவே, அங்கே போய் ஒதுங்கினார் ஜெயகாந்தன். பொருட்காட்சி முடிந்தது; வேலையும் முடிந்தது.

இத்தனை ஏற்ற இறக்கங்களுக்கிடையிலும் அவர் எழுத்துப் பணி தொடர்ந்து நடந்து வந்தது. விஜயபாஸ்கரனின் 'சரஸ்வதி' இவர் எழுத்துக்கு இடம் தந்து பெருமை தேடிக் கொண்டது; பெருமை தேடிக் கொடுத்தது.

குறுகிய ஒரு வட்டத்தில் மட்டுமே அறிமுகமாகியிருந்த இவரை 'ஒரு பிடி சோறு' என்ற சிறுகதைத் தொகுதி மூலம் 'கண்டுபிடித்து'ப் பிரபலமாக்கியது ஆனந்த விகடன். ஜெயகாந்தன் விகடனுக்கு எழுதத் தொடங்கினார். ''ஓவர்டைம்'' என்ற கதையைத் தொடர்ந்து பல அற்புதமான சிறுகதைகளை 'மளமள'வென்று எழுதிக் குவித்து, தமிழ்ச் சிறுகதை உலகில் தமக்கென்று ஒரு தனி இடத்தையும் பிடித்துக் கொண்டார்.

குறுநாவல்கள் உள்பட இருநூறு சிறுகதைகளுக்கும் ஒரு குழந்தைக்கும் தந்தையான இவருக்குப் பிடித்த ஆசிரியர்கள்: பாரதி, புதுமைப்பித்தன், கார்க்கி, டென்னஸி வில்லியம். பிடிக்காதது: சோம்பல்.

விருப்பம்: தமிழில் நாடகம் எழுத வேண்டும் என்பது.

இவரைப் பற்றிய இரண்டு ரகசியங்கள்:

1. இவர் கம்யூனிஸ்ட் கட்சியின் அங்கத்தினர் அல்ல.

2. ''ஜெயகாந்தன் என்பது இயற்பெயரா? அல்லது புனைபெயரா?''

''இயற்பெயர்தான்.....''

''தங்களுக்கு இந்தப் பெயரைச் சூட்டியதற்கு விசேஷ காரணம் ஏதாவது உண்டா?''

''என் தாயாருக்கு ஆரணி குப்புசாமி முதலியார் எழுதிய நாவல்கள் என்றால் உயிர்...... அதில் ஒன்றிலே ஜெயகாந்தன் என்று ஒரு பாத்திரம் வருகிறதாம். எனவே, அதையே எனக்குப் பெயராக வைத்து விட்டார்கள்!.......''

— முகுந்தன்

சிவனருட் செல்வர்



14. மெய்ப்பொருள் கண்ட மெய்ப்பொருள்

முளை நெல் சோறு ஆன பின்தானே கறியைப் பற்றி நினைக்க வேண்டும்? நல்ல அரிசியே களியாகி விடுகிறதே இந்தக் காலத்தில்! எனவேதான் சோறு ஆகும் மட்டும் காத்திருந்து பின் கறியமுதுக்குக் கவலைப்பட்டார்.

அம்மையார் கூறியதைக் கேட்ட நாயனார், ''வழி நடந்து வந்த அடியவர் பசியுடன் வருந்திக் கொண்டிருப்பாரே'' என்ற அன்பின் மிகுதியால் விரைந்து தோட்டத்துப்பக்கம் சென்றார். தோட்டத்தில் குழிக்கு மேல் வளர்ந்து வராத இளம் பருவமுள்ள இலைக் கறிப் பயிர்களைக் கையினால் தடவி, வேருடன் பறித்தார். அவ்வாறு அவர் பறித்தது பாசப் பழிமுதலை வேருடன் பறித்தது போல் இருந்ததாம். பறித்தவற்றைக் கொண்டு வந்து அன்பு மனைவியாரிடம் கொடுத்தார். அவற்றை வாங்கிய அந்த அம்மையார் என்ன செய்தார்?

மனைவியார் கொழுநர் தந்த
மனமகிழ் கறிகள் ஆய்ந்து
புனலிடைக் கழுவித் தக்க
புனிதபாத் திரத்துக் கைம்மை
வினையினால் வேறு வேறு
கறியமு தாக்கிப் பண்டை
நினைவினால் குறையை நேர்ந்து
திருவமு தமைத்து நின்று

முதல் அமைச்சராயிருந்த சேக்கிழார் பெருமானுக்குச் சமையற் கலையும் தெரிந்திருக்கிறது.

நாயனார் கொண்டு வந்து கொடுத்த கீரையைப் பெற்றுக் கொண்டு அம்மையார் புல், புழுவின்றி ஆய்ந்து, பல முறை சுத்தமான நீரில் கழுவினார். சுத்தமான பாத்திரத்தில் வைத்துக் கீரையை மசக்கியும், அடித் தண்டை நறுக்கிக் கூட்டுச் செய்தும் வேறு வேறு வண்ணமாகவும் ஆக்கினார். இவ்வளவும் மிகச் சுருங்கிய காலத்தில் செய்யப்பட்டன.

நாயனாரும், அவரது மனைவியாரும் அடியவராய் வந்துற்ற இறையவர்பால் சென்று, ''ஆகாரம் தயாராகிவிட்டது எழுந்தருள வேண்டும்'' என்று கூறி அயிலுதலும் துயிலுதலும் இல்லாத அவரை எழுப்பினர். எழுந்தவர் சாமானியச் சிவனடியாராகவா எழுந்திருந்தார்?

''அழுந்திய இடருள் நீங்கி அடியனேன்
உய்ய என்பால்
எழுந்தருள் பெரியோய்! ஈண்ட
அமுதுசெய் தருள்க'' என்று
தொழும்பனார் உரைத்த போதில்
சோதியாய் எழுந்து தோன்றச்
செழுந்திரு மனைவி யாரும்
தொண்டரும் திகைத்து நின்றார்

ஆதியும் அந்தமுமில்லாத சிவபெருமான் அங்கே சோதியாய் எழுந்து தோன்றினார்.

மாலயன் காணாத மாமணிச் சோதியண்ணல், நாயனார்க்கும் மனைவிக்கும் அருள் புரிய, அவர்கள் எல்லையில்லா மகிழ்ச்சி எய்தினர்.

சங்கரா போற்றி ஞானச் சம்புவே
போற்றி பாற்றில்
வெங்கரா வடுமால் காணா விமலனே
போற்றி என்றும்
செங்கரா மலகம் போன்று திருவருள்
செய்வோய் போற்றி
பொங்கராவணிந்த வேத புங்கவ
போற்றி போற்றி!

என்று துதித்தனர். திருத் தொண்டரைக் கருணையுடன் நோக்கிய சிவபெருமான், ''அன்பனே! அன்பர் பூசை செய்த நீ உன் மனைவியுடன் நமது சிவலோகம் எய்தி வருவாயாக. எமது தோழனாகிய குபேரன் நவ நிதிகளை ஏந்தி உனது ஏவல் கேட்பான். நீ எல்லையில்லாத இன்பத்தை நுகர்ந்து இனிது இருப்பாயாக'' என்று திருவருள் புரிந்தார்.

பெருமான் மறைந்தார். நாயனார் சிவ கணங்களுள் ஒருவராகி, அள

திருமுருக கிருபானந்தவாரியார்

கேசன் இருநிதிகளை ஏந்திப் பணி செய்ய, பேரானந்தப் பெரு வாழ்வில் திளைப்பவ ரானார்.

சிவஞானமே மெய்ப் பொருள். ஏனையவெல்லாம் பொய்ப் பொருளே யாகும். பொய்ப் பொருள் இன்றிருந்து நாளை அழியும். அழிகின்ற பொய்ப் பொருளைப் பொருளாகக் கொள் ளாதவர் மெய்ப் பொருள் நாயனார். திருநீறும் கண்டிகையும் புனைந்த சிவ வேடத்தையே மெய்ப் பொரு ளாகக் கொண்டவர் அவர்.

சிவவேடம் புனைந்தவர் யாவரேயா யினும், அவர்களுடைய குணங் குற்றங் களை ஆராயாது அன்புடன் வழிபட வேண்டும். ''நேயம் மலிந்தவர் வேட மும் ஆலயந்தானும் அரனெனத் தொழுமே'' என்பது சிவஞானபோதச் சூத்திரம். அதற்கு இலக்கியமாகத் திகழ்ந்தவர் மெய்ப்பொருள் நாயனார்.

சோழ நாட்டுக்கும் தொண்டை நாட்டுக்கும் இடையில் உள்ளது நடு நாடு. சேதி நாடு என்றும் அதற்குப் பெயர் உண்டு. நீதியின் மிக்க அச்சேதி நன்னாட்டிலே சிறந்து விளங்குவது திருக்கோவலூர். அந்த ஊரைத் தனக்கு ராஜதானியாகக் கொண்டு ஆட்சி செய்து வருகிறார் மெய்ப்பொருள் நாயனார். சிவபெருமான் திருவடியில் என்றும் அன்புடைய மலாடர் மரபில் வந்த அவர், வேதாகம நெறியில் நின்றவர். அரனடியார்கள் யாவராயி னும் அவர்களுக்கு ஏவல் புரிவார். அடியார்கள் ஏவல் இடுகிற வரை யில் அவர் காத்திருப்பதில்லை; காத லுடன் அவர்கள் கருத்தறிந்து ஏவல் செய்வார். அரசியல் நெறியில் தந்த தருமத்தை நன்றாகக் காத்து வந்தார்; வாள் வலியாலும், தோள் வலி யாலும் சிறந்தவர். உரை திறம்பாத வாய்மையுடன் நடந்து கொண்டவர்.

மெய்ப் பொருள் நாயனார், சிவ பெருமானுடைய திருக்கோயில்கள் எல்லாவற்றினும், காலந் தவறாதும், நிரம்பிய படித்தாரத்துடனும் நித்திய நைமித்திய வழிபாடுகள் குறைவின்றிச் செவ்வையாக நடந்து வர ஏற்பாடு செய்தார். தேசமும் நாடும் அரசும் வாழ்வது ஆலய வழிபாட்டினால்தான் என்பதை நன்குணர்ந்த நாயனார், முப்போதும் திருக்கோயில் வழிபாடு புரிவார்; எப்போதும் ஐந்தெழுத்தை ஓதுவார். சிவனடியார் திருவடியே சார்பாகக் கொண்டு ஆட்சி செய்து வந்தார் மெய்ப்பொருள் நாயனார்.

தேடிய மாடு வீடு செல்வமும் தில்லை
மன்றுள்
ஆடிய பெருமான் அன்பர்க் காவன
ஆகும் என்று
நாடிய மனத்தினோடு நாயன்மார்
அணைந்த போது
கூடிய மகிழ்ச்சி பொங்கக் குறைவறக்
கொடுத்து வந்தார்.

நாம் தேடிய பொன், பொருள் மற்றுமுள்ள செல்வமெல்லாம் சிவ பெருமானது அடியார்க்கே உரியன என்று எண்ணிய உள்ளத்தோடு, அம்பலவாணரது அடியார்க்கு ஒரு சிறிதும் குறைவற்ற அன்புடன் வேண்டு வன அள்ளி அள்ளித் தந்து அன்பு செய்து வந்தார்.

முத்தநாதன் என்ற மன்னன் இவ ருடைய வளமை மிகுந்த நாடு நகரங் களைக் கைப்பற்ற வேண்டும் என்ற எண்ணத்தினால் போருக்கு வந்தான். பேராசையால் நால்வகைச் சேனை களுடன் வந்த அவனை, புரமெரித்த அரனார் திருவருளால் நாயனார் வென்று புறங்காணச் செய்தார். பின் முறை வல்ல மெய்ப் பொருள் நாயனாரால் பன்முறை தோற்று அவமானப்பட்டு அகன்றான் முத்தநாதன்.

முத்தநாதன் போர் புரிந்து நாய னாரை வெல்லுந் திறமையில்லாது வருந்தினான். அவனது அறிவு வேலை செய்யத் தொடங்கியது. அடியார் வேடம் பூண்டவர்மீது நாயனார் கொண்டிருந்த ஒப்பற்ற அன்பின் திறத்தை உணர்ந்தான். ஆதலால், திருநீறும், கண்டிகையும் புனைந்து சிவ



னடியார் போல் சென்று நாயனுரைக் கொன்று வர வேண்டும் என்று எண்ணினுன்.

மெய்யெலாம் நீறு பூசி
வேணிகள் முடிந்துக் கட்டிக்
கையினிற் படைக ரந்த
புத்தகக் கவளி ஏந்தி
மைபொதி விளக்கே என்ன
மனத்நினுட் கறுப்பு வைத்துப்
பொய்தவ வேடம் கொண்டு
புகுந் தனன் முத்த நாதன்.

திருநீறு பூசிக் கொள்வதற்கு விதி முறை உண்டு. அந்த விதிமுறைகளை யறியாத முத்தநாதன், எந்த எந்த அங்கங்களில் எவ்வாறு திருநீறு புனைய வேண்டுமோ அந்த முறையின்றி, உடம்பெல்லாம் திருநீறு பூசிக்கொண்டான். ஜடாபாரம் பூண்டு முடித்துக் கட்டிக் கொண்டான். பெரிய வாளைப் பட்டுத் துணியில் மூடி மறைத்துப் புத்தகம் போல் கட்டி ஏந்தினுன். உள்ளம் கறுத்திருந்தாலும் வெளியே ஒளி செய்யும் விளக்கே யென்று சொல்லும்படி யிருந்தது அவனது தவக் கோலம்.

மனத்திலே வஞ்சனை வைத்துத் தவ வேடம் போல் பொய் வேடம் பூண்ட, கருணை சிறிதுமில்லாத பாதகனுகிய முத்தநாதன், கொடிகளாடும் உயர்ந்த மாளிகைகள் வரிசையாக உள்ள வீதி வழியே சென்று சேதியர்பெருமான் வாயிலையடைந்தான்.

மெய்ப் பொருள் நாயனுர் அடியார் மாட்டு அளவுகடந்த அன்புடையவரன்றோ? ஆதலால், தவ வேடம் பூண்ட முத்தநாதனை யாரே தடுப்பார்?

கடையுடைக் காவ லாளர்
கைதொழு தேற நின்றே
"உடையவர் தாமே வந்தார்;
உள்ளெழுந் தருளும்" என்னத்
தடைபல புக்க பின்பு
தனித்தடை நின்ற தத்தன்
"இடைதெரிந் தருள வேண்டும்
துயில்கொளும் இறைவன்"என்றுன்

பெரிய சிவனடியார் வந்திருக்கிறுர் என்று ஏவலரும் காவலரும் கைதொழுது "எம்மையுடையவர் தாமே வந்தார். எழுந்தருளும்" என்று தடையின்றி உபசரித்து உள்ளே விடுத்தனர்.

முத்தநாதன் பல வாயில்களையும் கடந்து கடைசியில் உள்ள திருவனுக்கன் வாயிலை அடைந்தான். மெய்ப் பொருள் நாயனுர் பள்ளியறையில் படுத்து ஒய்வு எடுத்துக் கொண்டிருந்தார்.

அரசமாதேவியார் அருகில் இருந்து கணவனுக்கு ஏற்ற திருத்தொண்டினைப் புரிந்து கொண்டிருந்தார். அந்த இடத்தினைத் தத்தன் என்ற காவலன் காவல் புரிந்து கொண்டிருந்தான். அறிவின் மிக்க அவன் கூர்த்தமதி படைத்தவன். குறிப்பு உணர்வதில் வல்லவன். பொய்ம்மை வேடம் புனைந்து வரும் புல்லனை நல்லன் அல்லன் என்று ஐயங்கொண்டான். ஆயினும், அவனைத் தடுப்பதும் தவறு; தடுக்காதிருந்தால் மன்னருக்குத் தீங்கு வரும். இவ்வாறு இருதலைக் கொள்ளி எறும்பாகத் தவித்தான். பின்னர், ஒருவாறு தெளிந்து பணிவுடனும், மரபு வழுவாமலும், "சுவாமி! அரசர் பெருமான் துயில் கொண்டிருக்கிறுர். அவர் உங்களை வரவேற்கவும், தாங்கள் அவருக்கு அருள் புரியவும் இது ஏற்ற சமயமன்று. சமயமறிந்து மன்னரிடம் செல்ல வேண்டும்" என்று மிக மிகச் சாதுர்யமாகத் தடையுரைத்தான்.

"நான் அரசருக்குத் தருமத்தைச் சொல்லி உறுதி கூற வந்திருக்கிறேன். நீ நில்" என்று தத்தனிடம் கூறிய முத்தநாதன் தடையுரையை ஏற்காமல் உள்ளே சென்று விட்டான். அங்கே பொன்னுலாகிய கட்டிலில் மன்னர் துயின்று கொண்டிருந்தார். அரசமாதேவி அருகிலிருந்து கணவனுரின் பாதங்களை வருடிக் கொண்டிருந்தார். முத்தநாதனைக் கண்டதும், அரசமாதேவி துணுக்குற்று எழுந்து கணவனுரை எழுப்பினுர். மெய்ப் பொருள் நாயனுர் எழுந்து பார்த்தார். மெய்யெல்லாம் திருநீறு பூசி, உருத்திராக்கம் பூண்டு, தவவேடத்துடன் வந்திருந்த முத்தநாதனைக் கண்டதும், "தேவ தேவருடைய திருத்தொண்டர்" என்று கரங்கள் கூப்பித் தொழுதார்; எதிரோடி வணங்கினுர்.

"மங்கலம் பெருக மற்றென்
வாழ்வுவந் தணைந்த தென்ன
இங்கெழுந்தருளப் பெற்ற
தென்கொலோ?" என்று கூற
"உங்கள் நாயகனுர் முன்னம்
உரைத்தவா கமநூல் மண்மேல்
எங்குமில் லாத தொன்று
கொடுவந்தேன் இயம்ப" என்றுன்

தனம் படைத்த ஒருவர் தூங்கும் போது ஒருவர் சென்றுல் தூக்கத்துக்குப் பங்கம் வந்ததே யென்று வருந்துவர். மெய்ப்பொருள் நாயனுரோ மகிழ்கின்றுர். "மங்கலம் பெருக ; மற்றென் வாழ்வு வந்து அணைந்தது"



இளமையிற் கல்

சமையல் பயிலும் சிறுமி. அவளே வருங்காலக் குடும்பத் தலைவி. கற்றுக்கொடுங்களேன் ஒரு நாள். எவ்வளவு விரைவில் கற்றுக்கொடுக்கிறீர்களோ அவ்வளவுக்கு அவ்வளவு மேல்.

உங்கள் குழந்தைகளுக்கு நீங்கள் இப்போதே கற்றுக்கொடுக்க வேண்டிய மற்றொரு பாடம், பற்களையும் ஈறுகளையும் ஒழுங்கு தவறாமல் பராமரிப்பதே. பற்சிதைவும் ஈறு நோய்களும் வாராமல் பாதுகாத்த உங்கள் உதவிக்காகப் பிற்காலத்திலே நன்றி செலுத்துவார்கள் அவர்கள்.

போர்ஹான்ஸ் பற்பசைகொண்டு பற்களையும் ஈறுகளையும் பாதுகாத்துக்கொள்ள இன்றே பழக்குங்கள் உங்கள் செல்வங்களை. அது ஒரு பல் வைத்தியரின் தயாரிப்பாகும்; ஈறுகளின் நலனுக்காக டாக்டர் போர்ஹான்ஸ் தயாரித்த விசேஷத் துவர் மருந்துகளை அடங்கிய பற்பசை உலகில் இதுவொன்றே. தவறாமல் உபயோகித்துவந்தால் பளிச்சென்ற வெண் பற்களையும் பாங்கான உறுதிவாய்ந்த ஈறுகளையும் பெற்று விளங்குவது திண்ணம்.

"CARE OF THE TEETH AND GUMS" என்ற சிறிய வண்ணப் புத்தகத்தை இலவசமாகப் பெற, தபால் செலவுக்காக 10 பைசா தபால் வில்லைகளை இணைத்து எழுதவும்: மானேர்ஸ் டெண்டல் அட்வைசரி ப்யூரோ, தபால் பை நம்பர் 10031, பம்பாய்.



C.4

COUPON

Please send me a copy of the booklet
"CARE OF THE TEETH AND GUMS"

Name ____________________

Address ____________________

____

என்று கூறித் துதித்தார். ''பெருமானே! தேவரீர் இங்கெழுந்தருளப் பெற்றது என்கொலோ? அடியேனால் ஆக வேண்டியது என்னவோ?'' என்று வினவினார்.

''அரசரேறே! உங்கள் சிவபெருமான் முன்னர் திருவாய் மலர்ந்தருளிய ஆகமநூல் ஒன்றைக்கொண்டு வந்திருக்கிறேன். இது மண் மேல் எங்கும் இல்லாதது. உனக்கு அதனைக் கூற வந்தேன்'' என்றான் முத்தநாதன்.

சிவபெருமானிடம் சிறிதும் அன்பில்லாதவனாகிய முத்தநாதன், ''உங்கள் சிவபெருமான்'' என்று கூறினான். ''மண்மேல் எங்கும் இல்லாத ஒன்று கொடு வந்தேன் இயம்ப'' என்றும் கூறினான். ஆம்! அவனது வஞ்சனை மண் மேல் எங்கும் இல்லாததுதானே?

முத்தநாதன் கூறியதைக் கேட்ட சேதி நாட்டுச் செம்மல் உள்ளம் உவந்தார். ''அடியேனுக்கு இதனினும் உயர்ந்த பேறு வேறு உண்டோ? எம்பிரான் அருள் செய்த இந்த மாறு பாடில்லா ஆகமத்தை அடியேனுக்கு உபதேசித்தருள வேண்டும்'' என்று வேண்டிக் கொண்டார்.

''வேந்தர் வேந்தே! சிவாகமத்தை உபதேசிக்க வேண்டுமாயின் மலர் மாலை சூடிய கூந்தலையுடைய அரசியார் நீங்க, நீரும் நானும் வேறு இடத்தில் இருக்க வேண்டும்'' என்று கூறினான் முத்தநாதன். ''நாறுபூங் கோதை மாது தவிரவே நானும் நீயும் வேறிடத் திருக்க வேண்டும்'' என்பது அவனது வார்த்தை.

'இப்பொழுது நான் இங்கே வந்திருப்பதால், அரசமாதேவி இனி மலர் சூடும் தன்மையைத் தவிர்ந்து விடப் போகிறார். கொல்ல வந்த என்னைக் கும்பிடும் நீ சிவலோகம் போகப் போகிறாய்; நான் நரக லோகம் போகப் போகிறேன். இப்போது ஒன்றாக உள்ள நாம் மேலும் கீழுமாக வேறு லோகங்கட்குப் போக வேண்டும்' என்ற பொருளும் இதற்குள் அமைந்துள்ளது.

மகாலட்சுமி போல் தன் அருகே நின்ற அரச மாதேவியை அன்புடன் நோக்கிய நாயனார், ''பெண்ணே! நான் சிவாகமம் கேட்கப் போகிறேன். நீ அந்தப்புரம் செல்'' என்று பணித்தார். அரசமாதேவியார், கணவனாரைத் தொழுது அவரது ஆணையின் வண்ணமே அகன்றார்.

மெய்ப்பொருள் நாயனார் அடியவராக வந்துள்ள முத்தநாதனைத் தொழுதார். அவனை ஆசனத்தின் மேல் இருத்தி, தாம் கீழே இருந்துகொண்டு 'இனி அருளிச் செய்யும்' என்றார்.

கைத்தலத் திருந்த வஞ்சக்
கவளிகை மடிமேல் வைத்துப்
புத்தகம் அவிழ்ப்பான் போன்று
புரிந்தவர் வணங்கும் போதில்
பத்திரம் வாங்கித் தான்முன்
நினைந்தஅப் பரிசே செய்ய
''மெய்த்தவ வேட மேமெய்ப்
பொருள்'' எனத் தொழுது
வென்றார்.

பொய்த்தவ வேடங் கொண்ட அப்பாதகன், சுவடியை அவிழ்ப்பது போல், கைத்தலத்திலிருந்த பையில் வைத்திருந்த வடிவாளை எடுத்து, வணங்கி நின்ற குணங்குடி கொண்ட கோமானாகிய நாயனாரை, நினைத்து வந்தவாறே செய்து முடித்தான். அவன் என்ன செய்தான் என்று கூற வில்லை சேக்கிழார் பெருமான். அடியார்கள் மீது அவருக்குள்ள அளவற்ற அன்பு காரணமாக ''கொன்றான்'' என்று கூறாமல், ''நினைத்த அப்பரிசே செய்ய'' என்று கூறுகிறார். அவர் கூறுகின்ற முறை உள்ளத்தை உருக்கும்.

முத்தநாதன் செய்த செயலை வைத்து வெளிப்படையாகப் பார்த்தால் நாயனாரைக் கொன்று அவன் வென்றதாகத் தோன்றும். ஊன்றி நோக்கினால் கொல்ல வாளெடுத்த போதும் வேடமே மெய்ப் பொருள் என்று நாயனார் தொழுதபடியால் வென்றவர் அவரேயாவார். அதனால் தான் சேக்கிழார், ''மெய்த்தவ வேடமே மெய்ப் பொருளெனத் தொழுது வென்றார்'' என்று கூறுகிறார். ''வெல்லுமா மிகவல்ல மெய்ப் பொருள்'' என்கிறார் நம்பியாரூரர்.

வஞ்சக வேடங் கொண்ட வன்கணாளன் உட்புகுந்த போதே தத்தன் தன் கருத்தை அவன்பால் வைத்திருந்தான் அல்லவா? ஆதலால் உடனே உள்ளே சென்றான். அங்கு நிலவிய நிலையைக் கண்டதும் வாளை எடுத்து முத்தநாதனை வெட்டுவதற்கு ஓங்கினான். உதிரம் சோர விழுகின்ற நாயனார், அந்த நிலையிலும் தமது நீண்ட கரங்களை நீட்டி அவனைத் தடுத்து, ''தத்தா! நமர்'' (நமர் — நம்மவர்) என்று கூறி வீழ்ந்தார். மெய்ப்பொருள் நாயனார் அடியார்கள் மீது கொண்டிருந்த அன்பின் ஆழத்தைப் பாருங்கள்.

அரசர் ஆணையில் அளவற்ற மதிப்பு வைத்த தத்தன், முத்தநாதனை வெட்ட ஓங்கிய வாளை உறையிலிட்டு, மன்னரைத் தாங்கினான். (தொடரும்)



அரசனளித்த "அடி"

மூன்று அடிகள் ஒரு கெஜம், பன்னிரண்டு அங்குலங்கள் ஒரு அடி என்று குழந்தைகளுக்குக் கணக்கு வாத்தியார் சொல்லிக் கொடுக்கிறார். ஆனால் இந்த அளவுகள் முதலில் எவைகளைக் குறித்தனவென்று தெரியுமா? 'அடி' என்று சொல்லப்படும் அளவு, பன்னிரண்டாம் நூற்றாண்டில் இங்கிலாந்தை ஆண்டு வந்த முதலாவது ஹென்றி மன்னனின் பாதத்தின் நீளத்தையும், 'அங்குலம்' என்பது அவருடைய கட்டை விரலின் நீளத்தையும், 'கெஜம்' என்பது, கையை நேர் நோக்கி நீட்டிக்கொண்டிருக்கும்போது, அவருடைய மூக்கிலிருந்து கைக்கட்டை விரல் வரையுள்ள நீளத்தையும் குறித்த அளவுகள். ஆனால் அவருக்குப் பின் வந்த மன்னர்களின் கட்டை விரல்களைப் படைத்த பிரும்மன் அஜாக்கிரதையாக இருந்துவிட்டான் போலும்! விளைவு, 'அங்குலம்' ஆட்டம் கண்டுவிட்டது! 1224ம் ஆண்டில் இங்கிலாந்தில், மூன்று காய்ந்த உருண்டையான பார்லி தானியங்களை ஒன்றுடன் ஒன்றாக நீளப் போக்கில் வைத்து வரும் அளவை 'அங்குல'மாகக் கருத ஆரம்பித்தார்கள். - ருக்மிணி ராமன்

சிந்தனைக்கு

"எவன் வாக்குக் கொடுக்கு முன் மற்றவர்களைக் காட்டிலும் அதிகமாக நிதானிக்கிறானோ, அவனே கொடுத்த வாக்கைக் காப்பாற்றுவதில் மற்றவரைக் காட்டிலும் அதிக அக்கறை எடுத்துக் கொள்வான்!" -ரஸ்கின்

என்ன செய்வது?

ஸாமர் செட் மாம் என்னும் ஆங்கில ஆசிரியருக்கு ஸ்பெயின் நாட்டில் தமது புத்தகங்களின் விற்பனை மூலம் கணிசமான 'ராயல்டி' தொகை சேர்ந்து விட்டது. அதை அவர் தம் நாட்டுக்கு எடுத்துவரச் சட்டம் அநுமதிக்கவில்லை. எனவே, அவர் ஸ்பெயின் நாட்டுக்கே சென்று தங்கி அந்தத் தொகையைச் செலவழித்துத் திரும்புவது என்று திட்டமிட்டார்.

உயர்ந்த ரக ஓட்டல் ஒன்றுக்குச் சென்று சௌகரியமாகத் தங்கினார். தமக்குக் கிடைத்திருந்த ராயல்டி தொகை தீரும்வரை தங்கினார். புறப்பட ஒரு மணி நேரம் இருக்கும்போது ஹோட்டல் முதலாளி வந்து, "தங்களுக்கு நாங்கள் மிகவும் கடமைப்பட்டிருக்கிறோம். தாங்கள் எங்கள் ஹோட்டலில்வந்து தங்கியதால் எங்கள் ஹோட்டலின் மதிப்பு உயர்ந்துவிட்டது. எங்கள் வருமானமும் பெருகி விட்டது. எனவே தாங்கள் எதுவும் பில் தொகை தரவேண்டியதில்லை" என்றார்.



என்ன செய்வார் மாம்? எத்தனையோ முயன்றும், அந்நாட்டில் தமக்குக் கிடைத்த ராயல்டித் தொகையைச் செலவழிக்க முடியவில்லை.



கல்லே சாட்சி!

சேடாக் என்ற அராபிய வியாபாரியிடம் ஒருவன் இரண்டு சாட்சிகளை வைத்துக் கொண்டு ஐந்நூறு பொற் காசுகளைக் கடன் வாங்கியிருந்தான். சிறிது காலத்துக்குப் பிறகு சாட்சிகள் இருவரும் இறந்து விட்டார்கள். அவர்கள் இறந்த சேதி கேட்டுக் கடன் வாங்கியவன் மகிழ்ச்சியில் ஆழ்ந்தான். சேடாக் அவனிடம் கடனைத் திருப்பிக் கேட்டபோது "நீ கடன் கொடுத்ததற்குச் சாட்சியம் உண்டா?" என்று கடன் வாங்கியவன் மடக்கி மறுத்து மிரட்டி அனுப்பி விட்டான். சேடாக் வருத்தத்தோடு வீடு திரும்பினான்.

அப்போது சேடாக்கிடம் ஜாடிக் என்ற அறிவாளி ஒருவன் அடிமையாக இருந்தான். "உனக்காக வாதாடுகிறேன்" என்று ஜாடிக் நீதி மன்றத்துக்குப் போனான். அங்கு, "சாட்சிகள் இறந்து விட்டார்கள்; ஆனால் பொற்காசுகளை ஒரு பாறையின் மீது வைத்து என்னுடைய எஜமானர் எண்ணிக் கொடுத்தார். இப்போது அந்தப் பாறையைத்தான் சாட்சியத்துக்கு அழைக்க வேண்டும். நீதிமன்றம் அவகாசம் தந்தால் என் எஜமானர் செலவிலேயே அந்தப் பாறையைச் சாட்சியத்துக்கு அழைத்துக் கொண்டு வருகிறேன்" என்று ஜாடிக் கூறினான்.

கடன் வாங்கியவன், "அந்தப் பாறையாவது சாட்சியம் கூற வருவதாவது! அந்தப் பாறையை உருட்டிக் கொண்டு வருவதற்கே பதினைந்து ஆட்கள் வேண்டுமே?" என்றான் அவன்.

"பார்த்தீர்களா? பாறை சாட்சியம் கூறிவிட்டது! அந்தப் பாறை எங்கிருக்கிறது, எவ்வளவு பெரியது என்று கூறியதன் மூலம் இவர் கடன் வாங்கியது உண்மை என்று நிரூபணம் ஆகிவிட்டதல்லவா?" என்றான் ஜாடிக்.

நீதிபதி உண்மை உணர்ந்து தக்க தீர்ப்பு வழங்கினார்.

தகவல்: நிலவழகன்



மனைவியை நினைத்தாவது

டோக்கியோ நகரத்தில் ஓடும் ஒவ்வொரு டாக்ஸியிலும் டிரைவருக்கு எதிரே இருக்கும் கண்ணாடியில் அவருடைய மனைவியின் சிறிய போட்டோ பொருத்தியிருக்கும். மனைவியின் போட்டோவைப் பார்க்கும்போதெல்லாம் டாக்ஸியை ஜாக்கிரதையாக ஓட்டவேண்டும் என்று நினைவு வரும் அல்லவா, டிரைவருக்கு? அதற்காகத் தான் இந்த வழக்கத்தை மேற்கொண்டுள்ளனர்.

தகவல்: ஏ. கே. கந்தசாமி



மாமனார் வீடு சொர்க்கம்.... ஆனால்!

தமிழ் நாட்டில் ஆடி மாதத்தில் மாப்பிள்ளைகளை அழைப்பது போல் வங்காளிகள் வருடத்துக்கு ஒரு தினம் மாப்பிள்ளை தினம் (ஜமாய் ஷஷ்டி) கொண்டாடுகிறார்கள். இதைப் பற்றி ஒரு வேடிக்கைக் கதை உண்டு. ''ஜமாய் ஷஷ்டி'' தினத்துக்கென்று மாமனார் வீடு வந்த மாப்பிள்ளை ஒருவர் தடபுடலான விருந்தைப் பார்த்து அங்கேயே சில நாட்கள் தங்கிவிட்டார். ஒரு நாள் அவர் உண்ட மயக்கத்தில் சுவரில் ''சொசுர்பாடி சொர்க்கவாசி'' என்று எழுதினார்.

ஏற்கனவே மாமனார், மாப்பிள்ளை அதிகம் தங்கியது குறித்துச் செய்வதறியாமல் தவித்துக் கொண்டிருந்தார். எரிகிற அடுப்பில் எண்ணெய் ஊற்றியது போல் மாப்பிள்ளை சுவரில் எழுதியதைப் பார்த்ததும் கோபம் பொங்கிக் கொண்டு வந்தது மாமனாருக்கு. மாமனார் கொட்டை எழுத்தில் எழுதினார்: ''ஜோதி சார் தின் தாகே.''

வெளியில் சென்றிருந்த மாப்பிள்ளை வந்ததும், முதலில் அவர் கண்ணில் பட்டது மாமனார் எழுதியிருந்ததுதான். வந்தது ரோஷம். சாமான்களைக் கட்டிக் கொண்டு ஊருக்குக் கிளம்பி விட்டார்.

மாப்பிள்ளை கிளம்பும்படி அப்படி என்ன மந்திரத்தை மாமனார் எழுதினார்? மாப்பிள்ளை உண்ட மயக்கத்தில் எழுதியது: ''மாமனார் வீடு சொர்க்கம்!'' அதைத் தொடர்ந்து, மாமனார் எழுதியது: ''ஆனால் நான்கு நாட்கள் தங்கினால்மட்டுமே!''-தகவல்: கவிதா

நத்தை வேகம்!

உலகில் மிக மிக மெதுவாக நகரும் ஜீவராசி நத்தையாகும். நத்தை ஒரு மைல் தூரத்தைக் கடக்கும் நேரம் 2857 மணி 8 நிமிடம், 34 விநாடி. ஒரு மைல் தூரம் செல்ல நான்குமாத மாகும் என்பது விஞ்ஞான ரீதியாகக் கண்டறிந்த முடிவாகும்.

- ஓமலூர் இரா. சங்கரன்


பாவம் மாணவர்கள்!

மாணவர்கள் ஒழுங்காகப் பள்ளிக்குச் சென்று பாடம் படிக்கும் பொருட்டு அண்மையில் பிரஞ்சு அரசாங்கம் ஒரு சட்டம் கொண்டு வந்துள்ளது. அதன்படி, தகுந்த காரணமின்றிப் பள்ளி மாணவர்கள் அடிக்கடி 'டிமிக்கி' கொடுத்தால் அபராதம் விதிக்கப்படும் - மாணவர்களுக்கு அல்ல - அவர்களின் பெற்றோர்களுக்கு! இந்த அபராதம் அதிகபட்சம் 2,000 பிராங்குகள் வரையில் இருக்கும்.



அதுமட்டுமின்றி, பள்ளி நேரங்களில் பிரைமரி, செகண்டரி ஸ்கூல் சிறுவர்களைச் சினிமா தியேட்டர்களில் பார்த்தால், அவர்களைப் பிடித்து அருகில் உள்ள பள்ளியில் கொண்டு போய்ச் சேர்க்கவும் போலீசாருக்கு அதிகாரம் வழங்கியுள்ளது இச்சட்டம். பாவம்பிரான்சு நாட்டு மாணவர்கள்! -ஏ.கே.

என்ன கவலையோ?



கல்கி வெள்ளி விழா சிறுகதைப் போட்டியில் இரண்டாவது பரிசு ரூ 500/- பெற்ற கதை

பிரமை

கி. வேங்கடரமணி



அமைதியில் ஒன்றிப் போய், வேடிக்கை பார்க்கும் குழந்தையின் ஆவலுடன் மொட்டை மாடியின் ஒரு மூலையில் நின்று கொண்டிருந்தான் குருமூர்த்தி. அவனுடைய பார்வை தெருவின் மீது ஓடி, அதன் கோடிக்குச் சென்று நிலைத்திருந்தது.

நடமாட்டமே இல்லை தெருவில். ஆனால் அவனது பார்வையில் ஆர்வம் தணியவில்லை. மனத்தில் சுழித்த தீவிரம் அவனை, தொலைவில் யாரோ நடந்து வருவதுபோல் பிரமை கொள்ள வைத்தது.

'அவள் வழக்கமாய் வருகிற நேரம் தாண்டி விட்டது. தினமும் விளக்கு வைப்பதற்கு முன்னாலேயே வந்து விடுவாளே! ஏதாவது காரணம் இருக்கும். ஆனால் வராமல் இருக்க மாட்டாள். வந்ததும் அவசரம் அவசரமாக ஏதாவது சொல்லுவாள். அது எவ்வளவு சுவாரசியமாக இருக்கும்!'

குருமூர்த்தி தனக்குள் பேசிக் கொண்டே போனான்.

அவள் வருவதும், வந்து எதிரே நிற்பதும், தன்னுடைய பேச்சையே அதிசயமாக்கி ஏதாவது பேசுவதும் அவனது மனவெளியில் வந்து, வந்து போகும் காட்சிகள்.

ஒரு காலத்தில் அவன் தனிமையில் எப்படியெல்லாம் தன்னை மறந்து — தன்னையே அந்தத் தனிமையில் அழித்துக் கொண்டு—கலந்து போவான்?

அவனால் இப்போதோ நினைவுகளிலிருந்து விடுபட்டுத் தனியாகவே இருக்க முடியவில்லை. அத்தனையும் அவளைப் பற்றிய நினைப்புகள்!

இனிமையும், ஏக்கமும் நிறைந்த பிரமை. அதன் நடுவில் மென்மையான ஒரு பயத்தின் இழை. குருமூர்த்தியால் அதை ஒதுக்கவே முடியவில்லை.

நெஞ்சில் எதைப் பற்றி நினைத்தாலும், கடைசியில் அவளது தோற்றந்தான் முன்னால் அங்கே வந்து விடும்.

பகலின் பிரகாசமான ஒளி, மங்கித் தேய்ந்து கொண்டிருக்கிறது. மீண்டும் ஒரு மாலைப் பொழுது. ஊர் அதில் மயங்கிப் புதைகிறது.

'உலகத்திலேயே இதுதான் அழகான காட்சி' என்று தினமும்





அவன் நினைத்து, ஆசையோடு பார்க்கும் ஆற்றங்கரை மணல் மேட்டில் உள்ள இரட்டைப் பனை மரங்களைப் பார்த்தான் குருமூர்த்தி. தெருக் கோடியின் பின்புறத்துக் காட்சி அது. இருளின் கருமைத் துணுக்குகளாய், செவ்வொளியின் மையத்தில் அந்த இரு மரங்களும் ஒன்றுக்குப் பக்கத்தில் ஒன்றாய் இணைந்து நிற்கின்றன. அந்த இணையில் தான் எவ்வளவு கம்பீரம்! மனத்தால் ஆசைப்பட மட்டும் முடிந்த லட்சியம் மாதிரி அது!

அந்தக் காட்சியைப் போலவே இந்த நேரமும் அவனுக்கு மிகவும் பிடித்தமானது. ஒன்றில் ஒன்று கலந்து குழையும்—பகலின் வெம்மையும் இரவின் குளிர்ச்சியும் சந்திக்கும் — நேரம். மாலைப் பொழுது. குருதியோடு கலந்து இழையும் அநுபவம் என்றுதான் குருமூர்த்தியின் நினைப்பு.

கோவிலில் சந்தியாகாலப் பூஜையின் மணி மெதுவாக ஒலிக்கிறது. அதோடு உள்ளூர் வித்துவானின் நாகஸ்வர இசை கலக்கிறது.

. வசந்தா ராகம்!

இரண்டு மூன்று பறவைகள் அவசரமாகக் குரல் எழுப்பித் தலைக்கு மேலே சென்றன.

தெருக் கோடியையே பார்த்துக் கொண்டிருந்தான் அவன். வசந்தா ராகத்தின் இழைப்பு அவனது மனவெளியில் புகுந்து பரவி, அதன் இனிமை அவனுக்குப் பிடித்தமான கனவாக மாறிக் கொண்டிருந்தது. தூங்காமலே, இந்த உலகத்தின் அற்பமான தினசரி வாழ்விலிருந்து விடுபட்டு அந்தச் சாதனையில், காணும் கனவு இது.

தெருக்கோடியில் யாரோ நடந்து வரும் சலனம் அவனை விழித்துக்கொள்ள வைத்தது. அந்த நடையிலும் இருளோடு கலந்த மங்கலான ஒளியிலும் தனித்துத் தெரிந்த உருவத்திலும் அது யாரென்று அவனுக்கு நிச்சயமாகத் தெரியும். வசந்தாதான் வருகிறாள்.

இன்றைக்கு வழக்கத்தைவிட அதிக நேரம் தான் ஆகிவிட்டது. வந்ததும் வராததுமாய் நேரமானதற்கு ஏதாவது காரணம் சொல்லி விட்டுப் போய் விடுவாள்.

மாலைப் பொழுதின் பின்னழகோடு, அவன் அவசரமாக நடந்து வருவதைப் பார்த்துக்

கொண்டேயிருக்க வேண்டும் என்ற ஆசை அவனைத் தூண்டிற்று.

வசந்தாவுக்குப் பத்தொன்பது முடிந்து விட்டது. அவளுடைய உருவம் ஒளி விளிம்பிட்டு, நடுவே அழகைத் தேக்கி வைத்துவிட்டாற்போல் அந்தத் தெருக்கோடியில் இருந்து பரவும் வெளிச்சத்தில் தெரிகிறது. அவளுடைய அழகு வளர்ச்சி முழுமையை எட்டி விட்டது. ராகத்தின் முழுக் கற்பனை கனிவும் சஞ்சரித்துவிட்ட உணர்வின் புனிதம் அவள்.

இன்னும் விளக்கேற்றவில்லை என்ற ஞாபகம் வந்தது. அவன் போய்த்தான் அதைச் செய்ய வேண்டும். குருமூர்த்தி மாடிப் படிகளை அவசரமாகக் கடந்து கீழே வந்தான். அரிக்கேன் விளக்கை எடுத்து, தீப்பெட்டியைத் தேடி எடுத்துப் பற்ற வைத்தான். வழக்கமாக வசந்தாவே நடுக் கூடத்திலும், திண்ணை மாடத்திலும் விளக்கேற்றி வைத்து விட்டுப் போவாள். அவள் வர நேரமாகிவிடும் சில நாட்களில், துடைக்கப் படாத அரிக்கேன் விளக்கை, வேலைச் சுமை போல நினைத்து அவன் பொருத்துவான்.

தெருப் படியிலும், முன் தாழ்வாரத்திலும் மெல்லிய — அவன் கேட்டுப் பழகிப் போன — காலடி ஓசை கேட்டது.

விளக்கைத் தூண்டி விட்டு நிமிர்ந்தான் குருமூர்த்தி. வசந்தா கூடத்தில், எதிரே வந்து நின்றாள். ''நேரமாகி விட்டது இன்றைக்கு'' என்றாள் தலைப்பால் கழுத்தில் துளித்த வியர்வையை ஒற்றிக் கொண்டு.

''ஆமாம். நானும் மாடியில் நின்று அப்போதே பிடித்துப் பார்த்துக் கொண்டிருந்தேன்.''

அவள் பதில் எதுவும் சொல்லவில்லை. இத்தனை நேரம் எவ்வளவு பேச்சுப் பேசியிருப்பாள்? ஏன் இன்றைக்கு எதுவுமே பேசக் காணோம்?

குருமூர்த்தி அவளுடைய முகத்தையே பார்த்தான். மனசை அடக்கி ஒடுக்க வேண்டும் என்று முயன்றும் முடியவில்லை. அவளிடம் மெல்லிய, ஆனால் ஒரே விநாடியில் ராகத்தின் ஜீவனைத் தொட்டுக் காட்டி விடுவதாக, வருத்தம் கலந்த சாயை தெரிந்தது.

''இன்றைக்குக் கோவிலில் வித்துவான் வசந்தா ராகம் வாசித்தாரே, எப்படியிருந்தது, கேட்டாயா? என்றைக்காவது இப்படி ஒரு நாள் மனசையே அள்ளிவிடுகிற மாதிரி அமைந்து விடுகிறது அவர் வாசிப்பு.''

குருமூர்த்தி சட்டென்று பேச்சை மாற்றினான், அவள் முகத்தைப் பார்த்துவிட்டு.

''உம்.... சொல்லுங்கள்..... அப்புறம்?'' என்றாள் வசந்தா.

அதற்குள் அவளும் மாறி விட்டாள். அவளுக்கே சொந்தமான, அவளுக்கென்றே பழகிவிட்ட அந்த முக மலர்ச்சி வந்து விட்டது.

'இப்படித்தான் இருக்க வேண்டும். இவளுடைய வாழ்வு முழுதும் இவள் இப்படியேதான் இருக்க வேண்டும்' என்று நினைத்து ஆசைப்பட்டான் குருமூர்த்தி.

''வசந்தா! சில சமயங்களில், நாம் எதிர் பாராதபடி சுத்தமான இசை அலையாகப் பரவி வந்தால் எப்படியிருக்கிறது தெரியுமா?'' என்றான்.

''ஆமாம். என்னவென்றே சொல்லத் தெரிகிறதில்லை. அந்த நேரத்தில் மனசிலே ஏக்கம் நிறைந்து போகிறது. நானும் அதைக் கேட்டேன். ஏனோ அதைக் கேட்டதும் எனக்குக் கண்கள் நிறைந்து போய்...''

வசந்தா தன் கண்களைத் துடைத்துக் கொண்டாள்.

''ஏன் வசந்தா உடம்பு சரியில்லையா, உனக்கு?''

''ஊஹூம். அதெல்லாம் இல்லை. இன்றைக்கு நாழியாகி விட்டதா? அப்பா ஆளை அனுப்பி உங்களிடம் சொல்லிவிட்டு வரச் சொல்கிறேன் என்றார். நானே போய்ச் சொல்லிவிட்டு வருகிறேன் என்று புறப்பட்டேன். அப்பா உடனே திரும்பி வரச் சொன்னார்.''

''சரி!'' என்று கூறி அவளை வழியனுப்பத் தலையசைத்தான் குருமூர்த்தி.

வசந்தா தெருப்படி வரையில் சென்று தயங்கியபடியே நின்றாள். மறுபடியும் திரும்பி வந்தாள்.

''என்ன வசந்தா? தனியாகப் போகப் பயமா? நான் வீட்டு வரையில் கூட வரட்டுமா?'' என்று குழப்பத்தோடு கேட்டான் குருமூர்த்தி. வசந்தாவின் கலக்கமும் தயக்கமும் ஏன் என்று அவனுக்குப் புரியவில்லை.

''அதெல்லாம் வேண்டாம். நான் தனியாகவே போய் விடுவேன். அப்பாவுக்கு மறுபடியும் உடம்பு சரியில்லை. மத்தியானம் மயக்கம் வந்து விட்டது.''

''அடடா! எப்படி இருக்கிறது இப்போ?''

''இப்பொழுது சாதாரணமாக இருக்கிறார். அதனால்தான் நான் இன்றைக்குப் பாடத்துக்கு வர நேரமாகி விட்டது.''

''அப்படியானால் சீக்கிரமாகப் புறப்படு, வசந்தா. நான் நாளைக்கு வந்து அவரைப் பார்க்கிறேன். நீ கவலைப்படாமல் தைரியமாக இரு.''

வசந்தா தலையை அசைத்து விட்டுச் சென்றாள். கூடத்து மூலையில், உறையிலிருந்து இன்று மீட்கப்படாத, வசந்தாவின் விரல்களால் மீட்டப்படாத தம்பூர் மௌனமாக உறங்கிற்று.

குருமூர்த்தி தன்னுடைய கைகளை உதறிவிட்டு, விரல்களைச் சொடுக்கி விட்டுக் கொண்டான். மனத்தில் அவசரமாக வசந்தா தாவி விட்டுப் போன ஏமாற்றம் கலந்த வருத்தம் அவனுக்குப் பிடிக்கவேயில்லை.

அவன் என்ன நினைத்தான்? மொட்டை மாடியில், தனியே நின்று அவன் எப்படியெல்லாம் கற்பனை செய்தான்?

வசந்தா கூடத்தில் அமர்ந்து சுருதியை இழைத்துப் பார்ப்பாள். அதே வசந்தா ராகத்தை அவனைப் பாடச் சொல்லவேண்டும். மோகனமான லயிப்பில் அவள் பாடிக் கொண்டேயிருப்பாள். அவளுடைய இமைகள் தானாகவே மூடிக் கொள்ளும். அந்த அற்புதமான தோற்றம்! அவள் குரலைக் கேட்பதிலும், அவளைப் பார்த்துக் கொண்டேயிருப்பதிலும் அவன் தன்னை அழித்துக்


ஜலதோஷத்தை எதிர்க்க

வாட்டர்பரீஸ் காம்பவுண்ட்


சிவப்பு லேபில்

சாப்பிடுங்கள்









சாதாரண ஜலதோஷம்கூட அபாயகரமானது தான். அது உடலைப் பலவீனப் படுத்தி, நோய்களை எதிர்க் கும் சக்தியைக் குறைத்து, நோய்கள் எளிதில் பீடிக்கும் நிலையை ஏற்படுத்துகிறது. வாட்டர்பரீஸ் காம்பவுண்ட் மூன்று விதங்களில் அளிக்கும் பலன் ஒப்பற்றது. அதிலுள்ள கிரியோஸோட் மற்றும் க்வயகால் ஜலதோஷத்தை குணப்படுத்து கிறது. இரும்பு சத்து, பல மளிக்கும் சத்துக்கள், மால்ட் மற்றும் ஸ்ப்ளீன் சாரங்கள், பசியைத் தூண்டு கின்றன, இழந்த சக்தியை ஈடு செய்கின்றன, குண மான நோய் மீண்டும் வராமல் தடுக்கும் சக்தியை யூட்டுகின்றன.
எல்லாக் கால நிலைகளிலும் நோய்களை எதிர்க்கும் சக்தி பெற சிவப்பு லேபிலுள்ள வாட்டர்பரீஸ் காம்பவுண்ட் சாப்பிடுங்கள்.

வாட்டர்பரீஸ் காம்பவுண்டில் கலந்துள்ள கிரியோஸோட் மற்றும் க்வயகால் சுவாசக் குழாய்களில் கிருமிகளால் அபாயம் ஏற்படாமல் பாது காக்கின்றன. கபத்தை இளக்கி வெளியேற்றி சுவாசப் பைகளை சுத்தமாக வைக் கின்றன. இருமல், ஜலதோ ஷம், சுவாசக் குழாய்களில் கபம் கட்டுதல், காச சம்பந்த மான உபாதைகள் முதலிய வற்றை எதிர்க்கவும் வாராமல் தடுக்கவும் உதவுகின்றன.

வாட்டர்பரீஸ் காம்பவுண்ட்

இருமல், ஜலதோஷம், சுவாசக் குழாய்களில் கபம் கட்டுதல், காச சம்பந்தமான உபாதைகள் முதலியவற்றை எதிர்க்கும் சக்தியை உடலுக்கு அளிக்கிறது

வார்னர் ஹிந்துஸ்தான் லிமிடெட், பம்பாய்

கொள்வான். அவள்.... வசந்தா.... அவன் அருகில் — அவனுக்கு மிக மிக அருகில்...

குருமூர்த்தி தலையைப் பலமாக அசைத்துக் கொண்டான். வசந்தாவின் அழகுத் தோற்றத்திலிருந்து தனது மனகம் கற்பனைகளும் விடுபடும் மட்டும் அவன் தன்னையே உலுக்கிக் கொண்டான்.

கடைசியில் அவனாலேயே தாங்க முடியாத வேதனையும் ஏமாற்றமும் வெறியாக அவனைப் பிடித்துக் கொண்டன.

நல்ல வேளை, இன்று வசந்தா உடனேயே திரும்பி விட்டாள். இல்லாவிட்டால்?

வசந்தா அவனிடம் இப்பொழுதெல்லாம் பாடம் கேட்பதாக வெறும் பாவனைதான். நாதத்தை உபாசிப்பதில் அவள் எவ்வளவோ தூரம் முன்னால் சென்று விட்டாள்—அவனைப் பின்னே நின்று அதிசயித்து வேடிக்கை பார்க்கும்படி செய்து விட்டு. குருமூர்த்தி இந்த உண்மையை நன்றாக உணர்ந்திருந்தான். ஆயினும் அவள் தினம் பயிற்சிக்காக வருவதை வேண்டாம் என்று சொல்லி நிறுத்திவிட மனம் வராமல் தவித்தான்.

அழகாகச் சலனமின்றி உட்கார்ந்து கொண்டு வசந்தா கருதியை மீட்டும் அந்தத் தோற்றம்!

குருமூர்த்தி நெஞ்சை அழுத்திக் கொண்டு கூடத்தில் அங்குமிங்கும் படபடப்போடு நடந்தான். பிறகு தம்பூரை உறை நீக்கி மாட்டினான். ஒதுக்க முயன்றும், வசந்தா ராகம்தான் நினைவில் சுழன்று வந்தது.

அவன் பாடினான், பசியும் களைப்பும் தன்னை முழுதும் மயங்கி விழச் செய்யும் வரை பாடிக் கொண்டேயிருந்தான். கடைசியில் அந்த மயக்கத்திலேயே தன் வெறியை முழுதும் இழந்துவிட்டுத் தூங்கியும் போனான்.

2

ஐந்து வருஷங்களுக்கு முன்னால் ஒரு மாலைப் பொழுதில், சிவன் கோயில் மண்டபத்தில் யாருமே இல்லாத தனிமையில் குருமூர்த்தி தன்னையே அழித்துக் கொண்டு விட்டவன் போல் தூணில் சாய்ந்திருந்தான். தன்னைச் சுற்றிலும் காலம் அசைவின்றித் தேங்கி விட்டதாகப் பிரமித்துப் போயிருந்தான் அவன்.

மனம் நிறைய ஏதோ ஒரு ராகம் பிரவாகம் எடுத்துக் கொண்டிருந்தது. அதைத் தாங்க முடியாமல், மெல்லிய குரலில் அவன் வாய்விட்டே பாடி, அந்த மண்டபம் முழுவதும் தன் உயிரின் அநுபவத்தை இனிமையாக நிறைத்துக் கொண்டிருந்தான்.

இசை அவனது பரம்பரைச் செல்வம். 'இசைக்காகவே நான்; எனக்காகவே இந்த ஜீவகீதம்' என்ற பைத்தியம் அவனுக்கு. அவனுடைய அப்பா உலகின் அத்தனை வித்துவான்களுக்கும் லட்சிய குரு. அழியாத சாகித்தியங்களில் எண்ணற்றவைகளை அவர் பயின்றிருந்தார். ஒவ்வொரு ராகத்திலும் அவர் காட்டும் பிரகாசம் தனித்தனியாய் ஒளிரும். எட்டு வயதிலேயே அவரோடு அவர் வழியிலேயே நடக்கத் தொடங்கினவன் குருமூர்த்தி. பதினெட்டு வருஷ சாதனை அவனை வெளி உலகத்துக்கு அறிமுகப்படுத்தி வைக்கவில்லை. அவனுக்குள்ளே எல்லையற்ற மிகப் பெரிய பிரபஞ்சத்தைப் படைத்துக் கொடுத்து விட்டது. குருமூர்த்தி அதிலேயே வாழ்ந்தான். அவனுக்கு உலகத்தில் ஒரே பந்தம், மனம் ஒன்றிப் போய் லயிக்கும் சங்கீதந்தான். வீடும், வயிற்றுக் கவலையை மறக்கும்படி கொஞ்சம் நிலமும் இருந்தன.

அவனுடைய குரல் மேடையில் பெருகிப் பிரவாகமெடுக்கவில்லை. அதில் தனக்கு ஆசையும் இல்லை; நம்பிக்கையுமில்லை என்று கூறிக் கொள்வான். 'இசை எனக்கு நானே ஏற்றுக் கொண்ட தவம்' என்கிற எண்ணம் அவனுக்கு. பித்தம் கொண்ட நிலையில், தனிமையில் உருகி உருகிப் பாடிக்கொண்டேயிருப்பான். கண்கள் அந்த உருக்கத்தில்



நீண்ட நேரம் மூடிக் கிடந்து திறக்கும் போது அதீதமான பிரகாசம் பொருந்திய நீர் முத்துக்களை ஏந்தி நிற்கும்.

அன்று குருமூர்த்தி கண்களைத் திறந்த போது, பதினைந்து வயதுப் பெண்ணான வசந்தா தூணில் சாய்ந்து நின்றிருந்தாள்.

அலட்சியத்தோடு அவளைப் பார்த்தான் அவன். அவள் முகத்தில் அழகாகப் பதிந்திருந்த உருக்கத்தை அவன் கவனிக்கவில்லை. அவனுக்கு ஒரே ஆத்திரம். தன் ஏகாந்தத்தைக் கலைக்க இவள் ஏன் வந்தாள் என்ற வெறுப்புத்தான் அவனிடம் மிகுந்திருந்தது.

வசந்தா இரண்டு நிமிஷங்கள் அவனையே பார்த்துக் கொண்டு நின்றாள். அதற்குமேல் அவளால் அவனது பார்வையின் உக்கிரத்தைத் தாங்க முடியவில்லை. தலை குனிந்து மெள்ள நடந்து சென்று விட்டாள்.

அவளுடைய உருவம் கோயிலின் நுழை வாயிலைக் கடந்து மறைந்தபிறகு குருமூர்த்தியின் கண்கள் மீண்டும் நாத மயக்கத்தில் ஒன்றிக் கலந்து மூடிக் கொண்டன.

அடுத்த நாள், அதற்கு அடுத்த நாள் என்று இப்படியே தினம் தவருமல் சாயங்கால வேளைகளில் — அவன் தனது ஏகாந்த சாதனையில் ஈடுபட்டிருக்கும் போதெல்லாம் அவனுக்குத் தெரியாமலே வசந்தா அங்கே வந்து நிற்பாள். அவன் விழித்துக் கொண்டதும் மௌனமாக வெளியேறிச் சென்று விடுவாள்.

கடைசியில் ஒரு நாள் பொறுமையிழந்து, ''தினம் நீ இங்கே ஏன் வருகிருய்? உனக்கு என்ன வேண்டும்?'' என்று கேட்டு விட்டான் குருமூர்த்தி.

தாங்க முடியாத ஆவலுடன், ''உங்களைப் போலவே பாட எனக்குக் கற்றுக் கொடுக்க வேண்டும்'' என்ருள் வசந்தா.

இதைக் கேட்டுக் குருமூர்த்தி கர்வத்தோடு சிரித்தான்.

''உனக்கா? என்னைப் போலவா?''


''ஆமாம்!''

வசந்தா அசையாமல் அப்படியே நின்ருள், ''நீங்கள் சம்மதம் என்று சொல்லாவிட்டால் நான் இங்கிருந்து போகவே மாட்டேன்'' என்று சொல்வது போல்.

''வசந்தா! வேண்டாம். நான் சொல்கிறதைக் கேள்.''

''மாட்டேன்'' என்று தலையசைத்தாள் வசந்தா. அந்தப் பிடிவாதம் அவனையே அசைய வைத்து விட்டது. குருமூர்த்தி கேட்டான்: ''உன்னுல் வருஷக் கணக்காய்க் காத்துக் கொண்டிருக்க முடியுமா? என்னைப் போலப் பாட வேண்டும் என்கிருயே, உன்னிடம் உனக்கே அத்தனை நம்பிக்கை இருக்கிறதா?''

''ஓ!'' என்று தலையசைத்த வசந்தா, ''உங்களைப் போல், இப்போது நீங்கள் பாடின அதே பாட்டை நானும் பாடட்டுமா?'' என்று கேட்டாள். கேட்டவள் அவன் பதிலுக்காகக் காத்திருக்கவில்லை. சன்னமான குரலில் பாடவே தொடங்கி விட்டாள், ஸ்வரம் துளிக்கூடப் பிசகாமல்!



— ''அம்மோவ்....பாரும்மா இந்தப் பூனையை! என் கையைப் பிடிச்சு இழுத்துண்டு, விட மாட்டேங்குது!''

குருமூர்த்தி மெதுவாகத் தலையை அசைத்தான். அவளுடைய குரலும் ஞானமும் அவனைத் திகைக்க வைத்தன.

''நாளைக்கு உன் அப்பாவையும் அழைத்துக் கொண்டு என் வீட்டுக்கு வா!'' என்று தன் சம்மதத்தைத் தெரிவித்தான் குருமூர்த்தி. வசந்தாவின் அழகு முகத்தில் பெருமை தாங்கவில்லை.

3

குருமூர்த்தியிடம் வசந்தாவை மையமாகக் கொண்ட பல மனப் பதிவுகள் தேங்கிக் கிடக்கின்றன. அவைகளில் முதல் நாள் அவள் அவனது மாணவியாக வந்த காட்சியை அவன் அடிக்கடி நினைத்துப் பார்ப்பான். அவளுடைய குழந்தை முகம், அதன் தெளிவையும் தாண்டிக் கொண்டு எட்டிப் பார்த்த ஆவல், பெருமை இவைகளையே மீண்டும் மீண்டும் நினைத்துக் கொள்வான். அந்தக் காட்சி மட்டும் நினைப்பில் மிகுந்திருக்க, மற்றதையெல்லாம் மறந்துவிட முடிந்தால் எவ்வளவு நிம்மதியாக இருக்கும்? — இப்படி எண்ணிப் பெருமூச்சு விடுவான் குருமூர்த்தி.

ஆனுல் காலம் அப்படியே இருப்பதில்லை. மனிதர்கள் நேற்றுப் போல் இன்று இருப்பதில்லை. காணும் பொருள் வளர்ந்து மாறும் போது, அதைக் கண்ட மனத்திலும் அதன் பிரதிபலிப்பாய்ப் புதிய ஆசைகள் தோன்ருமல் இருப்பதில்லை. மாறுவதும், மாற்றுவதும் என் வேலை என்று சொல்லாமல் சொல்லிக் கொண்டே கால ஓட்டம் விரைந்து கொண்டிருக்கிறது! மனிதன் சாதாரண நிலைக்கு வரும் போது காலத்தின் அடிமை.

'உன்னிடம்தான் வசந்தா சங்கீதம் கற்றுக் கொள்ள வேண்டும் என்று எனக்கு எண்ணம். அவளுக்கும் அதே ஆசைதான். ஆனுல் உன்னைக் கேட்க எனக்குத் தைரியமில்லை. உன் மேதையை நான் நன்ருய்ப் புரிந்து கொண்டிருக்கிறேன். அதனுல்தான் தயங்கினேன். வசந்தாவுக்கு உன் மாணவியாக இருக்கும் தகுதியிருக்கிறது என்று நீயே நினைக்கும்போது என் மனம் எப்படி ஆனந்தத்தால் பூரித்துப் போகிறது, தெரியுமா ?''

முதல் தடவை வசந்தாவை அழைத்துக் கொண்டு, அவளுக்குத் துணையாக வந்த அவள் அப்பா ராமநாதன் குருமூர்த்தியின் வித்வத்தை எவ்வளவு பாராட்டினுர்! அதைவிட அவனிடம் தமக்குள்ள மதிப்பை எத்தனை பெருமையோடு தெரிவித்தார்! அவனிடம் அவருக்கு இருக்கும் நம்பிக்கையை எப்படியெல்லாம் உணர்த்தினுர்!

நினைத்து நினைத்துப் பெருமைப்படக் கூடிய மாணவியாகத்தான் இருந்தாள் வசந்தா. அவளுடைய ஞானம் குருமூர்த்தியைத் திகைக்க வைத்தது. அவளைத் தன்னுடைய மாணவியாக ஏற்றுக் கொள்ளாமல் இருந்திருந்தால், அவன் தன்னுடைய வாழ்வில் பின்னுல் தன்னுலேயே ஈடு செய்ய முடியாத தவறு ஒன்றைச் செய்திருப்பான். அவன்

போற்றி ஆராதித்த நாதச் செல்வம் அவனோடு அழிந்திருக்கும்!

அவசரப்படாமல், தன்னுடைய முழுச் சக்தியையும் திறமையையும் கொண்டு ஒவ்வொரு ராகத்தையும் கீர்த்தனையையும் மிக நுணுக்கமாக அழகுபடுத்துவது போல், வசந்தாவுக்குச் சங்கீதத்தைப் பயிற்றுவித்தான் குருமூர்த்தி. அவளும் நாளுக்கு நாள் புதிய நம்பிக்கையை வளர்த்துக் கொண்டாள்.

மூன்று வருஷங்கள் மிக அவசரப்பட்டுக் கொண்டு ஓடி விட்டதாகத் தோன்றியது, ஒரு நாள் ராமநாதன் பெருமூச்சுடன் இந்தச் செய்தியைச் சொன்னபோது.

''குரு, இப்போது வசந்தாவுக்குப் பதினேழு வயது நடக்கிறது!''

''ஓ!'' என்று புதிய செய்தியைக் கேட்பது போல் வியந்தான் குருமூர்த்தி. காலத்தைப் பற்றியே கவலைப்படாதவனுக்கு வயதுக் கணக்கு எங்கே தெரியப் போகிறது?

''தாயில்லாப் பெண். எனக்கும் இப்போதெல்லாம் மனசும் உடம்பும் அவ்வளவு தெம்பாக இல்லை. வசந்தாவின் கல்யாணத்தை முடித்துவிட்டால் நான் நிம்மதியாக இருப்பேன்.''

''வசந்தாவுக்கா? அதற்குள்ளேயா?''

குருமூர்த்தியின் நெஞ்சில் மற்றொரு பதிவு புரண்டு வந்தது. வசந்தா முற்றிலும் புதிய தோற்றத்தில் காட்சி தந்தாள்.

அன்று மாலை அவள் வழக்கம் போலத்தான் வந்தாள். நேற்று மாதிரியே அவன் எதிரில் இன்றும் தம்பூரில் சுருதியை மீட்டத் தொடங்கினாள்.


குருமூர்த்திக்குப் பாடம் மறந்து போய் விட்டது. அவன் புதிய பார்வையில், புதிய வசந்தாவைப் பார்த்தான்.

இவளுக்குப் பதினேழு வயது ஆகிறது. ராமநாதன் இவளுக்குக் கல்யாணம் செய்துவிட வேண்டுமென்று அவசரப்படுகிறார். போன விநாடி வரையில் அவன் எவளைச் சிறுமியாக எண்ணிக் கொண்டிருந்தானோ அவள் அழகின் பூரண வளர்ச்சியும் கொண்ட யுவதியாக வளர்ந்து விட்டதை முதல் தடவையாகக் கண்டான் குருமூர்த்தி. உண்மையில் வயதையும் மீறிக் கொண்டுதான் வளர்ந்திருந்தாள் வசந்தா !

குருமூர்த்தி பதினொன்று வயதுச் சிறுமியாய், முதலில் கோவில் மண்டபத்தில் கண்ட வசந்தாவை நினைத்துக் கொண்டான். அதே ஆர்வம் கலந்த மலர்ச்சிதான் இப்போதும் வசந்தாவின் முகத்தில் நிறைந்திருந்தது.

ஆனால்.......

அவளுடைய வருகையை எதிர்பார்ப்பதில் இப்போது புதிய ஆர்வம் நிறைந்திருந்தது குருமூர்த்தியிடம். அவளுடைய தோற்றத்தைக் காண்பதில், மலர்ச்சி பரவ அவள் சிரிப்பதைக் காணும் அனுபவத்தில், ஏதேதோ உணர்ச்சிகள் அவனுள் சுழித்தன. மெய்ம்மறந்து அவள் ஒரு பிடிப்பில் நின்று,



''காலை பத்து மணிக்குப் பேனாவைப் பிடித்தாரானால் மாலை ஐந்து மணி வரை விடமாட்டார் எங்கள் ஊரார்க்கு!''

தனது குரலை இழைக்கும் போது, காதுகளோடு கண்களும் போட்டி போட்டுக் கொண்டு அவள் அமர்ந்திருக்கும் நிலையையும் ரஸிக்கத் தொடங்கின.

இத்தனை புதிய அனுபவங்களுக்கும் அடியில் புரண்ட விழிப்பு, அவனை நடுங்க வைத்தது. அந்த நடுக்கத்தோடும் குருமூர்த்தி வசந்தாவைப் பார்ப்பான். அவனுடைய மாறுதல் அவளுக்குப் புரிந்ததோ இல்லையோ ? அவனால் அவளைப் புரிந்துகொள்ள முடியவில்லை.

ராமநாதன் வரன் தேடுவதில் முனைந்திருக்கிறார் என்ற செய்தி அவனுக்கும் எட்டிற்று. ஆனால் அதைப் பற்றி வசந்தா எதுவும் பேசவும் இல்லை. அதற்காகக் கவலைப்படுவதாக அவள் காட்டிக் கொள்ளவும் இல்லை. ஆனால் அவனோ....?

வசந்தா என்னும் அந்த அழகுக் குவியலைப் பற்றி என்ன என்னவோ எண்ணினான்.

அவன் தவறு செய்யும் பிரமைக்கு அவளா காரணம்? அவனுக்குத் தன்னுடைய தவறு நன்றாகப் புரிந்தது. ஆனால் அதன் வெறியிலிருந்து மீள அவனால் முடியவும் இல்லை; அவன் முயலவும் இல்லை.

அந்த வருஷம் வசந்தாவின் கல்யாணம் நடக்கவில்லை. நாலைந்து வரன்கள் பார்த்து விட்டார் ராமநாதன். ஒவ்வொன்றும் ஏதோ காரணத்தால் தட்டிக் கொண்டேயிருந்தது. வசந்தா எதற்கும் கவலைப்படவில்லை. குருமூர்த்தி மட்டும் ஒவ்வொரு தடவையும் பரபரப்போடுதான் இருந்தான்.

4

அடுத்த வருஷம் வடக்கே பெரிய வேலையில் இருந்த ஒருவன் வசந்தாவை வந்து பார்த்தான். பையன் ஒண்டிக் கட்டை.


அவனுக்கு வசந்தாவைப் பிடித்து விட்டது. ராமநாதன் முதலில் தயங்கினார். அவருடைய உடல் நிலை இன்னும் மோசமாகிக் கொண்டே வந்தது. 'எப்படியாவது உடனே வசந்தாவுக்குக் கல்யாணத்தை முடித்துவிட வேண்டும்' என்று துணிந்து விட்டார்.

எல்லா ஏற்பாடுகளும் வேகமாக நடந்தன. குருமூர்த்தி எல்லாவற்றையும் பார்த்துக் கொண்டுதான் இருந்தான். எப்படியும் இந்த முயற்சியும் தோல்வியாகத்தான் போகும் என்று அவனுக்குள் ஒரு நம்பிக்கை. ஆனால் கல்யாணத் தேதிகூட வைத்து விட்ட பிறகு அவனுக்குத் தவிப்பாக இருந்தது. வசந்தா இன்னொருவனின் ஆட்சிக்குள், அவனது உரிமையாக ஊரை விட்டே போய் விடுவாள்.

அவளை இப்போது அடிக்கடி பார்க்கவும் முடிவதில்லை. அப்பாவின் உடம்பு, கல்யாணம் செய்து கொள்ளப் போகிற பெண்ணின் தயக்கம் இரண்டுமே அவளைத் தடுத்திருக்கும். பாட்டு நின்று விட்டது. 'ஒரு முறை அவளைத் தனியாகச் சந்திக்க முடிந்தால்......' என்ற நினைப்போடு, ராமநாதனைப் பார்க்கும் சாக்கில் சில தடவைகள் அவள் வீட்டுக்கே போய் வந்தான். ஒரு முறை அந்தத் தனிமை கூட வாய்த்தது.

''கல்யாணம் செய்து கொள்ளப் போகிறாய். இந்த ஊரையே மறந்து விட்டுப் போய்விடுவாய்'' என்று அவன் பேச்சை ஆரம்பித்தான்.

''அப்பாவுக்கு என் கல்யாணத்தை முடித்தால்தான் நிம்மதியாக இருக்கும். அவ்வளவு தவிக்கிறார்.....'' வசந்தாவின் பேச்சில் வருத்தமும் இருந்தது, பயமும் இருந்ததாகத் தெரிந்தது. எதற்கு எது காரணம் என்று புரிந்துகொள்ள முடியவில்லை அவனால்.



அதற்கு மேல் குருமூர்த்தி அவளிடம் எதுவும் பேசவில்லை. 'இனிமேல் ஒரே வழிதான்' என்று முடிவு செய்து வசந்தாவைப் பற்றி ஒரு மொட்டைக் கடிதத்தை எழுதி விட்டான். தபாலில் அதைச் சேர்க்கிற வரையில் இருந்த வெறி, பிறகு நடுக்கமாக மாறி விட்டது.

ஏதோ நடக்கப் போகிறது என்று அவன் ஒவ்வொரு நாளும் எதிர்பார்த்தான். கடைசியில் குறித்த நாளில் வசந்தாவின் கல்யாணம்தான் பிரமாதமாக நடந்தது. எல்லாரையும் போல் குருமூர்த்தியும் கல்யாணத்துக்குப் போனான். கூடத்தில் மூலையில் உட்கார்ந்திருந்தான். வசந்தா கழுத்தில் மாலையுடன், பக்கத்தில் கணவனுடன் அவனைத் தேடி வந்து வணங்கினாள். குருமூர்த்திக்கு ஏதேதோ உணர்ச்சிகள் மோதிக் கொண்டு வந்து தொண்டையை அடைத்தன. அவன் வசந்தாவை நிமிர்ந்து பார்க்கவே பயந்தான். திரும்பும் போது வசந்தாவின் கணவனின் உருவம் அவனது பார்வையில் பட்டது. 'அவளுக்குப் பொருத்தமான அழகன்தான்' என்று தனக்குள் சொல்லிக் கொள்ளாமல் இருக்க முடியவில்லை அவனால்.

'ம்.... அவ்வளவுதான். எல்லாம் முடிந்து விட்டது. வசந்தாகூடக் கூடிய சிக்கிரம் வெளியூர் போய் விடுவாள்.' திரும்பத் திரும்ப இதே நினைப்புத்தான் அவனுக்கு.

மூன்று மாதங்கள் வரையில் குருமூர்த்தி பைத்தியமாகத்தான் வீட்டோடு அடைந்து கிடந்தான். மணிக்கணக்காய்த் தெருக்கோடியைப் பார்த்துக் கொண்டு மாலைப் பொழுதில் நிற்பதும், இரண்டு மூன்று நாட்கள் ஊமையாய்ப் போய்விட்டவன் மாதிரி மௌனத்தில் புதைந்து போவதும், அப்புறம் திடீரென்று என்றோ ஒரு நாள் காலம் போகிறது தெரியாமல் தன்பாட்டுக்கு மெய் மறந்து பாடிக்கொண்டே யிருப்பதும் அவனுக்குப் பழக்கமாகி விட்டன.

5

'வசந்தா வந்திருக்கிறாள்' என்ற செய்தி தெருவில் பரவி, குருமூர்த்தியை எட்டிற்று. ஒன்று, இரண்டு என்று நாட்கள் ஓடி மாதக் கணக்காகக் கூட ஆகி விட்டது. 'வசந்தா ஒரேயடியாகப் பிறந்து வீட்டுக்கு வந்து விட்டாள். இனிமேல் அவளை அவள் கணவன் திரும்ப அழைத்துக் கொள்ளவே போகிறதில்லையாம்' என்று பேச்சு அடிபட்டது. குருமூர்த்தி இதுவரையில் அவளைச் சந்திக்கவேயில்லை. 'அவளும் தன்னை வந்து பார்த்து விடக் கூடாது' என்று நடுங்கிக் கொண்டிருந்தான் அவன்.

ஒரு நாள் தற்செயலாய் ராமநாதனைக் குளத்தங்கரை மதகடியில் சந்திக்க நேர்ந்த பொழுது என்ன பேசுவது என்று புரியாமல் நின்றான் குருமூர்த்தி. ராமநாதனும் அவனையே பார்த்துக் கொண்டிருந்தார். அவருடைய கண்கள் கலங்கின.

''குரு! நான் ஒரு தப்புப் பண்ணி விட்டேன். வசந்தாவை அவசரப்பட்டு, தாமரைப் பூவைச் சப்பாத்திப் புதர் மேலே போட்ட மாதிரி, அல்பப்புத்திக்காரனிடம் கொடுத்து விட்டேன். அவன் அவ்வளவு நகையையும் வாங்கி அநியாயத்திலே தொலைச்சுவிட்டான். வசந்தாவை அழ வைத்து வேதனைப் படுத்தி அனுப்பி விட்டான். எல்லாம் என் விதி. நான் இன்னமும் உயிரோடு இருந்து பார்த்துக் கொண்டிருக்கிறேன்.''

தலையில் அடித்துக் கொண்டார் அவர்.

''நீங்களே இப்படி அழுதால் அவள் எப்படித் துடிப்பாள்? கஷ்டம் ஒரு நாள் விடியாமலா போகும்?'' சிரமப்பட்டு ஏதோ சமாதானம் சொன்னான் குருமூர்த்தி.

''இல்லை, குரு. நான் உனக்கே வசந்தாவைக் கல்யாணம் செய்து வைச்சிருக்கணும். அவளுடைய மனசை ரசிக்கத் தெரிந்தவன் நீ. கௌரவம் — அது இது என்று ஏமாந்து விட்டேன்.''

குருமூர்த்தியின் நெஞ்சில் முள் குத்திற்று.

''இப்படியெல்லாம் இப்போது சொல்லாதீர்கள்.''

''இனி எதை நினைத்து என்ன செய்கிறது? தெய்வம் விட்ட வழிதான்.''

அவர் போய் விட்டார்.

அன்று மாலையே வசந்தாவையும் சந்திக்கும்படி நேர்ந்து விட்டது. குமுறிக் குமுறி அழுது தீர்க்க வேண்டும் என்று அவன் சிவன் கோவில் மண்டபத்துத் தனிமையை நாடிப் போயிருந்தான். மண்டபத்துத் தூணில் யாரோ சாய்ந்தபடி நிற்பது தெரிந்தது. கிட்ட நெருங்கியதும், அந்தச் சோகத்தின் நிழல் போன்ற உருவம் வசந்தாதான் என்று புரிந்தது. அவன் வந்து எதிரில் நின்ற போதும் அவள் அசைவற்று இருந்தாள்.

அவன் அவளையே பார்த்தான். அந்த முகம், அதன் அழகு முழுதும், வறண்டு போயிருந்தது. கண்களில் ஈரப் பசையேயில்லை.

''வசந்தா!''

பதில் இல்லை. ஆனால் மெதுவாகத் திரும்பியவள் நெட்டுயிர்த்தாள்.

இருவரும் அப்படியே நின்றார்கள். அவனுக்கு அழுவதற்குத் தைரியமில்லை. அவள் அழுகையையே மறந்தவள் போல் காணப்பட்டாள். மௌனத்தை அவனால் தாங்க முடியவில்லை.

''வசந்தா! நீ ஏன் இங்கே வந்தாய்?'' என்று கேட்டான்.

''ஏதோ பைத்தியக்கார ஆசை. மறுபடியும் நான் சின்னஞ் சிறு பெண்ணாய் ஆகிவிட மாட்டேனா, பழையபடி இங்கே நின்று கொண்டு உங்கள் பாட்டைக் கேட்க மாட்டேனா என்று ஓர் ஏக்கம். உம்....எல்லாம் மனசில் நினைத்துப் பார்த்துக் கொண்டு திருப்திப்பட வேண்டியதுதான். வாழ்கிறதிலே — நிஜத்திலே — என்ன இருக்கிறது? அத்தனையும் நெஞ்சைக் குத்துகிற துக்கத்தைத் தவிர வேறில்லை.''

கொஞ்ச நேரம் பேசாமல் இருந்துவிட்டு அவசரமாக மறுபடியும், ''நீங்களே சொல்லுங்கள். அவர் செய்ததை யெல்லாம் பேசாமல் பொறுத்துக் கொண்டிருந்தேன். கடைசியில் ஒரு நாளைக்கு என்னைப் பற்றி என்னவெல்லாமோ சொன்னார். கல்யாணத்துக்கு முன்னால் அவருக்கு மொட்டைக் கடுதாசு ஒன்று வந்ததாம். என்னால் தாங்க முடியவில்லை. 'அப்படியானால் என்னை ஏன் கல்யாணம் செய்து கொள்ள வேண்டும்?' என்று கேட்டேன். எல்லாம் பணத்துக்காகப் போடுகிற வேஷம் என்று தெரிஞ்சு போச்சு. அந்த வாழ்வே வேண்டாம் என்று வந்து விட்டேன். நீங்கள் சொல்லுங்கள். உங்களை விட உயர்வாக நான் யாரையும் நினைக்கவில்லை. என் பேரில் இப்படிப் பழி சொல்லலாமா?''

குருமூர்த்திக்கு நிலைகொள்ளவில்லை. 'நானா சொல்ல வேண்டும்?' என்ற கேள்வியால் அவன் தன்னைத் தானே அடித்து வீழ்த்திக் கொள்ளும் முயற்சியில் முனைந்திருந்தான். அவளுக்குச் சமாதானமாக ஏதாவது பொய்யைச் சொல்ல முடியாதவனாக நின்று விட்டான் அவன்.

6

கிட்டத்தட்ட ஒரு வருஷம் கழித்து ஒரு நாள். இத்தனை நாட்களும் ஊர்ப் பக்கமே தலை காட்டாமல் எங்கெல்லாமோ சுற்றி விட்டு வந்திருந்த குருமூர்த்தி தெருவுக்குள் நுழைந்து நேரே வசந்தாவின் வீட்டை நோக்கிச் சென்றான்.

படி ஏறும்போதே உள்ளிருந்து பிரவாகம் எடுத்த இசையின் உருக்கம் அவனைச் சிலிர்க்க வைத்தது. வசந்தாவின் குரலா இது?

மெள்ள அடியெடுத்து வைத்து உள்ளே சென்றான். கூடத்தில் தோளில் தம்பூரைச் சாய்த்து மீட்டியபடி, கண்களை மூடியவாறு அமர்ந்து வசந்தா பாடிக் கொண்டிருந்தாள். அவளுடைய கவனம் கலையாமல், மிக அமைதியாக நடந்து முற்றத்துக் குறட்டில் உட்கார்ந்து தூணில் சாய்ந்து கொண்டான் அவன்.

அவளை ஒரு முறை ஒரே விநாடி பார்த்தன அவன் கண்கள். பிறகு அவன் மூடிய இமைகளுக்குள் தன்னுடைய பார்வையைப் புதைத்துக் கொண்டான்.

பிரமையற்ற, சத்தியமான சௌந்தரியத்தின் சந்நிதியில் இருக்கும் பரவசம் அவனைத் தன் வசப்படுத்திக் கொண்டது.

எத்தனை நாட்களுக்குப் பிறகு கிடைக்கும் அமைதி! எவ்வளவு நேரம் அப்படியே கழிந்ததோ?

ராமநாதன், ''வசந்தா! வசந்தா!'' என்று கூவிக் கொண்டே உள்ளே வந்தார். கூடத்தில் அவள் எதிரில் வந்து நின்று, ''அம்மா, குழந்தை! உனக்குக் கடைசியில் விடிவு காலம் வந்து விட்டது. மாப்பிள்ளை கிட்டேயிருந்து தபால் வந்திருக்கு. தன் தவறுகளுக்கெல்லாம் மன்னிப்புக் கேட்டு உருக்கமாய் எழுதியிருக்கிறான்'' என்றார்.


வசந்தா கண்களைத் திறந்து அவரைப் பார்த்தாள். அவர் நீட்டிய கடிதத்தை வாங்கிப் படித்து விட்டுப் பெருமூச்சு விட்டாள். பிறகு நீர் நிறைந்துவிட்ட விழிகளோடு தாழ்வாரத்துப் பக்கம் திரும்பிய போது, ''அதோ, அவர்!'' என்று கூவினாள்.

ராமநாதனும் திரும்பிப் பார்த்தார்.

''அடடா! குருமூர்த்தியா?'' என்றார் திகைப்பு நீங்கி, தாடியுடன் புதைந்து மெலிந்து போயிருந்த அவனுடைய முகத்தை அடையாளம் புரிந்து கொண்டு.

''குரு! குருமூர்த்தி!'' என்று உரத்த குரலில் அழைத்தார் அவர்.

பதில் இல்லை.



குறைந்த செலவில் நிறைந்த சலவை!

காவேரி பார் சோப்



துணிகளை
துல்லியமாக
வெளுக்கிறது



மேட்டூர் கெமிகல் & இண்டஸ்ட்ரியல்
கார்ப்பொரேஷன் லிட்.,
மேட்டூர் அணை R.S. சேலம் ஜில்லா
மானேஜிங் ஏஜெண்ட்ஸ்:
சேஷசாயி பிரதர்ஸ்
பிரைவேட் லிமிடெட்

Criterion-MC-911

திலகரும் கோகலேயும்

ஜி. என். தாஸ்

இந்திய தேசிய காங்கிரஸின் சரித்திரத்தை எழுதிய டாக்டர் பட்டாபி சீதாராமய்யா, கோகலேயையும் திலகரையும் ஒப்பிட்டு நோக்கிப் பின்வருமாறு எழுதுகிறார்: ''கோகலேயின் திட்டம் நடைபெற்று வந்த ஆட்சிமுறையைச் சீர்திருத்த வேண்டும் என்பது; திலகரோ ஆட்சியையே மாற்றி யமைக்க வேண்டும் என்று விரும்பினார். ஆகவே கோகலே அன்று நடந்து வந்த அதிகார வர்க்கத்துடன் சேர்ந்து பணியாற்ற வேண்டியிருந்தது. திலகரோ, அந்த அதிகார வர்க்கத்தை எதிர்த்துப் போராடவேண்டியிருந்தது. எங்கெங்கெல்லாம் ஒத்துழைக்க முடியுமோ, அங்கங்கெல்லாம் ஒத்துழைக்க வேண்டும், எவ்வெப்போது ஆட்சியை எதிர்க்க முடியுமோ, அப்பொதெல்லாம் எதிர்க்க வேண்டும் என்று கருதினார் கோகலே. திலகரோ, அன்றைய ஆட்சி நடக்க விடாமல் இடையூறு செய்வதையே தமது திட்டமாகக் கொண்டிருந்தார். கோகலேயின் கவனமெல்லாம் ஆட்சியைப் பற்றியே இருந்தது. அதைச் சீர்திருத்துவது பற்றியே சென்றது.



பாரத நாட்டுச் சுதந்திரப் போராட்டத்தின் ஆரம்பகால வரலாறு மிதவாதிகள், தீவிரவாதிகள் என்ற இரு கோஷ்டிகளைச் சுற்றியே வளர்ந்தது. இக் கோஷ்டிகளின் தலைவர்களான கோபால கிருஷ்ண கோகலே, பாலகங்காதர திலகர் ஆகிய இருவரது வாழ்க்கையும் கருத்துக்களும் எப்படி முரண்பட்டும் ஒத்துப்போயும் பின்னிப் பிணைந்தன என்பதை இக்கட்டுரை ஆசிரியர் ஆராய்கிறார். இவ்வாண்டு மே மாதத்தில் கோகலேயின் நூற்றாண்டு விழாவை விமரிசையாகக் கொண்டாடினோம். சென்ற ஜூலை 31ம் தேதி திலகர் அமரரான நினைவுநாளில் அவரைப் போற்றி வணங்கினோம். சுதந்திரத் திருநாளை யொட்டி வெளியாகும் இந்த இதழ் கல்கியில் இவ்விரு மகான்களையும் பற்றிய இக்கட்டுரையை வெளியிட்டு அஞ்சலி செலுத்துகிறோம்.

★

திலகரின் கவனமெல்லாம் தேச மக்களைப் பற்றியும், அவர்களை உயர்த்துவது பற்றியுமே சென்றது. கோகலேயின் லட்சியம் அன்பும் தியாகமும். திலகரின் லட்சியம் தேச சேவையும் அதற்காக எந்தத் துன்பத்தையும் தாங்க வேண்டும் என்பதே. கோகலேயின் வழிமுறைகள் அந்நியனை நேசத்தால் வெல்ல முயன்றன. திலகர் அவனை அப்புறப்படுத்த முயன்றார். கோகலே உயர்குடி மக்கள், படித்த வகுப்பினரை நம்பினார். திலகர் லட்சோப லட்சமாயுள்ள பாமரமக்களை நம்பி வேலை செய்தார். கோகலேயின் போராட்டக் களம் சட்டசபை மன்றங்கள். திலகரின் போராட்டக் களம் கிராமப் பொதுச் சாவடி. கோகலே தமது கருத்துக்களை ஆங்கிலம் மூலம் விளக்குவார். திலகர் மராத்தியில் பேசுவார். நாம் சுயாட்சி பெற ஆங்கிலேயர்கள் ஏற்படுத்தியுள்ள பரீட்சைகளில் தேறி நம்மை நாம் சுதந்திரத்துக்குத் தகுதியுள்ளவர்களாக ஆக்கிக்கொள்ள வேண்டும் என்பது கோகலேயின் கட்சி. திலகரின் கருத்தோ, 'சுயராஜ்யம் என்பது ஒவ்வொரு இந்தியனின் பிறப்புரிமை' என்பது. கோகலே அவர் காலத்திய மக்களின் கருத்துக்கு இசைய வாழ்ந்தார். திலகரோ தீர்க்க தரிசனம் பெற்று எதிர் காலத்தை உற்று நோக்கி அதற்கேற்ப வாழ்ந்தார்.''

இருவரும் ஒரே ராஜ்யத்தில் — அதாவது மகாராஷ்டிரத்தில்—சித்பாவன் பிராமண வம்சத்தில் ஒரே சமயத்தில் பிறந்தவர்களாயினும் பிரிட்டிஷ் ஆட்சியைப் பொறுத்தமட்டில் இருவரும் முற்றும் மாறுபட்ட விதத்தில் செயல்பட்டனர். இதற்குக் காரணம் அவர்களது இளமைப் பருவ வளர்ப்பு முறையாக இருக்கலாம். கோகலே, நமது பாரம்பரியத்தில் அவ்வளவு தீவிரப் பற்றுதல் கொண்டவரல்ல. அவர் ருசியெல்லாம் பொருளாதாரம், ஆங்கில இலக்கியம், கட்டுப்பாடான வாழ்க்கை முறை—ஆகியவற்றில்தான் இருந்தது. சிறு வயதிலேயே பிரசித்திபெற்ற மகாதேவ் ரானடேயினால் ஆகர்ஷிக்கப் பெற்று அவரையே குருவாக ஏற்றுக்



கொண்டவர் கோகலே. ரானடே சிறந்த மிதவாதி. நிதானத்தையும், ஒழுக்கவாழ்க்கையையும் வற்புறுத்துபவர். திலகரோ சிறுவயதிலேயே சம்ஸ்கிருத இலக்கியத்தைக் கரைத்துக் குடித்தவர். நமது பழம் பெரும் பண்பாட்டில் ஊறித் திளைத்தவர். அவர் கனவு கண்ட நவபாரதம் எப்படி யிருந்திருக்கும் என்று சொல்லத் தேவையில்லை!

இப்படிப் பல விஷயங்களில் — அன்றாட அரசியல் நடவடிக்கைகளில் -- பல வேறுபாடுகள் இருந்தபோதிலும் ஒரு விஷயத்தில் அடிப்படையான ஒற்றுமை இருந்தது. அதாவது பாரத தேசம் சுதந்திரம் பெற வேண்டும் என்ற தீவிர உணர்ச்சி வேகத்தைப் பொறுத்த வரையில் இருவருக்கு மிடையே யாதொரு வேற்றுமையும் இருக்கவில்லை! அதைத் தவிர வேறு பல விஷயங்களிலும் இவ்விருவரிடையேயும் கருத்து ஒருமைப்பாடு இருந்தது.

கோகலே பெரிய சீர்திருத்தவாதியாயினும் பால்ய விவாகம், விதவா விவாகம்போன்ற சமூக சீர்திருத்த வேலைகளில் ஈடுபடவில்லை. திலகரும் அப்படித்தான். ஏனெனில், தேசம் அந்நிய ஆட்சியிலிருந்து விடுபட்டு விட்டால் பின்னர் இத்தகைய சீர்திருத்தங்கள் செய்வது சுலபம் என்று கருதினார்கள். அதற்காகவே அவரவர் துறையில் பாடுபட்டனர். ஆனால் மதுவிலக்கு விஷயத்தில் கோகலே தீவிரவாதி என்று சொல்ல வேண்டும். அப்படியே திலகரும் குடிப் பழக்கம் நாட்டுக்குத் தீது என்று கருதித் தொண்டர்களைத் திரட்டிக் கிராமங்களில் கள்ளுக் கடைகளின் முன் மறியல் நடத்த ஏற்பாடு செய்தார்.

அந்த நாளிலேயே சர்க்காரின் அதிகாரங்கள் மத்தியில் குவிவதைக் கோகலே எதிர்த்தார். அதிகாரங்கள் மத்திய அதிகார வர்க்கத்தினரிடம் இல்லாமல் பொதுஜனங்களுடன் தொடர்புள்ள பஞ்சாயத்துகள் நகர சபைகள், ஜில்லா போர்டுகள் ஆகியவற்றுக்கு வழங்க வேண்டும் என்று வற்புறுத்தினார். திலகரும் அவ்வாறே மத்தியில் பொறுப்பற்ற முறையில் அதிகாரங்கள் குவிவதைக் கண்டித்தார். கடைநிலையில் உள்ள குழுக்களிடம் அதிகாரங்கள் கொடுக்கப்படுவதுடன் அக்குழுக்களின் அங்கத்தினர்கள் பொதுஜனங்களுடன் தொடர்பு கொண்டு பொதுஜன அபிப்பிராயத்துக்கு ஏற்ப நடக்கச் சட்டபூர்வமான ஏற்பாடு வேண்டும் என்றார்.

அந்நாளிலேயே மக்களின் வரி கொடுக்கும் சக்திக்கு ஏற்பத்தான் வரிகள் விதிக்கப்பட வேண்டும், அதிலும் மிக அவசியமானாலும் விரும்பத் தகுந்ததானால்தான் வரி விதிக்கப்பட வேண்டும் என்று வாதாடினார் திலகர். கோகலேயும் அதே போல் சிக்கனமாக இருக்க வேண்டியதன் அவசியத்தை அவ்வப்போது வற்புறுத்திக் கூறி உபரி வரிகளையும் குறைக்குமாறு யோசனைகள் சொன்னார். கோகலே, திலகர் இருவருமே கட்டாய, இலவசக் கல்வியை ஆமோதித்தனர். திலகர் தாய்மொழியில் குழந்தைகளுக்குப் பாடம் போதிக்க வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தினார். திலகர், கோகலே இருவருமே சிறந்த பத்திரிகையாளர்கள். வெற்றிகரமாகப் பத்திரிகைப் பணி புரிந்தவர்கள்; திலகரின் ஆவேச எழுத்து குண்டு துளைப்பது போல் நெஞ்சில் பாயும். கோகலேயின் ஆங்கில நடையில் தெளிவு இருக்கும்; தர்க்கரீதியான காரணங்களுடன் விஷயங்களை எழுதுவார்.

திலகர், பிரிட்டனையும், பிரிட்டிஷ் மக்களையும் அடியோடு வெறுத்தார் என்று சிலர் கூறியதுண்டு. ஆனால் திலகரே இங்கிலாந்தில் ஒரு பிரசங்கத்தில் இதை மறுத்தார். ''நான் அநீதிக்கும் கொடுமைக்கும்தான் எதிரி. நான் பிரிட்டனுக்கோ, பிரிட்டிஷ் மக்களுக்கோ விரோதியல்ல. இதற்கு ஒரு படி மேலே போய் 'இங்குள்ள பிரிட்டிஷ் மக்களைப் போலவே நானும் ஒரு தீவிர பிரிட்டிஷ்காரன். சில அம்சங்களில் இங்குள்ளவர்களைவிட மேலான பிரிட்டிஷ் மகன்' என்று கூடச் சொல்லிக் கொள்வேன். ஏனெனில் பிரிட்டிஷார் எந்த சுதந்திரத்தையும் ஜனநாயகத்தையும் தம் கண்களெனப் போற்றுகிறார்களோ அதே சுதந்திரத்தையும் ஜனநாயகத்தையும் என் தாய்நாட்டில் அமுல் நடத்தத்தான் நானும் அயராது முயன்றுவருகிறேன்.''

கோகலே, பிரிட்டிஷ் மக்களின் பண்பாட்டை, அவர்களுடைய நிறுவனங்களை ரொம்பவும் பாராட்டி வந்தார். இந்தியர்களும், பிரிட்டிஷாரும் நேச பாவத்துடன் ஒத்துழைக்க வேண்டும் என்பதை வலியுறுத்தி வந்தார். ஆனால் பிரிட்டிஷாரின் அடிவருடியாக அவர் இருக்கவில்லை. பாரதப் பண்பாட்டின் சிறப்பையும் அவர் உணராமலிருக்கவில்லை. ஜெயகர் ''கிழக்கு மேற்குச் சிந்தனைகளின் இனிய கலவை கோகலே'' என்று மிகவும் பொருத்தமாகக் குறிப்பிட்டார்.

கோகலேயாகட்டும், திலகராகட்டும், அரசியல் நோக்கங்களுக்காகப் பலாத்கார வன்முறைகளைக் கையாள்வதைக் கண்டித்தனர். திலகர் பலாத்கார நடவடிக்கைகளில் நம்பிக்கை கொண்டவர் என்று தவறாகக் கருதப்பட்டு வந்திருக்கிறார். உண்மையில் பார்க்கப்போனால் அவர்தான் முதலில் சாத்விகப் போராட்டத்தைத் தொடங்கினார்.

இன்று பாரதம் அடைந்துள்ள ஜனநாயக சுதந்திரம் திலகரின் தீர்க்கதரிசனம், சலியா உழைப்பு ஆகியவை காரணமாகவே ஏற்பட்டது என்று சொல்லுவார்கள். அதே சமயத்தில் மிகவும் அமைதியான முறையில் ஆட்சி மாற்றம் ஏற்பட்டதற்குக் காரணம், அன்று கோகலேயும் அவரைச் சேர்ந்த மிதவாதிகளும் பிரிட்டிஷாருடன் ஒத்துழைத்துப் பல சமுதாய சீர்திருத்தங்களைச் செய்தது தான் என்றும் கூறுவார்கள்.

நமது சுதந்திரப் போராட்டத்தின் இரு பிரிவுகளான புரட்சி முறை, அமைதியான சீர்திருத்த முறை என்ற இரண்டு முறைகளையும் பிரதிபலித்த இந்த இரு மாபெரும் தலைவர்களும், தேச பிதா மகாத்மாவின் சிந்தனைகளை உருவாக்கினர் என்பதில் எள்ளளவும் சந்தேகமில்லை. கோகலேயும் திலகரும் தங்கள் தொண்டினாலும் தியாகத்தாலும் அமைத்த அஸ்திவாரத்தின் மீது மகாத்மா காந்தியடிகள் மகத்தான சுதந்திர மாளிகையை எழுப்பினார்!





பெங்களூர், கிரவுன்பார் உரிமையாளர் திரு D, பார்த்தசாரதி முதலியார் அவர்களின் புதல்வி சௌ. சாயாதேவிக்கும், கரூர் (லேட்) T. V. சின்னசாமி பிள்ளை அவர்களின் புதல்வன் சிரஞ்சீவி C. ராமநாதன், M. A., A. F. I. I. (Asst. Administrative Officer, L.I.C. Coimbatore) க்கும் பெங்களூர் சஜ்ஜன் ராவ் கல்யாண மண்டபத்தில் சமீபத்தில் வெகு விமரிசையாகத் திருமணம் நடைபெற்றது. நண்பர்களும், உறவினர்களும் திரளாக வந்திருந்து மணமக்களுக்கு நல்லாசி அளித்தனர். வாழ்க, மணமக்கள்!

வெற்றித் திருநகர்

அகிலன்



அத்தியாயம் பதினொன்று

அழிவா? துரோகமா?


அரசியல் நாடகத்தின் கடைசிக் காட்சியும் முடிந்த பின்னர் சபை கலைந்தது. ராமராயர் சரேலென்று எழுந்து தமது மாளிகைக்குப் புறப்பட்டார். அவரைச் சார்ந்த அமர நாயக்கர்கள் சாளுவ நரசிம்மரைக் கொன்று விடுவது போல் விழித்து நோக்கி விட்டுக் கோபத்தோடு வெளியே கிளம்பினார்கள். புதிதாக அமைச்சராகவும் பிரதானியாகவும் நியமிக்கப்பட்ட சாலகராஜுவைச் சுற்றிக்கொண்டு மற்ற அமரநாயக்கர்கள் தங்கள் பாராட்டுக்களையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொண்டனர். சாலகராஜுவோ சாளுவ நரசிம்மரின் கரங்களைப் பற்றிக் கொண்டு, ''தங்களுக்கு எப்படி நன்று கூறுவதென்றே தெரியவில்லை; எங்களையெல்லாம் விட்டு விட்டுப் பிரிந்து போகத் தாங்கள் முடிவு செய்து விட்டாலும், எப்போதும் எங்களில் ஒருவராகவே தாங்கள் இருக்க வேண்டும்!'' என்று நன்றிப் பெருக்கோடு கூறினார்.

நாகம நாயக்கருக்கு அந்தச் சபையில் அதற்கு மேல் இருக்கப் பிடிக்கவில்லை. சாளுவர் ஏதோ ரகசியமான நடவடிக்கைகளில் இறங்கி யிருந்தார் என்ற வரையிலும்தான் அவரால் முன்பு அறிய முடிந்ததே தவிர, அதற்கு மேல் முன்னதாக எதையும் ஊகிக்க முடியவில்லை. நாகம நாயக்கரை ஒதுக்கி விட்டே சாளுவர் இவ்வளவு ஏற்பாடுகளையும் செய்திருந்தார். சபையில் நடைபெற்ற செயல்கள் நாகமருக்கு அதிர்ச்சிக்கு மேல் அதிர்ச்சி தந்து விட்டன.

தமது அலுவலகத்துக்குச் சென்று செயலிழந்தவர் போல் அவர் ஆசனத்தில் சாய்ந்தார். உடனடியாகச் சக்கரவர்த்தி அச்சுதராயரைச் சந்தித்து, ''தயவுசெய்து என்னையும் தனாதிகாரி பதவியிலிருந்து நீக்கி விடுங்கள்!'' என்று அவருக்குக் கேட்கத் தோன்றியது. ஆனால் இப்படிக் கேட்டால் சக்கரவர்த்தி தவறாக நினைத்துக் கொண்டு சந்தேகப்பட்டால் என்ன செய்வது என்ற நினைவும் அவருக்கு எழாமல் இல்லை. ஆகவே நெடு நேரம் குழம்பித் தவித்து விட்டுத் தமது மாளிகைக்குப் புறப்பட்டார்.

மாளிகையில் அவர் கமலா தேவியிடம் கூட முகம் கொடுத்துப் பேசவில்லை. நெடு நேரம் அவர் தம் அறைக்குள்ளேயே அடைபட்டுக் கிடந்ததைக் கண்ட கமலாதேவியார் மெல்லச் சென்று உள்ளே எட்டிப் பார்த்தார். கரங்களில் தலையைப் புதைத்துக் கொண்டு நாகமர் அமர்ந்திருந்த கோலம் அவரைத் துணுக்குறச் செய்தது. மெதுவாகச் சென்று அவர் காலடியில் தரையில் உட்கார்ந்தவாறே, ''அரண்மனையில் என்ன நடந்தது? ஏன் இப்படிக் கலங்கி யிருக்கிறீர்கள்?'' என்று கேட்டார்.

வழக்கமாக அரண்மனை விவகாரங்களை அவர் கமலா தேவியாரிடம் கலந்துகொள்வதில்லை. ஆனால் அன்றைக்கு மட்டும் ஏனோ அவருக்கு மனைவியிடம் நடந்தவற்றை வெளியிட்டு உள்ளக் குமுறலைத் தணித்துக் கொள்ள வேண்டும் என்று தோன்றியது. விவரமாக எல்லாவற்றையும் கூறிவிட்டு, ''இனி நான் தனாதிகாரியாக இருப்பதில் பலனில்லை; என்னால் முன்போல் நேர்மையோடும், துணிவோடும் உழைக்க முடியாது'' என்று கூறினார்.





''காரணம்?''

''சாலகராஜுவின் கையில் அகப்பட்ட பொக்கிஷம் குரங்கின்கைப்பூமாலையாகத்தான் முடியும். பெரிய சக்கரவர்த்திகள் உயிரோடிருந்த காலத்திலேயே குறித்த நேரகாலத்தில் அவர் இறை செலுத்த மாட்டார். பொருள் விஷயங்களில் அவரைச் சிறிதும் நம்பவே முடியாது. தமது சொந்த நலனுக்காகவும் ஆடம்பரக் கேளிக்கைகளுக்காகவும் வீண் விரயம் செய்வார். கடன் வாங்குவார்; திருப்பிக் கேட்டால் விரோதித்துக் கொள்வார். அச்சுதராயர் ஆட்சிக்கு வந்தவுடன் அரண்மனைக்குச் செலுத்த வேண்டியதைச் செலுத்தாமல் இன்றுவரை சாக்குச் சொல்லி வந்திருக்கிறார். இந்த விஷயங்களில் அச்சுதராயரிடமும் கண்டிப்பு இல்லை. ராமராயரும் சாளுவரும் இருந்தால் சாம்ராஜ்யத்தின் நிலையை ஒருவாறு கவனிக்கலாம் என்று நம்பியிருந்தேன். அந்த நம்பிக்கை அடியோடு சிதறிப் போய்விட்டது. இனி இந்தச் சாம்ராஜ்யத்தையும் நம்மையும் கடவுள்தான் காப்பாற்றவேண்டும்.''



''யார் வந்தால் தங்களுக்கு என்ன? சக்கரவர்த்திகளின் கட்டளைகளை நிறைவேற்றுவது தானே தங்கள் கடமை? கடவுளின் மீது பாரத்தைப் போட்டு விட்டுத் தாங்கள் எப்போதும் போல் கடமையை நிறைவேற்றி வாருங்களேன்!'' என்றார் கமலா தேவியார்.

வருத்தத்தோடு சிரித்தார் நாகம நாயக்கர்.

''நான் தவறுகள் பல செய்திருக்கிறேன். ஆனாலும் ஒரு விஷயத்தில் எப்போதும் எதற்காகவும் நான் நேர்மை தவறி நடந்ததில்லை. இந்த விஜயநகர சாம்ராஜ்யத்தின் வலிமை இதன் போர் வீரர்களையும் மற்ற ஊழியர்களையும் பொறுத்துத்தான் இருக்கிறது. ஆனால் அவர்களுக்கே வலிமை தரும் ஆற்றல் உள்ளது இந்த அரண்மனையின் பொக்கிஷம். சாம்ராஜ்யத்தின் உயிர் மூச்சின் திறவுகோலையே என்னிடம் வழங்கியிருந்தார் பெரிய சக்கரவர்த்திகள். நான் வேறு வகையில் குற்றம் புரிந்த பிறகும் என்னை மன்னித்து அவர் என்னிடமே பொக்கிஷத்தின் திறவு கோலை அளித்தாரென்றால், அந்த ஒரு விஷயத்தில் அவர் என்னிடம் வைத்த நம்பிக்கைதான் காரணம். அரசாங்கத்தின் பொக்கிஷத்தைக் கவனிப்பதில் தவறுகளும் குற்றங்களும் நடைபெறுமானால் பிறகு ஆட்சியே கலகலத்துப் போய்விடும். சாலகராஜுவின் ஆணைகளே இனி சக்கரவர்த்தியின் ஆணைகளாக இருக்கும். என்றால் இனிமேல் இந்தப் பொறுப்பை நேர்மையாக நிர்வகிக்க முடியாது.''

''இதையும் விட்டு விட்டால் பிறகு நமக்கு வேறு வழி?''

''இந்தப் பொறுப்பை நான் விட்டுவிட அவர்கள் சம்மதிக்க மாட்டார்கள். அவர்கள் செய்யும் பழி பாவங்களைத் தாங்கிக்கொள் வதற்கு ஒருவன் வேண்டுமல்லவா? அதற் காகவே என்னைப் பதவியில் இருக்கும்படி வற்புறுத்துவார்கள். அப்படியும் நான் மறுத் தால் என்னுடைய ஆட்சியில் விடப்பட் டிருக்கும் நாட்டுப் பகுதி என்னிடமிருந்து பறிக்கப்படும். என்மீது வேண்டுமென்றே ஏதாவது பழி சுமத்தி, என்னை ஏதுமில்லாத வனாகச் செய்து விடுவார்கள்... கமலாதேவி! என்னுடைய அரசியல் வாழ்வே அஸ்தமித்து விட்டது!.... அஸ்தமித்து விட்டது!'' என்று குமுறினார் நாகமர்.

''இல்லை; அஸ்தமித்து விடவில்லை. அது இனிமேல்தான் புதிதாக உதயமாகப் போகி றது!'' என்ற குரல் கேட்டுக் கணவனும் மனைவியும் திடுக்கிட்டுத் திரும்பிப் பார்த் தார்கள். கூடத்துக் கதவருகே வினயம் நிறைந்த புன்னகையோடு நின்று கொண் டிருந்தார் சாளுவ நரசிம்மர்.

சாளுவ நரசிம்மர் சந்தடியின்றி அங்கு வந்து நின்று நாகம நாயக்கர் கூறியதை யெல் லாம் கேட்டுக் கொண்டுதான் இருந்தார். நாகம நாயக்கரின் உடல் ஏனோ அச்சத்தால் அவரை அறியாது நடுங்கியது. சாளுவ நரசிம்மர் அவருக்கு அருகில் வந்து அமர்ந்து அவரை அன்போடு தழுவிக் கொண்டார்.

''நண்பரே! நீங்கள் என்னை மறந்துவிட்டா லும் நான் உங்களை ஒருபோதும் மறக்க மாட்டேன். உங்களுக்கு ஆபத்து வரக் கூடிய எதையுமே நான் செய்யவில்லை. கிருஷ்ண தேவராயருக்குப் பின்னர் இந்தச் சாம்ராஜ்யத்தில் எனக்கும் இடமிருக்காது என்று நான் முன்பே கூறவில்லையா? அப் போது நீங்கள் அதை நம்பவில்லையென்றாலும் இப்போது அதை நம்ப வேண்டிய அவசியம் வந்து விட்டதல்லவா?''

நாகமநாயக்கர் அப்போதைய மன நிலையில் யாரையுமே நம்புவதற்குச் சித்தமாக இல்லை.

''சாலக ராஜுவை அமைச்சராக்கியது தாங்கள்தான் என்று நினைக்கிறேன். அவர் எப்படிப்பட்டவர் என்று தெரிந்தும் அவரைக் கொண்டு வந்திருக்கிறீர்கள். தங்களை என் னால் புரிந்து கொள்ளவே முடியவில்லை. நான் இனி இங்கே பொக்கிஷத்தின் திறவு கோலையும் தனதிகாரி என்ற பெயரையும் வைத்துக் கொண்டிருப்பதில் பயனில்லை.''

வாய் விட்டுச் சிரித்தார் சாளுவ நரசிம்மர்.

''ராமராயர் அடுத்தாற் போல் என்மீது பாய்ந்து என்னைப் பதவியை விட்டு நீக்க இருந்தார். அதோடு என் மேற்பார்வையி லிருந்த சோழ நாட்டையும் என்னிடமிருந்து பறித்து, அவருடைய நண்பனும், சக்கர வர்த்தியின் மருமகனுமான சிவப்ப நாயக்க னிடம் கொடுக்கத் துணிந்தார். காலமெல் லாம் இந்தச் சாம்ராஜ்யத்துக்கு உழைத்து விட்டு, கடைசியில் நான் கையில் திருவோட் டுடன் இதை விட்டு வெளியேறுவேன் என்று எதிர்பார்த்தார். எனக்கு அவர் செய்ய நினைத்ததை நான் அவருக்கே செய்து காட்டி யிருக்கிறேன். வேறொன்றுமில்லை!''

''என்னை இப்போது இந்த நிலைக்குக் கொண்டு வந்து விட்டீர்களே, அதற்கு என்ன வழி?''

''உங்களுக்காகத்தான் நான் இவ்வளவும் செய்திருக்கிறேன்; எனக்காக அல்ல!'' என்று அழுத்தம் நிறைந்த குரலில் கூறினார் சாளுவர். ''எனக்கு எந்தக் குமாரன் இருக் கிறான் இனி நாடாள்வதற்கு?''


நாகமர் தம் நண்பரைக் கூர்ந்து நோக் கினார். கமலாதேவியாரும் ஆவலோடு சாளு வரை உற்றுப் பார்த்தார்.

''நண்பரே, நான் உங்களுக்குச் செய் திருக்கும் நன்மைகளை நீங்கள் அதற்குள் மறந்து விட்டீர்கள் போலிருக்கிறது. பாண் டிய நாட்டையே இப்போது உங்களுக்கு வழங்கியிருக்கிறேன். விஜயநகரத்தின் பெரும் படைகளோடும், பொக்கிஷத்தோடும் அதை உங்கள் குமாரனுக்குக் கொடுத்திருக்கிறேன். அதோடு நான் ஓய்ந்துவிடப் போவதில்லை. சோழநாட்டையும் உங்களுக்கே அளிப்பதற் காகத்தான் இந்தப் பதவியையே உதறி விட்டுத் தெற்கே செல்கிறேன். அதையும் கொடுத்துவிட்டதாகவே நீங்கள் நம்பலாம். ஆனால் என்னால் கொடுக்கத்தான் முடியுமே தவிர, எடுத்துக்கொள்வது உங்கள் பொறுப்பு. உங்கள் குமாரன் இனியும் சிறு குழந்தை யில்லை; அவனுக்கு என்னால் உணவை எடுத்து ஊட்டிவிடத்தான் முடியுமே தவிர உண்ண வேண்டியவன் அவன். அவனுக்காக நானே சாப்பிடவும் முடியாதல்லவா?''

நாகம நாயக்கர் திகைத்துப் போய்ச் சிலை யாக அமர்ந்து விட்டார். 'ஒன்று, சாம் ராஜ்யத்துக்குத் துரோகம் செய்ய வேண்டும்; அல்லது அடியோடு அழிந்து போக வேண் டும். இப்படி ஒரு பயங்கரமான நிலையை உருவாக்கிவிட்டு, என்னை இதற்குள் சிக்க வைத்துவிட்டாரே இவர்!' என்று நினைத் தார் நாகம நாயக்கர்.

டாக்டர் ஸ்ரீஹரியின் சுற்றுப் பயணம்

டாக்டர் ஸ்ரீஹரி ஆகஸ்டு மாதம் 23ந் தேதி க்ராண்ட் டிரங்க் எக்ஸ்பிரஸில் சென்னையிலிருந்து புறப்பட்டுக் காசிக்குப் போய்ச் சேருகிறார். அங்கு காசி சர்வ கலா சாலை விருந்தினர் விடுதியில் தங்குகிறார். மீண்டும் 30ந் தேதி புறப்பட்டுச் செப்டம்பர் 1ந் தேதி சென்னை திரும்புகிறார்.



உங்களுடைய கேசம் ஆரோக்யமாகவும்
பளபளப்புடனும் விளங்கும்

பிரில்க்ரீம்

தடவி நேர்த்தியாக தலையை வாரிக்கொண்டால்!



பிரில்க்ரீம் மட்டுமே

- அதிக எண்ணெய்ப்பசை இல்லாமலும், தாறுமாறாக உரோமம் கலையாமலும் நேர்த்தியாக தலையை வார உங்களுக்கு உதவுகிறது.
- மிகவும் சிக்கனமானது—ஒருமுறை தடவி வாரிக்கொண்டால் நாள் முழுவதும் உங்கள் தலை கலையாது அழகாக தோற்றமளிக்கும்.
- உரோமம் உதிர்ந்து வழுக்கை விழாமல் தடுக்கக்கூடிய, ஆரோக்யமான உரோம வளர்ச்சியைத் தூண்டக்கூடிய, சேர்த்தியான கலவை வாய்ந்தது.
- உங்களுடைய கேசத்தின் இயற்கையான வண்ணத்தைப் பாதுகாக்கிறது.

எனவே இனிமேல் பிரில்க்ரீமையே உபயோகியுங்கள்!

உலக முழுவதிலும் லக்ஷக்கணக்கான நேர்த்தியான மனிதர்கள் இதையே உபயோகிக்கிறார்கள்

B/P/1/P/1/65 TM.

''நாகம நாயக்கர் அவர்களே! பொது வாழ்வு தர்மம் என்பது வேறு; அரசியல் தர்மம் என்பது வேறு. இதை நான் உங்களுக்குச் சொல்ல வேண்டியதில்லை. ஆனால் நீங்கள் காலம் வரும்போது உங்கள் குமாரனுக்குச் சொல்லித்தான் ஆகவேண்டும்!''

சரேலென்று விடைபெற்றுக் கொண்டு அவ்விடத்தை விட்டு எழுந்தார் சாளுவ நரசிம்மர்.

''இப்போது எனக்கு என்ன வழி? நான் என்ன செய்ய வேண்டும் என்பதைக் கூறாமல் போகிறீர்களே!''

''சாலகராஜு கூறுகிற போதெல்லாம் மறுப்புக் கூறாமல் பொக்கிஷத்தைத் திறந்து விடுங்கள். பொக்கிஷத்தில் உள்ளவரையில் தானே அவரும் பொருள் கேட்பார்? தீர்ந்து விட்டால் அதை நிரப்புவதற்கும் அவரிடமே வழி கேளுங்கள். இங்கு நிலைமை எவ்வளவுக்கெவ்வளவு மோசமாகிறதோ, அவ்வளவுக்கு நானும் அங்கே பலப்படுத்தி விடுகிறேன்! — சரிந்து விழட்டும் இந்த சாம்ராஜ்யம்!''

சாளுவ நரசிம்மர் மின்னலென மறைந்தார். நாகமரின் விழிகள் இருண்டன.

அத்தியாயம் பதினைந்து

சிதறிய முத்துக்கள்

சாளுவ நரசிம்மருக்கு ஆதரவாக இருந்த அமரநாயக்கர்களில் பலர் அவருடைய பக்திக்காக அவரிடம் ஆதரவு கொண்டிருந்தவர்கள். அவரிடம் கொண்டிருந்த அச்சத்தின் காரணமாக அவர் விரும்பியபடியெல்லாம் நடந்து கொண்டவர்கள். சாளுவ நரசிம்மர் விஜயநகரத்தை விட்டு வெளியேறிச் சோழ நாட்டுக்குச் செல்வதில் அனைவருமே ஆனந்தம் கொண்டனர் என்று கூறலாம்.

மிகப் பெரிய விருந்துகளும், விழாக்களும் நடத்தி, அவருக்கு ஏராளமான பரிசுகள் வழங்கி, அவரைக் கோலாகலமாக விஜய நகரத்தை விட்டு வெளியேற்றி வைப்பதில் எல்லாருமே ஆர்வம் காட்டினார்கள். புதிய சக்கரவர்த்தி அச்சுதராயரும் புதிய அமைச்சரும் பிரதானியுமான சாலகராஜுவுமே இந்த ஏற்பாடுகளை யெல்லாம் முன்னால் நின்று கவனித்ததால், விஜயநகரமே சாளுவரை வழியனுப்புவதற்காக விழாக் கோலம் பூணத் தொடங்கி விட்டது.

சாளுவர் புறப்படுவது பற்றிய செய்தி நகரத்துக்குள் பரவியவுடன், அவரைக் காண்பதற்காகப் பரபரப்போடு வந்து சேர்ந்தார் சேர நாட்டுப் பெரு வணிகரான குமார வர்மர். குமார வர்மர் சேர நாட்டிலிருந்து விஜயநகரத்தில் வந்து குடியேறிய செல்வந்தர். சேர நாட்டு முத்துக்கள், தந்தம், யானைகள் இவற்றை விஜயநகரத்தில் அரண்மனைக்கும் அமர நாயக்கர்களுக்கும் விற்பனை செய்து வந்தவர். அது போலவே விஜய நகரத்திலிருந்து வைரம் தங்கம் முதலியவற்றைச் சேர நாட்டுக்கு அனுப்பி வாணிகம் செய்தார்.

அவர் சேர நாட்டு அரச குடும்பத்தைச் சேர்ந்தவர் என்பதும் உதய மார்த்தாண்ட வர்மனுக்கு உறவினர் என்பதும் அவன் விஜயநகரத்துக்கு வந்தபோதுதான் சாளுவரால் அறிய முடிந்தது. ஆட்களும் குதிரைகளும் வைத்துக் கொண்டு சேர நாட்டோடு தொடர்பு கொண்டிருந்த அவர் வெறும் வணிகர் மட்டுமல்ல என்பதைச் சாளுவர் பின்னர் தெரிந்து கொண்டார். உதய மார்த்தாண்ட வர்மனின் இரகசியப் பிரதிநிதியாகவும் அவர் விஜய நகரத்தில் விளங்கி வந்தார். ஐம்பது வயதைக் கடந்த அந்த வணிகர் தம்முடைய இனிய பண்புகளால் விஜய நகரத்துப் பெருமக்களிடையே செல்வாக்குப் பெற்று விட்டார்.

குமார வர்மருக்கும் சாளுவருக்கும் உதய மார்த்தாண்டன் அங்கு வரும் வரையில் வாணிபத் தொடர்பு மட்டுமே இருந்தது. அந்தத் தொடர்பை அரசியல் தொடர்பாகவும் இரகசியத் தொடர்பாகவும் மாற்றி விட்டுச் சென்றிருந்தான் உதய மார்த்தாண்டன்.

குமார வர்மரை மாளிகையில் கண்டவுடனேயே லட்சுமி ஏனோ திடுக்கிட்டாள். உதய மார்த்தாண்டன் அங்கு வருவதற்கு முன்பாகவே அவர் பலமுறை வாணிப நோக்கோடு அங்கு வந்திருக்கிறார். அழகிய ஆபரணங்களோடு வரும் அவரைப் அப்போதெல்லாம் லட்சுமி உற்சாகத்தோடு வரவேற்றிருக்கிறாள். இப்போது கூடக் கையில் ஒரு பேழையோடுதான் வந்திருந்தார். ஆனாலும் லட்சுமியின் மனம் ஏனோ அவர் வரவால் சஞ்சலமடைந்தது.

அவளுடைய சஞ்சலத்தை மிகுதிப்படுத்துவது போலவே சாளுவ நரசிம்மரும் நடந்து கொண்டார். முன்பெல்லாம் அவர் ஆபரணங்களோடு வந்தால் லட்சுமியையும் அவள் அன்னையாரையும் அழைத்து வைத்துக் கொண்டுதான் வணிகரோடு பேசுவார். அவர்களுக்குப் பிடித்தமானவற்றையே தேர்ந்தெடுக்கச் சொல்வார். இப்போதோ அவரைக் கூடத்தில் அழைத்து வைத்துக் கொண்டு கதவுகளை உட்புறம் தாழிட்டுக் கொண்டார் சாளுவ நரசிம்மர்.

லட்சுமி தன் பதற்றத்தை அடக்க முயன்றவாறே வெளியில் காத்திருந்தாள்.

கூடத்தின் உட்புறம் சாளுவருக்கு அருகில் அமர்ந்திருந்த குமார வர்மரும் பதற்றத்தோடுதான் காணப்பட்டார். ''நான் கேள்வியுற்றதெல்லாம் உண்மைதானா? என்ன நடந்தது...?''

சாளுவ நரசிம்மர் சிரித்துக் கொண்டே அவருக்கு விவரங்களைக் கூறிவிட்டு, ''எல்லாமே நான் விரும்பியவாறுதான் நடந்து கொண்டிருக்கின்றன. இங்கு முடிக்க வேண்டிய காரியங்கள் முடிந்து விட்டதால் நான் தஞ்சைக்குப் புறப்படுகிறேன்; அங்கே சென்றுல்தான் உதய மார்த்தாண்டனிடம் நெருங்கிய தொடர்பு கொள்ள முடியும்'' என்றார்.

குமார வர்மருக்கு அப்போதுதான் ஆறுதல் ஏற்பட்டது.

''தங்களைப் பற்றிச் சரியாக அறிந்துகொள்ளாமல் நான் ஏதேதோ நினைத்து விட்டேன். தங்களுக்குத் தண்டனை என்றவுடன் அதை என்னால் நம்பவே முடியவில்லை.''

''தண்டனை என்றால் இப்படி விருந்தும் விழாவுமா நடத்தி அனுப்புவார்கள்?'' என்று கேட்டுவிட்டு நகைத்தார் சாளுவர். பிறகு எதையோ நினைத்துக் கொண்டவர்போல், ''தண்டனை அளிப்பவனும் நான்; பரிசளிப்பவனும் நான். யார் என் சொல்லை மதித்து என் விருப்பத்தை நிறைவேற்றுகிறார்களோ அவர்களுக்கு அவர்கள் எதிர்பாராத வகைகளிலெல்லாம் பரிசளிப்பேன். யார் என் விருப்பத்தை அலட்சியம் செய்கிறார்களோ அவர்களுக்குக் கடுமையான தண்டனையளிப்பேன். அவர்கள் யாராக இருந்தாலும் சரி!'' என்று செருக்கோடு கூறினார் அவர்.

வணிகருக்கு அவருடைய பேச்சின் பொருள் விளங்கவில்லை. புரியாமல் விழித்தார்.

''குமார வர்மரே! இந்தச் சாளுவ நரசிம்மனைப் புரிந்து கொள்ளுவது மிகவும் சிக்கலான வேலைதான். ஒன்று மட்டிலும் தெரிந்து கொள்ளுங்கள். இந்த விஜய நகரத்து மண்ணில் எனக்குத் தண்டனை அளிக்கும் ஆற்றல் ஒருவனுக்கும் இல்லை. அளிக்க வேண்டியவர்களுக்கு அளிக்க வேண்டிய தண்டனைகளை முறையோடு அளித்து விட்டுத்தான் நான் இங்கிருந்து கிளம்புகிறேன்.''

வணிகரின் நெஞ்சில் அச்சம் புகுந்தது. ''என்றுமே எங்கள் சேர நாட்டரசர் தங்களது விருப்பத்துக்கிணங்கி நடக்கச் சித்தமாக இருக்கிறார். தாங்கள் எதைக் கூறினாலும் அவர் தட்டப் போவதில்லை. அவர் சேர நாட்டுக்குச் சென்றவுடன் தங்களுக்கு அனுப்பியுள்ள முத்து மாலை நேற்றுத்தான் எனக்குக் கிடைத்தது.'' பேழையைத் திறந்து முத்து மாலையைக் கையில் எடுத்தார் குமார வர்மர். மாலையைப் பார்த்து மெல்லச் சாளுவர் தமக்குள் நகைத்துக் கொண்டார். அது யாருக்காக அனுப்பப் பெற்ற மாலை என்பது அவருக்குத் தெரியாமலில்லை. அந்த மாலைக்குள்ளே இழையோடிய உணர்ச்சி என்னவென்பதையும் அவர் கண்டு கொண்டார். அந்த உணர்ச்சிக்குள்ள ஆற்றலையும் அவர் அளவெடுத்து வைத்திருந்தார்.

''மாலை அற்புதமாக இருக்கிறதே! லட்சுமிக்கு இப்படி ஒரு மாலை இதுவரையில் அமைந்ததேயில்லை! இதை அணிந்துகொள்வதில் அவள் எவ்வளவு ஆனந்தம் அடைவாள், தெரியுமா?''

பேழையோடு மாலையை வாங்கிக்கொண்டு உதய மார்த்தாண்டனுக்கு நன்றி கூறினார் சாளுவர். பிறகு அவனுக்குக் கூற வேண்டிய செய்திகளையும் கூறி அனுப்பினார்.

''விஜய நகரத்துக்கு அனுப்ப வேண்டிய இறைப் பொருளை இப்போது அனுப்ப வேண்டாம். ஏதாவது காரணம் கூறித் தட்டிக் கழிக்கச் சொல்லுங்கள். அந்தப் பொருளுக்கு வேறு செலவிருக்கிறது. தீவிரமாகப் படைகளைத் திரட்டிப் பயிற்சி கொடுத்து வைக்கச் சொல்லுங்கள். பாண்டிய நாட்டுக்கு வந்திருக்கும் விசுவநாதனிடம் இப்போது பகைத்துக் கொள்ள வேண்டாம். ஒருவேளை, சேர சோழ பாண்டிய நாடுகள் மூன்றுமே ஒன்று சேர்ந்து தங்கள் விடுதலைக்காகப் போராட வேண்டிய நிலை வரலாம். அதுவரையில் அதற்காகவே விசுவநாதனைப் பகைத்துக் கொள்ள வேண்டாமென்று கூறுங்கள். மற்ற விவரங்களை நான் தஞ்சைக்குச் சென்ற பிறகு சேர நாட்டுக்கு நேரடியாக அனுப்பிக் கொள்ளுகிறேன்.''

''விசுவநாதனு?'' என்று திகைப்போடு கேட்டார் வணிகர்.

''அவனுடைய தந்தைக்கும் இங்கே அதிகாரம் பறி போய்விட்டது. அவனுக்கும் அதே நிலை வரக் கூடும். ஆகவே தற்காப்பின் பொருட்டாவது நம்மோடு இணைந்துகொள்வதைத் தவிர அவர்களுக்கு வேறு வழியில்லை. பொறுப்பு முழுவதையும் என்னிடம் விட்டு விட்டு நான் கூறுவதை மட்டும் நிறைவேற்றச் சொல்லுங்கள்.''

குமார வர்மர் விடை பெற்றுக் கொண்டு சென்ற பிறகு முத்து மாலையோடு லட்சுமியிடம் வந்தார் சாளுவ நரசிம்மர். அந்த அழகான மாலை லட்சுமியைத் தன்பால் ஈர்க்க முனைந்தது. வணிகரிடம் விலைக்கு வாங்கிய மாலையாக இருக்கக் கூடும் என்று நினைத்து, ''இது என்ன விலை அப்பா?'' என்று ஆவலோடு கேட்டபடியே அவரிடமிருந்து வாங்கினாள்.

''இதற்கு விலையாக உன்னையே கேட்கிறான் உதய மார்த்தாண்டன். அவன் உனக்காக அனுப்பி வைத்த அன்புப் பரிசு இது!'' என்று சாளுவர் பரிகாசமாகச் சிரித்தார்.

''அப்பா!''

மாலை லட்சுமியின் கரத்திலிருந்து கீழே நழுவி விழுந்தது. அதன் முத்துக்கள் சில உடைந்து சிதறின. லட்சுமி பதறினாள்; சாளுவ நரசிம்மரின் முகத்தில் கோப வெறி தாண்டவமாடியது.

''லட்சுமி!'' என்று அதட்டியவர், ''நான் எதையும் இன்னும் முடிவு செய்யவில்லை. என் எண்ணத்தை நிறைவேற்றுவதில் எவன் முனைந்து நிற்கிறானோ அவனே என்னுடைய நம்பிக்கைக்குப் பாத்திரமாவான். அவன் விசுவநாதனாக இருந்தால் அதனால் உன்னைவிட நான்தான் மகிழ்ச்சியடைவேன்!'' என்றார்.

'உங்கள் எண்ணத்தை நிறைவேற்றுவிட்டால்?' என்ற வினாவை அவரிடமே எழுப்பின லட்சுமியின் விழிகள். சிதறிய முத்துக்களைப் போலவே அந்த விழிகளும் சில முத்துக்களைச் சிதற விட்டன.

(தொடரும்)

அற்புதமான நீல வைரம்

"ராகம்"

வைரங்களின் வரலாறு-2


வைரங்கள் பொதுவாக வெண்மை நிறத்தினவை. சில வேறு நிறங்களுடன் காணப்படுவதுமுண்டு. நீல நிறத்துடன் கூடிய வைரம் கிடைப்பது அபூர்வம்; அதிலும் அந்நிறத்துடன் கூடிய பெரிய வைரம் கிடைப்பது மிக மிக அபூர்வம். அப்படிப் பட்ட அபூர்வ வைரமொன்றை உலகுக்கு அளித்த பெருமை இந்தியாவுக்கு உண்டு. அதனுடைய பெயரே நீல வைரம் என்பது தான். அதற்கு நிகரான நீல நிற வைரம் அதற்கு முன்போ, அதற்குப் பின்போ கிடைத்ததில்லை. அதன் கதையைக் கவனிப்போம்.

ஜீன் ஜோஸப் டேவர்னியே என்றொரு பிரஞ்சுக்காரன் இருந்தான். நவரத்தினங்களைப் பற்றிய விஷயங்களில் அவனொரு நிபுணன். அவன் நவரத்தினங்களைப் பற்றித் தெரிந்து கொள்ளுவதற்கும், அபூர்வமானநவரத்தினங்களைச் சேகரம் செய்வதற்கும் சுமார் அறுபது ஆண்டுகளை இந்தியாவில் கழித்தானும்!

அவன் தனக்கு எண்பதாவது வயது நடந்து கொண்டிருந்த போது கடைசித் தடவையாக இந்தியாவுக்கு விஜயம் செய்தான். பல இந்திய அரசர்களைச் சென்று பார்த்தான். தங்களிடமிருந்த பல நவரத்தினங்களை அவனிடம் காட்டி, அவற்றின் மதிப்பு பற்றி அவ்வரசர்கள் தெரிந்து கொண்டார்கள். தங்களிடமுள்ள ஏதாவதொரு நவரத்தினம் அவனால் புகழப்பட்டு விட்டால் அதை அவர்கள் பெரிதாக மதித்து மகிழ்ந்து போனார்கள்.

முகலாய மன்னரின் அரண்மனைக்கு அவன் சென்றபொழுது மன்னர் அவனை வரவேற்று உபசாரம் செய்தார். தன்னுடைய பொக்கிஷத்திலிருந்த அருமையான நவரத்தினங்கள் சிலவற்றை அவனுக்குக் காட்டினார். அப்பொழுது ஒரு வைரத்தைப் பார்த்துவிட்டு அவன் பெரிதும் அதிசயித்தானும்.

''இதைப் பார்த்து விட்டே இவ்வளவு அதிசயிக்கிறாயே, நீல வைரத்தைப் பார்த்தால் என்ன சொல்லுவாய்?'' என்று மன்னர் கேட்டார்.



"நீல வைரமா? அப்படிக்கூட ஒரு வைரம் இருக்க முடியுமா?" என்று அவன் ஆச்சரியத்துடன் கேட்டான்.

"இருக்கிறது!" என்றார் மன்னர்.

"எங்கே? அதை நான் உடனே பார்க்க வேண்டும்!" என்று அவன் துடித்தான்.

அது மன்னரிடமிருந்தாலல்லவா அதைக் காட்டுவதற்கு! அது, பிரபல கோவிலொன்றிலிருந்த ராமர் சிலையின் நெற்றியில் பொதிக்கப்பட்டிருந்தது. அந்தப் பிரஞ்சுக்காரன் அவ்வைரத்தைப் பார்த்தே தீர வேண்டும் என்று சொல்லவே, அவனை அக்கோயிலுக்கு அவர் அனுப்பி வைத்தார்.

அவ்வைரத்தை அவன் கண்டபொழுது அப்படியே திகைத்து நின்று விட்டான். அப்படிப்பட்ட அழகான நீல வைரமொன்று இருக்க முடியுமென்று அவன் கனவில்கூடக் கருதியது கிடையாது! வைரத்தைக் கண்டு களித்ததோடு அவன் நின்றுவிடவில்லை. அது தன் கைவசப்பட வேண்டும் என்று அவன் தீர்மானித்துக் கொண்டான். ஆனால் அதைப் பெறுவது எப்படி? பணம் கொடுத்தால் யாரும் கொடுக்க மாட்டார்கள். திருடுவதென்றால் சுலபமல்ல. சூழ்ச்சியைக் கையாளுவது என்று தீர்மானித்துக் கொண்டான் அவன்.

கோவில் இருந்த இடத்திலேயே கூடாரம் அடித்துத் தங்கிய அவன் தான் மதம் மாறி இந்துவாகிவிட்டதாக ஒரு போடு போட்டான். அதிலும் தனக்கு ராமர் மீதுதான் அதிக பக்தி என்று சொல்லிக் கொண்டான். என்னென்ன நாடகங்கள் நடித்தானோ, அவன் சொன்னதையெல்லாம் அங்குள்ளோர் நம்பி விட்டார்கள்.

கோவில் குருக்களுக்கு அவன்மீது அளவிடப் பிரியம். ஓர் ஐரோப்பியன் தங்கள் கடவுளிடம் பக்தி கொண்டு விட்டானென்றால் அவர்களுக்குப் பெருமையாக இருக்காதா, என்ன! அதிலும் அவன் நினைத்த சமயங்களெல்லாம் சின்னதும் பெரியதுமாக வைரங்களைத் தனது சட்டைப் பையிலிருந்து எடுத்துக் கோவிலுக்குத் தானமாகக் கொடுத்துக் கொண்டிருந்தால் யார்தான் அவனைச் சந்தேகித்திருக்க முடியும்? கோவிலுக்குள் எந்த நேரமும் வந்துபோக அவனுக்கு அனுமதி வழங்கப்பட்டது. அதைத்தானே அவனும் எதிர்பார்த்துக் கொண்டிருந்தான்! சமயம் பார்த்து ஒரு நாள் அவன் தனது கையாட்களுடன் கோவிலுக்குள் நுழைந்தான். ஒரே ஒரு குருக்கள் மட்டும் சிலைக்கருகில் இருந்தார். அவரைக் கட்டிப் போட்டுவிட்டு, விக்ரகத்தின் நெற்றியிலிருந்த நீல வைரத்தைப் பிரித்தெடுத்துக் கொண்டு அவன் எடுத்தான் ஓட்டம்!

இது நடந்தது பதினேழாம் நூற்றாண்டில். இந்தியாவில் யாரிடமும் பிடிபடாமல் அவன் 1668ம் ஆண்டில் அதைப் பதினான்காம் லூயி மன்னனுக்கு விற்றான்!

கடவுள் சொத்தைத் திருடியவன் உருப்படமாட்டான் என்று அதை வெற்றிகரமாகப் பறி கொடுத்தவர்கள் பேசிக் கொண்டார்கள். அவர்கள் நினைத்தபடியே நடந்தது. டேவர்னியே காட்டுப் பாதை வழியாகச் செல்ல நேர்ந்தபொழுது காட்டு மிருகங்களால் குத்திக் கிழித்துக் கொல்லப்பட்டான்!

நீல வைரத்தின் கதை அதோடு நின்றுவிடவில்லை. பதினான்காம் லூயி அதைத் தனது மனைவிக்குப் பரிசாகக் கொடுத்தான். அவ்வைரத்தை அணிந்துகொண்ட அரசி சீக்கிரமே அரசனின் பிரியத்தை இழக்க வேண்டி வந்தது! அவ்வரசனும் பயங்கர வியாதியொன்றால் பீடிக்கப்பட்டதோடு பல வித தோல்விகளையும் அடைந்து மனமுடைந்து இறந்தான். அவ்வைரத்தை அடையப் பெற்ற பதினாறாம் லூயி கில்லட்டினுக்கு இரையானான் — பிரெஞ்சுப் புரட்சியின் காரணமாக!

பிரெஞ்சுப் புரட்சியின் போது அரண்மனைப் பொக்கிஷசாலை சூறையாடப்பட்டது. அப்பொழுது அங்கிருந்து களவாடப்பட்ட விலை உயர்ந்த பொருள்களில் இந்த நீல வைரமும் ஒன்று. அதற்குப் பிறகு வெகு காலம் வரையில் அதன் இருப்பிடம் தெரியவில்லை. பிறகு ஒரு நாள் ஹாலந்தைச் சேர்ந்த பட்டை தீட்டும் நிபுணன் ஒருவனிடம் அது வந்து சேர்ந்தது. அதை அவன் தன்னிடம் வெகு காலம் வைத்திருக்க முடியவில்லை. அவனுடைய மகனே அதைத் திருடிச் சென்று விற்று, கிடைத்த பணத்தை ஊதாரித்தனமாகச் செலவழித்தான். பணமெல்லாம் செலவழிந்ததும் தற்கொலை செய்து கொண்டான்!

பிறகு எத்தனை கைகள் மாறிற்றோ தெரியவில்லை. கடைசியாக அது பிரான்காய் பியூலியே என்கிற பிரெஞ்சுக்காரன் வசம் வந்து சேர்ந்தது. அதை வைத்துக் கொண்டு என்ன செய்வது என்று அவனுக்குப் புரியவில்லை! 1830ம் ஆண்டில், டேனியல் என்கிற பிரெஞ்சு வியாபாரியிடம் சுமாரான விலைக்கு விற்றான். இந்தியாவிலிருந்து வந்த போது 67 கேரட் எடையுள்ளதாக இருந்த நீல வைரம் இப்பொழுது 44 கேரட் எடையுள்ளதாகக் காட்சியளித்தது. அதன் ஒரு பகுதியை யாரோ வெட்டி எடுத்துக்கொண்டிருந்தார்கள். அந்தப் பிரெஞ்சு வியாபாரி அவ்வைரத்தை ஹென்றி தாமஸ் ஹோப் என்கிற ஆங்கில பாங்கி முதலாளிக்கு உயர்ந்த விலைக்கு விற்றான். அவர் இறந்த பிறகு ஹோப் நீலம் என்கிற பெயரைப் பெற்றுவிட்ட இவ்வைரம் மற்றொரு ஹோப் என்பவரிடம் சென்றது. அவர் அதைத் தம்மிடம் வைத்துக் கொள்ளாமல் உடனுக்குடன் விற்று விட்டார். ஓரிரு கைகள் மாறிய பிறகு அது ஜோஸப் பிரேங்கல் என்கிற அமெரிக்க நகை வியாபாரியிடம் சென்றது. அவ்வைரம் வந்த அதிர்ஷ்டமாகத்தான் இருக்க வேண்டும், அந்த நகை வியாபாரியும் ஒருசில ஆண்டுகளில் ஓட்டாண்டியாகி விட்டான்! பிறகு ஒருசில கைகள் மாறிய இவ்வைரம் இப்பொழுது யார் வசம் இருக்கிறது என்பது தெரியவில்லை. அமெரிக்காவில்தான் இருக்க வேண்டும் என்று ஊகிக்கப்படுகிறது.

எங்கள் மலேஷியா ஏஜண்டுகள்

மலேயாவாழ் மக்களும், வணிகர்களும் எங்கள் தயாரிப்பான 'ஆர். எஸ். பதி மருந்து' மேரிராம் பற்பொடி இவற்றை கீழ்க்கண்ட எங்கள் ஏஜண்டுகளிடம் பெற்றுக் கொள்ளக் கோருகிறோம்.

M/s. V. K. நாகலிங்கம் பிள்ளை
மெர்ச்சண்ட்ஸ்
102, கிங்ஸ் தெரு
பினாங்கு


M/s. S. P. RM. ராமச்சந்திரன் பிள்ளை & கோ.
22, அம்பாங் தெரு
த. பெ. எண் 358
கோலாலம்பூர்



ஆர். எஸ். பதி அன் கோ.

(ஸ்தாபிதம் : 1909)

தபால் பெட்டி எண் 99 - மதுரை - 1



பாலுஸேரி பெனிபிட் சிட் பண்டு
பிரைவேட் லிமிடெட்

"பாலுஸேரி பில்டிங்ஸ்"
3, சிங்கராச்சாரி தெரு, திருவல்லிக்கேணி
தபால் பெட்டி நெ. 414. மதராஸ் - 5
தந்தி : 'EVERMANS' போன் : 85834

மதராஸ் சிட்பண்டு 1961 ஆக்ட்படி மேற்காணும் சீட்டுகள் நடத்தப்படுகின்றன
(மதராஸ் ஆக்ட் நெ. 24 of 1961)

25 மாதங்கள் — குறுகிய காலச் சீட்டுகள் — 25 அங்கத்தினர்கள்

வகுப்பு	மாதச் சந்தா	சீட்டுத் தொகை	வகுப்பு	மாதச் சந்தா	சீட்டுத் தொகை
A	ரூ. 200/-	ரூ. 5000/-	D	ரூ. 25/-	ரூ. 625/-
B	ரூ. 100/-	ரூ. 2500/-	E	ரூ. 20/-	ரூ. 500/-
C	ரூ. 50/-	ரூ. 1250/-	F	ரூ. 15/-	ரூ. 375/-

40 மாதங்கள் — நீண்ட காலச் சீட்டுகள் — 40 அங்கத்தினர்கள்

வகுப்பு	மாதச் சந்தா	சீட்டுத் தொகை
LTA	ரூ. 500/-	ரூ. 20000/-
LTB	ரூ. 250/-	ரூ. 10000/-
LTC	ரூ. 125/-	ரூ. 5000/-

சேரும் குரூப்பை விவரித்து எங்கள் விதிகளுக்கு எழுதவும்
கிளைகள் : புது டில்லி - பம்பாய் - பெங்களூர் - கல்கத்தா

எங்கள் சேவை உங்களுக்குத் தேவை

CRITERION BCF 698



எந்த ஒரு பத்திரிகையும் ஏஜண்டுகளின் ஒத்துழைப்பின்றி வளர்ச்சி காண முடியாது. கல்கியின் வெள்ளிவிழாவைக் கொண்டாடும் இச்சமயத்தில் இப்பத்திரிகைக்கு ஏஜண்டுகள் காண்பித்து வந்துள்ள பேராதரவை நினைத்து நினைத்துப் பெருமகிழ்ச்சி கொள்கிறோம். கல்கி வெள்ளி விழாவினை யொட்டி நமது ஏஜண்டுகள் அனைவரும் கல்கிக்குத் தங்களது வாழ்த்துக்களைத் தெரிவித்தும் பல்லாண்டு கூறியும் எழுதியிருக்கிறார்கள். சிலரது கடிதங்களைப் பெருமிதத்துடன் இங்கு பிரசுரிக்கிறோம். கடிதம் எழுதிய அனைவருக்கும் நன்றி தெரிவித்துக் கொள்கிறோம். — ஆசிரியர்.

கல்கி ஏஜண்டுகளின் கடிதங்கள்

நமது கல்கிப் பத்திரிகைக்கு நாளை இருபத்தாறுவது வயது பிறக்கிறது என்பதில் பெருமை கொண்டு மேலும் நமது ஸ்தாபனமும் அத்துடன் நாமும் தழைத்தோங்க இறைவனை மனமார ஸ்தோத்திரம் செய்து ஸ்ரீசுகவனேசுவரருக்கும் ஸ்ரீ சுவர்ணாம்பிகைக்கும் அர்ச்சனை செய்து பிரசாதத்தை இத்துடன் அனுப்பி வைத்திருக்கிறேன்.

வாழ்க, நம் ஸ்தாபனம்! வளர்க, கல்கி பத்திரிகை!

சேலம்
31–7–66 வி. சந்துரு

கல்கி கடந்த இருபத்தி ஐந்து ஆண்டுகளாக இந்த நாட்டுக்குச் செய்திருக்கும் தொண்டு அளவிட்டுக் கூற முடியாததாகும். நேர்மையின் உறைவிடமாக மக்கள் வியந்து பாராட்டும் வண்ணம் இருபத்தைந்து ஆண்டுகள் சேவை செய்திருப்பது வரலாறு காணாததாகும்.

மாபெரும் சேது அணையில் ராகவனுக்குச் சேவை செய்த அணில் போல் 'கல்கி'யின் பரந்த தேசத் தொண்டில் சிறு துளியேனும் பங்குபெற நேர்ந்தமையைப் பாக்கியமாகக் கருதுகிறோம்.

காரைக்குடி நா. மெய்யப்பன்
29–7–66 நவயுகப் புத்தகாலயம்

இருபத்தைந்து வருடங்களுக்குமுன் நமது கல்கிப் பத்திரிகையைத் திருமங்கலம் ரயில்வே ஸ்டேஷனில் எந்த ஆர்வத்துடன் கூவி விற்பனை செய்தேனோ, அதே ஆர்வத்துடன்தான் இன்றும் விற்பனையை அதிகரிக்க முயற்சி செய்கிறேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். காலம் எவ்வளவு வேகமாக ஓடுகிறது என்பதை நமது கல்கிக்கு இருபத்தைந்து வயது நிரம்பி விட்டது என்பதைக் கண்டு தெரிந்து கொள்ளலாம்.

பசுமலை கே. ராமையா
29–7–66 லட்சுமி நியூஸ் ஏஜன்ஸி

அன்பளிப்பு கிடைத்தது. முன்னறிவிப்பு ஏதுமின்றித் திகைப்பில் ஆழ்த்திவிட்டீர்கள். மிக்க நன்றி. நானும் கடந்த பதினெட்டு வருஷ காலமாகப் பல பத்திரிகைகளுக்கு ஏஜண்டாக இருந்து வருகிறேன். இது போல் வேறு யாரும் எந்த விழா சமயத்திலும் ஏஜண்டுகளுக்கு அன்பளிப்பு வழங்கியதாகத் தெரியவில்லை.

சத்தியமங்கலம்
28–7–66 எஸ். ஆர். சபாபதி

கல்கி பார்சலுடன் தாங்கள் அனுப்பிய அன்பளிப்புக் கிடைத்தது. இச்சிறு ஏஜண்டையும் தாங்கள் கௌரவித்தது பற்றி அளவற்ற மகிழ்ச்சியடைந்தேன்.

போர்ட்னோவோ
28–7–66 எஸ். ஆறுமுகம்

இருபத்தைந்து ஆண்டுகளும் இந்த ஸ்தாபனத்தில் தொண்டு செய்ய ஒரு வாய்ப்புக் கிடைத்ததைப் பாக்கியமாகவே கருதுகிறேன். எல்லோரையும்விட நான் அதிகம் சந்தோஷப்படக் காரணம் என் வாழ்வின் ஆரம்ப அத்தியாயமே நமது ஸ்தாபனத்திலிருந்துதான் தொடங்கியது.

தாங்கள் 31–7–66 கல்கி இதழில் எழுதியிருப்பது போல் கல்கியைத் தரம் நிறைந்த பத்திரிகையாக — எவ்வளவோ கஷ்ட நஷ்டங்கள் இருப்பினும் — தைரியமாக நடத்தி வருவதை நல்ல உள்ளம் கொண்ட எல்லாரும் பாராட்டவே செய்கிறார்கள். காஞ்சி காமகோடி பீடம் பெரியவாள், மதிப்புக்குரிய குருநாதர் ஸ்ரீ ராஜாஜி இந்த இருவர்களின் ஆதரவு நமக்கு இருப்பதே பெரும் பாக்கியம்.

திருநெல்வேலி
30–7–66 எஸ். கோபாலகிருஷ்ணன்

இவ்வார கல்கி இதழ்களுடன் தங்களால் எனக்கு அனுப்பப்பட்ட அன்பளிப்பு பெற்றுக் கொண்டேன். மிக்க மகிழ்ச்சி. வெள்ளி விழாப் பரிசுப் பையின் மீது வரையப்பட்டுள்ள நம் கணபதி என் உள்ளத்தைக் கவர்கிறார். பையைக் கண்ணுறுபவர்கள் பலரும் சந்தோஷம் எய்துகின்றனர். மஹா கணபதியின் ஆசி நம் வெள்ளிவிழா மலருக்கும் வாராந்திர இதழ்களுக்கும் அருள்பாலிக்க வேணுமாய்ப் பிரார்த்திக்கிறேன்.

கோபிசெட்டிபாளையம்
30–7–66 எஸ். ரங்கராஜன்

ஒப்பற்ற கல்கி ஸ்தாபனத்துடன் தொடர்பு கொள்ளும் பாக்கியத்தை அடைந்திருப்பதற்காகப் பெருமையடைகிறேன்.

திருப்பத்தூர்
29-7-66 எம்.கே.லக்ஷ்மண், நியூஸ் ஏஜண்ட்

கல்கி தனது இருபத்தைந்து ஆண்டுக் காலத்தைத, காயம் போகிற போக்கில் போகாமல், தரம் குறையாது, தர்மம் தவறாது, விற்பனையை மட்டும் நோக்கமாகக் கொள்ளாது, கொண்ட கொள்கை, நாட்டு முன்னேற்றம், மக்கள் நல்வாழ்வு இலைகளையே குறிக்கோளாகக் கொண்டு வெற்றி நடை போட்டு வந்துள்ளது.

கல்கி பொன் விழாக் கொண்டாடும் பொன்னான நன்னாளிலும் என் போன்ற எளியவன் கல்கி வளர, தரம் வளரத் தொடர்ந்து] செயல்பட்டு வர எல்லாம் வல்ல இறையருள் கூட வேண்டும். நல்ல வளர்ச்சியின் கீழ் நாம் தொடர்ந்து செயல்படுவோம் என்ற பெருமை ஆயுள் வரை இருக்க ஆண்டவன் அருள்பாலிக்க வேண்டும்.

கல்கியின் வளர்ச்சிக்கு, நிர்வாகத்தின் எண்ணங்களை என் அளவில் என்றும் செயல்படுத்த உறுதியாக உள்ளேன் என்பதை இந்தப் பொன்னான நாளில் தெரிவித்துக் கொள்கிறேன்.

தேவகோட்டை
28–7–66

எஸ். மீனாட்சிசுந்தரம்





ரோம சாம்ராஜ்யத்தின் வீழ்ச்சி



ஆயிரத்து எண்ணூறு ஆண்டுகளுக்கு முன் ஐரோப்பாவில் மிகச் சிறந்த நாகரீகமாக வாழ்ந்து மறைந்த ரோம சாம்ராஜ்யத்தின் வீழ்ச்சியின் தொடக்கத்தைச் சித்திரிக்கும் மகத்தான ஒரு கதை. திரைப்படமாக்குவது அசாத்தியம் என்று பல தயாரிப்பாளர்களால் கைவிடப்பட்டது. அதைத் துணிந்து தயாரிக்க முன்வந்தார் சாமுவேல் புரான்ஸ்டன். காரணம் 'எல் ஸிட்', 'பீகிங்கில் 55 நாட்கள்' போன்ற படங்களைத் தயாரித்; வெற்றி கண்ட துணிச்சல்தான். ஸ்பெயின் நாட்டில் ரோமாபுரியை மறுபடியும் நிர்மாணித்தார், 250 ஏக்கரா நிலப்பரப்பில். ரோம சாம்ராஜ்யம் தனது பொற்காலத்தில் எத்தகைய கோலாகலத்துடன் இருந்ததோ அப்படியே கண்முன் கொண்டு வந்திருக்கிறார். எந்த ஒரு படத்துக்கும், எந்தக் காலத்திலும் உலகில் இத்தனை பெரிய 'ஸெட்' போட்டது கிடையாது என்ற புகழைத் தட்டிக் கொண்டு போகிறார் புரான்ஸ்டன். படத்தை டைரக்ட் செய்வதற்கு 'எல் ஸிட்' புகழ் ஆந்தனி மானை நியமித்தார். கதாபாத்திரங்களுக்கு மிகப் பிரபலமான ஸோபியா லாரன், அலக்கின்னஸ், ஜேம்ஸ் மாஸன், மெல் பெரர், ஸ்டீபன் பாய்ட், கிரிஸ்டபர் ப்ளூமர் போன்ற நட்சத்திர நடிகர்களை ஒப்பந்தம் செய்தார். பல வர்ணங்களிலே, பானவிஷன் படமாகத் தயாரித்திருக்கிறார். யுத்தகளக் காட்சிகளைத் தத்ரூபமாகத் திரையில் காட்டப் பெருங் கூட்டக் காட்சிகளை எடுத்திருக்கிறார். ஆடையணிகளிலும், அரங்க நிர்மாணத்திலும் அக்கறையோடு சரித்திர காலத்துக்கு ஏற்றபடி அமைத்திருக்கிறார். படமும் மிகப் பெரிய படம். நீண்ட நேரம் திரையில் ஓடுகிறது. இத்தனை இருந்தும் ஏனோ படம் மனத்தில் பதியவில்லை. எந்த ஒரு கதாபாத்திரமும் நினைவில் நிற்கவில்லை. உணர்ச்சிகளைக் கொட்டி நடிக்கும் நடிகர்கள்கூட ஏமாற்றிவிட்டார்களே என்றதோர் ஏக்கம்தான் நமக்கு ஏற்படுகிறது. மார்க்கஸ் அரேலியஸாக வருகிறார் அலக் கின்னஸ். டிமோனிடஸாக வருகிறார் மாஸன். லூசில்லாவாக வருகிறார் ஸோபியா. ஒருசில காட்சிகளை அற்புதம், அபாரம் என்று புகழ நினைப்பதைத் தவிர யாருமே எதுவுமே மனத்தில் நிற்கவில்லை.





More and more people are changing over to

COCOA MALTINE

an ideal dietary supplement... they believe in

QUALITY

and

ECONOMY



கோகோ மால்டீன்

புத்துணர்ச்சியும் வலிவும் அளிக்கும்
லட்சிய உணவு பானம்



முழு ஆடைப் பாலும், கோகோவும், சிறந்த தரமான பார்லி மால்ட்டும், குளுகோஸும் நிரம்பக் கலக்கப்பட்ட கோகோ மால்டீனில் வலுவான தசைகளும், திடமான எலும்புகளும் அடைவதும், வலுவும் உரமும் பெறவும் வேண்டிய புரதங்கள், கார்போஹைட்ரேட்டுகள், தாது உப்புக்கள் எல்லாம் உள்ளன. நீங்கள் சுறுசுறுப்புடன் செயல் புரிவதற்கு வேண்டிய மதிப்புவாய்ந்த A, B, B-2 மற்றும் D வைட்டமின்கள் கோகோ மால்டீனில் இருக்கின்றன. ஆரோக்கிய நிலையிலும் நோயுற்ற நிலையிலும் இளையவர்களும் முதியவர்களும் அருந்தக்கூடிய லட்சிய ஊட்டப் பொருள் இது. கோகோ மால்டீனை அருந்தினால், அது ஓய்ந்து போன நரம்புகளுக்கு இதமளிக்கிறது. ஆழ்ந்த உறக்கத்துக்கு வகை செய்கிறது.

கோகோ மால்டன் லாபரரீடீஸ்

உரிமையாளர்கள் : டிரேட் லிங்க்ஸ் பிரைவேட் லிட்., 46, புஸா ரோடு, புது டில்லி-5, போன்: 52835

பிராந்திய விற்பனையாளர் : 76, எல்லிஸ் ரோடு, மவுண்ட் ரோடு, சென்னை-2 போன் : 85982 தந்தி : SOUTHLAND

TL-NP-2

மலேசியா மாநாடு

சா. கணேசன் எம்.எல்.ஏ.,



தேசிய நிலநிதிக் கூட்டுறவுச் சங்கத்தின் புக்கிட் சிடிம் தோட்ட உதவி நிர்வாகி திரு சோமசுந்தரம்

மலேசியா நாட்டில் 1961ம் ஆண்டில் தானும் ஒரு அங்கமாக அமைவது பற்றி வாக்காளர்களிடம்அபிப்பிராயவாக்கு எடுத்த பொழுது 71 சத வாக்குகள் சிங்கப்பூர் மலேசியாவில் இணைவதை வரவேற்றன. 1963ல் மலேசியாவில் ஒரு சுதந்திர நாடாகச் சிங்கப்பூர் இணைந்து கொண்டது. பின்னர் 1965 ஆகஸ்டில் மலேசியாவிலிருந்து விலகித் தன்னாட்சியுள்ள தனி நாடாக ஆயிற்று.

சிங்கப்பூர் ஐக்கிய நாடுகளில் ஒன்றாகவும், பிரிட்டிஷ் காமன்வெல்த் நாடுகளில் ஒன்றாகவும் இப்பொழுது அங்கம் வகிக்கிறது. இந்நாட்டின் நிலப் பரப்பு 225 சதுர மைல்களே. மக்கள் தொகையோ சுமார் 18,00,000. சிங்கப்பூர் நகரின் பரப்பு சுமார் 37 சதுர மைல்கள். சிங்கப்பூர் அமைந்திருக்கும் தன்மையாலும் ஆழ்கடல் துறைமுக வாய்ப்பாலும் பிற பலவற்றாலும் ஆசியாவில் முக்கியத்துவம் பெற்றுள்ளது. தென்கிழக்கு ஆசியாவில் கப்பற்போக்குவரத்து வழியில் இந்தியப் பெருங் கடலிலிருந்து சீனக் கடல் வரை, எல்லாக் கப்பல்களும் இங்கு தங்கியே செல்கின்றன. விமான வழியிலும் நாற்றிசை விமானங்களும் இங்கு வந்து தங்கித்தான் புறப்படுகின்றன.

சிங்கப்பூர் துறைமுகம் உலகத் துறைமுகங்களில் ஐந்தாவது இடத்தையும், காமன்வெல்த் நாடுகளில் இரண்டாவது இடத்தையும் பிடித்துக் கொண்ட பெருந் துறைமுகமாகும். சிங்கப்பூர்த் துறைமுகம் சுமார் மூன்று மைல் நீளமுள்ளது. கப்பல் பிடிக்கும் துறையையும், சுமார் 40 ஏக்கர் அளவுள்ள மூடு பண்டகசாலையையும் கொண்டு விளங்குகிறது. 1965ம் ஆண்டில் 22,580 பெருங் கப்பல்கள் இத்துறைமுகத்தில் வந்து தங்கி 9 கோடி டன்களுக்கு அதிகமான பண்டங்கள் ஏற்றுமதி இறக்குமதி செய்திருக்கின்றனவாம். ஏற்றவும், இறக்கவும், எடுத்துச் செல்லவும் வேண்டிய சகல நவீன யந்திர வசதிகளும் இத்துறைமுகத்தில் அமைக்கப்பட்டிருக்கின்றன.

சிங்கப்பூரின் சர்வதேச விமானத் திடல் பயாலெபாரில் இருக்கிறது. விமானம் ஓடுந்தரை 9000 அடி நீளமுள்ளதாகும். 1964ல் 47,955 விமானங்களும், 5,93,197 பயணிகளும், 57 கோடி கிலோ பண்டங்களும் 14 லட்சம் கிலோ தபால்களும் இத்திடலைப் பயன்படுத்திக் கொண்ட செய்தியிலிருந்தே இவ்விமானத் திடலின் அருமையையும் பயனையும் நன்கறியலாம்.

இத்தகைய போக்குவரத்து வசதியினாலும் தீர்வையில்லாத் துறைமுகமானதாலும் வாணிகம் சிறந்து வளர்ந்திருக்கிறது. அரசாங்க வருமானத்தின் ஒரு கணிசமான பகுதி கப்பல்கள் விமானங்களிலிருந்து வசூலிக்கும் கட்டணத்திலிருந்து கிடைத்து விடுகிறது. மொத்த வாணிகம் 1965ல் சுமார் 681 கோடிக்கும் அதிகம். 681 கோடி

மலேசியத் தொழிற் சங்கக் காங்கிரஸின் 1965-66ன் பொதுக்குழு உறுப்பினர்கள்



டாலர் வாணிகம் நடப்பதால் வணிகர்கட்கு நல்ல ஆதாய மும், அரசுக்கு நல்ல வரியும் கிடைப்பதுடன் எங்கும் வளம் பெருகிக் காணப்படுகிறது. இனி ஆட்சியமைப்பைக் காணலாம்.

21 வயதான குடிமக்கள் யாவரும் வாக்காளர் ஆவார் கள். பால், இனம், மதம், மொழி, கல்வி, வருமானம், என்ற எவ்விதப் பாகுபாடு மின்றி வயது வந்த யாவருக் கும் வாக்குரிமை உண்டு. அத் துடன் தேர்தலில் வாக்களிப் பது கட்டாயம். தவறினால் உரிய தண்டனைக்குட்பட வேண் டும். அந்த நாட்டில் பிறந் தவர், அந்நாட்டுக் குடிமக்க ளின் வாரிசு, தம்மைக் குடிமக் களாகப் பதிவுசெய்து கொண்டவர் ஆகியோர் குடிமக்களாவர். இவர்களே பாராளு மன்ற உறுப்பினர்களை நேரடியாகத் தேர்ந்தெடுக் கின்றனர். பாராளு மன்றத்துக்கு 51 உறுப் பினர்கள். ஒற்றை உறுப்பினர் தொகுதியி லிருந்து இவர்கள் யாவரும் தேர்ந்தெடுக்கப் பெறுகின்றனர். வாக்காளர் யாரும் தேர்த லில் போட்டியிடலாம். ஐந்தாண்டுக் காலம் ஒரு பாராளுமன்றத்தின் அதிகபட்சக் கால மாகும். பாராளு மன்றத்தலைவர், உறுப்பினர் களால் தேர்ந்தெடுக்கப்படுகிறார். ஆனால் இவர் பாராளுமன்ற உறுப்பினராக இருக்க வேண்டுமென்ற கட்டாயமில்லை. அப்படித் தேர்ந்தெடுக்கப்பட்டவர் உறுப்பினராக இல்லாவிட்டால் அவருக்கு வாக்களிக்கும் உரிமை இல்லை. நடைமுறை யாவும் ஆங்கிலப் பாராளுமன்ற முறையையே பிரதிபலிக் கின்றன. மலாய், மாண்டரின் சீனம், தமிழ், ஆங்கிலம் ஆகிய நான்கும் அங்கீகரிக்கப் பட்ட மொழிகளாகும். எந்த மொழியிற் பேசினாலும் மற்ற மூன்று மொழிகளிலும் ஏககாலத்தில் மொழிபெயர்க்கப்படுகின்றன.

'யாங் டி-பெர்த்துவான் நகரா' என்று அழைக்கப்பட்டு வந்த நாட்டுத் தலைவர், சிங்கப்பூர் தன்னாட்சியுள்ள தனிநாடான பின் வர், இப்பொழுது ஜனாதிபதி என்றே வழங்கப் படுகிறார். இப்பதவிக் காலம் நான்கு ஆண்டுக ளாகும். 4-12-1963 யாங் டி-பெர்த்துவான் நகரா ஆகத் தேர்ந்தெடுக்கப்பட்ட இஞ்சே (திருவாளர்) யூசோப் பின் இஷாக் தற்போ தைய ஜனாதிபதியாக இருந்து வருகிறார்.



தேசிய நிலநிதிக் கூட்டுறவுச் சங்க அமைப்பாளர் திரு மு. கி. தங்கக்காளீசுவரன்

இவர் பாராளு மன்ற உறுப் பினர்களாலே தேர்ந்தெடுக்கப் படுகிறார்.

பாராளு மன்றத்தில் அதிக எண்ணிக்கை யாளரின் ஆதர வைப் பெற்ற ஒருவரைப் பிர தம மந்திரியாக, ஜனாதிபதி நியமிக்கிறார். அப்படி நியமிக் கப்பட்டவரின் ஆலோசனை யின்படி மேற்கொண்டு மந்திரி களை நியமிக்கிறார். இப்பொழு துள்ள மந்திரி சபையில் பிரதம ருடன் பத்து மந்திரிகள் இருக்கி றார்கள். இவர்களே அரசாங்கத் துக்காகப் பாராளு மன்றத் துக்குக் கூட்டுப் பொறுப் பாளர்கள் ஆவர். தற்பொழு தைய ஆளும் கணத்தவருள் நான்கு ராஜ்ய மந்திரிகளும் **(Ministers of State)** இருந்து வருகிறார்கள். அரசாங்க நிர்வாகம் சுமார் 42,000 அதிகாரி களால் நடை பெறுகிறது. சுதந்திரமுள்ள அரசாங்க ஊழியர் தேர்வுக் குழு **(Public Service Commission)** ஊழியர்களைத் தேர்ந் தெடுக்கிறது.

சிங்கப்பூரில் தல நிர்வாகக் குழுக்கள் இல்லை. முன்னே இருந்த நகராட்சியும், ஊராட்சியும் சென்ற நான்காண்டு காலத்தில் அரசாங்க இலாகாக்களுள் இணைக்கப்பட்டு விட்டன. அதனால் சிக்கனமும் செம்மையும் நிலவுகின்றதாகக் கூறுகிறார்கள். மலாய், சீனம், தமிழ், ஆங்கிலம் ஆகிய நான்கு மொழிகள் ஆட்சி மொழிகள் என்று அங்கீ கரிக்கப்பட்டிருக்கின்றன. ஆனால் நிர்வாக மொழி ஆங்கிலம் என்பதைச் சட்டபூர்வ மாக ஒப்புக் கொண்டிருக்கின்றனர்.

இஸ்லாம், கிறிஸ்தவம், பௌத்தம், இந்து, கன்பூஷியம், டாஓய்ஸம் ஆகிய அறுவகைச் சமயம் எல்லா வகைச் சுதந்திரத்துடனும் இங்கு நிலவுகிறது. கல்விப் பணி செம்மை யாக நடைபெறுகிறது. பல்வகை நிலையிலும், தரத்திலும் பயிலும் மாணாக்கர் தொகை 482 ஆயிரமாகும். இது மக்கட் தொகையில் கால்வாசிக்கு மேற்பட்டுக் காணப்படுகிறது. இவற்றுள் ஆங்கில மொழிவழிக் கற்போர் தொகை இரண்டு லட்சத்துக்கும் அதிக மாகும். சீன மொழிவழி ஒன்றரை லட்சம், மலாய் மொழிவழிப் பயிலுவோர் கால் லட்சம். தமிழ் மொழிவழி சுமார் 2000 பேர்களே கற்கின்றனர். ஏனைய மாணாக்கர்,

தேசியத் தோட்டத் தொழிலா ளர் சங்கம் நிதிச் செயலாளர் திரு ஏ. எஸ். ராஜசுந்தரம்




தேசியத் தோட்டத் தொழிலா ளர் சங்கத் தலைவர் திரு எஸ். பி. எஸ். நாதன்



தேசியத் தோட்டத் தொழிலா ளர் சங்கப் பொதுச் செயலாளர் திரு பி. பி. நாராயணன்




சக்திக்கும், வலிமைக்கும்!
கோகோ
சர்க்கரை
மால்ட்
பால்
Bournvita
THE IDEAL FOOD DRINK FOR STRENGTH AND VIGOUR
சத்துப்பொருள்கள் அனைத்தும் ஒருங்கே தேவையா? தினசரி போர்ன்விடா அருந்துங்கள். தசைகள் வளர புரதங்களும், சக்திக்கும் வலிமைக்கும் புஷ்டியான மாவுச்சத்தும், எலும்புகளை வலுவாக்க தாது உப்புக்களும், பூரண ஆரோக்கியத்திற்கு மிக்க அவசியமான வைட்டமின்களும் இதிலே உள்ளன. மிகச்சுலபமாக தயாரிக்கலாம். காலையில் உற்சாகத்துடன் எழுந்திருக்க வேண்டுமா? இரவில் அமைதியாக உறங்க வேண்டுமா? போர்ன்விடா அருந்துங்கள்.
காட்பரீஸ் போர்ன்-விடா

சுமார் ஒரு லட்சம் பேர், ஒன்றுக்கு மேற்பட்ட மொழிகளில் பயில்கின்றனர். இவற்றில் ஒரு சிறப்பியல்பு என்னவென்றால் மொழி வேறாயினும், பாடமும் பொருளடக்கமும் ஒன்றாகவே அமைக்கப்படுகின்றன. பெரும்பாலான மாணவர் இரு மொழி அல்லது மும்மொழிகளில் பயிற்சி பெறுகின்றனர். பன்மொழிக் கல்விக் கூடங்களில் ஒரே தலைமை ஆசிரியர், ஒரே கட்டடம் என்றிருப்பதுடன் இரண்டு அல்லது மூன்று மொழிகள் கற்பிக்கப்படுகின்றன. மொத்த மாணவர் தொகையில் கிட்டத்தட்ட பாதி மாணவியர் என்றால் எல்லாரும் கல்விப் பயிற்சி பெறுகிறார்கள் என்பது புலப்படுகிறதன்றோ?

ஆசிரியப் பயிற்சி பெறுவோர் தொகை 1966ல் சுமார் 6,300. இதில் சுமார் 4,700 பேர் 4 மொழிவழிப் பயிற்சி பெறுகிறார்கள் என்றால் ஆசிரியர் தரம் எத்துணை யளவு உயர்ந்திருக்கும் என்பதைக் கூறவா வேண்டும்? முதியோர் கல்வித் திட்டம் நாட்டுக் கல்வித் துறையில் ஓர் அங்கமாகத் திகழ்கிறது. எழுத்தறிவுப் பயிற்சி வேறு தனியாக மக்கட்கு வழங்கப்படுகிறது. இவற்றுக்காக அரசாங்கம் 1966ம் ஆண்டுக்குப் பதினெட்டு லட்சம் டாலர்கள் மான்யம் வழங்கியுள்ளது.

மிக்க செல்வாக்கும் மதிநுகமும் உள்ள திருவாளர் லீ குவான் யீ (இவர் ஒரு சீனர்) சிங்கப்பூரின் பிரதமராக இருந்து வருகிறார். டாக்டர் டோ சின் ச்யே (இவரும் சீனர்) துணைப் பிரதமராவார். பாராளு மன்றத்தில் இரண்டே கட்சிகள். ஒன்று மக்கள் செயல் கட்சி (People's Action Party.) இதுதான் ஆளும் கட்சி. இதன் உறுப்பினர் தொகை 39. எதிர்க் கட்சியாக இருப்பது பாரிசான் சோஷலிஸ் (Barisan Socialis) கட்சியாகும். இதன் உறுப்பினர் தொகை 12.

இதன் இலச்சினை இடப்புறம் சிங்கமும் வலப்புறம் புலியும் தாங்கி நிற்கக் கேடயம் நடுவில் இருக்கும். கேடயத்தில் பிறைச் சந்திரனும், ஐம்முனை நட்சத்திரம் ஐந்தும் காணப்படும். அடியில் 'மஜுலா சிங்கபுரா' (Majulah Singapura) என்ற சொற்கள் காட்சி தரும். இதற்குச் சட்டபூர்வமான விளக்கம் தருவதையும் பார்ப்போம்.

''நடுவில் உள்ள கேடயத்தில் காணப்படும் இளம்பிறை உலக நாடுகளில் இளம் நாடு சிங்கபுரம் (ஆம், சிங்கப்பூர்தான்) என்பதைச் சுட்டுகிறது. ஐந்து நட்சத்திரங்கள் ஜனநாயகம், சமாதானம், முன்னேற்றம், நீதி, அறம் என்ற ஐந்தையும் உணர்த்துகின்றன. சிங்கம் சிங்கபுரத்தைக் குறிக்க, புலி மலாயா நாட்டைக் குறித்து நிற்கிறது. மேலும் புலியும் சிங்கமும் இணைந்திருப்பது மலாயாவுடன் சிங்கபுரம் இணங்கியே வாழும் என்பதைக் குறிக்கிறது. 'மஜுலா சிங்கபுரா' என்பது நாட்டுக் கோஷம்' என்கிறது அரசாங்க இலச்சினை விளக்கவுரை.

சோழர் இலச்சினையான புலி மலாயா நாடு முழுவதும் தொன்றுதொட்டு அந்நாட்டு இலச்சினையாகவும் இருந்து வருகிறது. சிங்கபுரம் என்ற தமிழ்ப் பெயர் மீண்டும் வழக்கிற்கு வந்திருக்கிறது. அதை ஆங்கிலத்தில் சொல்லும்போதும், எழுதும்போதும் (Lion City) என்றே வழங்குகிறார்கள்.

எல்லாவற்றுக்கும் மேலாகச் சிறப்பாகக் குறிப்பிடப்பட வேண்டுவது அந்நாட்டில் அரசாங்கத் துறையில் நிலவும் ஒழுக்கமே! எந்த இலாகாவிலும் 'லஞ்சம்' என்பது காண முடியாத ஒன்றாகி விட்டது. எந்த ஒரு விண்ணப்பம் எந்த ஒரு இலாகாவுக்கு வந்தாலும் இரண்டு மூன்று நாட்களுக்குள் அதற்கு முடிவு கூறி விடையளித்துவிட வேண்டும். இன்றேல் சம்பந்தப்பட்ட அதிகாரியின் பாடு ஆடிக் காற்றில் அலைபட்ட பஞ்சின் கதியாகி விடுமாம். எனவே எல்லாரும் நேர்மையுடனும், உடனடியாகவும் பணியை முடித்து விடுகிறார்கள். பொதுவாக மலேசியாவிலும் நிலைமை இப்படித்தான் என்றாலும் சிங்கபுரம் மேலும் சிறப்புடையதாக இருக்கிறது.

சிங்கப்பூர் பெரும்பாலும் வாணிகத்தை நம்பியே இருப்பதால் வாணிகப் பெருக்கத்துக்கு அதிக ஆக்கம் தருகிறது. வாங்குவோரிடம் நம்பிக்கையை வளர்த்தாலன்றி வாணிகம் வளம் பெறுதன்றோ? ஆனதால் வணிகத் துறையில் மோசடிகள் நடைபெறுமல் தடுப்பதில் மிகவும் அக்கறை காட்டுகிறது. பெரும்பாலும் சுற்றுப் பயணிகள் தாம் பல நகரங்களிலும் ஏமாற்றுக்குள்ளாகின்றனர். எனவே அவர்கள் ஏமாற்றப்படாமல் இருப்பதற்காக அரசாங்கம் மட்டுமின்றி வாணிகக் கழகங்களும் மிக்க எச்சரிக்கையுடன் நடவடிக்கை எடுத்துக் கொள்ளுகின்றன.

சுற்றுப் பயணிகள் வளர்ச்சிக் கழகம் (Tourist Promotion Board) என்பதொரு நிறுவனம். இது அரசாங்க அங்கீகாரத்தைப் பெற்றது. நடைமுறைச் செலவெல்லாம் விளம்பரக் கட்டணம், ஹோட்டல்கள், தரும் கட்டணப் பங்குத் தொகை போன்றவற்றைக் கொண்டே ஈடு செய்யப்படுகிறதாம். இதன் அலுவலகத்துக்குச் சென்றோம். அதன் இயக்குநர் எங்களைப் பேரன்புடன் வரவேற்றுப் பானம் தந்து உபசரித்தார். எல்லாவற்றையும் தெளிவாக விளக்கினார். பயணிகள் யார் வந்தாலும் இலவசமாக எல்லா உதவிகளையும் செய்கிறார்கள். எந்தப் பண்டம் வேண்டினும் நியாயமான விலையில் கிடைக்க உதவுகிறார்கள். ஒவ்வொரு பண்டத்துக்கும் விலை, கழிவுக்குப் பின் விலை, அதன் பல்வேறு நாட்டு நாணய விகிதக் குறிப்பு ஆகியவற்றுடன் பட்டியலைத் தந்து இதற்குக் கீழே பேரம் பண்ணி வாங்கலாம் என்ற ஆலோசனையையும் கூறுகிறார்கள்.

அங்கிருந்துகொண்டே நாம் கடிதம் எழுதத் தட்டெழுத்துப் பொறி, காகிதம், உறை யாவும் இலவசமாகத் தருகிறார்கள். நாம் வாங்கும் சாமான்கள் பத்திரமாக வைத்துக் கொள்ளப்பட ஓர் அலமாரி அறையையும் தாற்காலிகமாக — ஆம், இலவசமாகத்தான் தருகிறார்கள். என்ன விவரம் வேண்டும் என்றாலும் உடனே நமக்குக் கிடைக்கிறது. அப்படி அட்டவணை முறை (Index System) இயங்குகிறது.

இது அன்றி, சிங்கப்பூர் பயணிகள் சங்கம் (The Singapore Tourist Association) என்று ஒரு நிறுவனமும் இருக்கிறது. இது நாம் வந்து சிங்கப்பூரில் கால் வைத்த உடனேயே 'சிங்கப்பூருக்கு வாருங்கள்' (Welcome to Singapore) என்ற அழகான படப் புத்தகத்தைத் தந்து வரவேற்கிறது. அதைப் படித்தால் சிங்கபுரம் என்ற பெயருக்குரிய வரலாற்றுக் கதை, சிரீவிஜய சாம்ராஜ்யத்துக்குத் தலைநகராக இருந்த சிறப்பு, தற்பொழுதுள்ள நிலை, இங்கு மக்களின் சராசரி ஆண்டு வருமானம் 1,400 வெள்ளி (மலாயன் டாலர். அதாவது சுமார் 3200 ரூபாய்) என்பன போன்ற பலவற்றை நாம் ஒரு கண்ணோட்டத்தில் புரிந்து கொண்டு விடலாம். எங்கு தங்க வேண்டும்; என்னென்னவற்றைப் பார்க்க வேண்டும்; முறை என்ன, வழி என்ன; சாமான்கள் வாங்க வேண்டுமென்றால் எங்கு, எப்படி வாங்க வேண்டும்; யாரை நம்பலாம்; யாரை நம்பக் கூடாது என்பன போன்றவற்றையெல்லாம் கூறிவிட்டு மேலும் விவரம் அல்லது விளக்கம் வேண்டுமானால் யாரிடம் போக வேண்டும் என்பதையும் தெரிவிக்கிறது

'அருமை; அருமை' என்று பாராட்டிவிட்டு, அதை வழிகாட்டியாகவே கொண்டு நாங்கள் சிங்கபுரத்தை முற்றுகையிட்டோம். சில நண்பர்கள் பலவற்றை வாங்கினாலும் என்னைப் போன்ற சிலர் ஒன்றிரண்டுதான் வாங்கினோம். ஆனால் பல இடங்கட்கும் சென்று வியாபாரத் தலங்களையும், தெருக்களையும் பண்டங்களையும், அவை காட்சி தரும் சிறப்பையும் கண்டு மகிழ்ந்தோம்.

28–4–66 வியாழனன்று எங்களின் கடைசிச் சொற்பொழிவு நிகழ்ந்தது. மலாயா தீபகற்பத்தின் தென் கோடி மாநிலமான ஜோஹோரின் தலைநகரான ஜோஹோர்பார் நகரத்தில் நடைபெற்றது. தமிழ் நாட்டிலிருந்தும், ஈழத்திலிருந்தும் வந்துள்ள பல தமிழ்ச் சகோதரர்கள்தாம் ஏற்பாடு செய்திருந்தார்கள். இருவானர்கள் இராமகிருஷ்ணன் அவர்களும், சுப்பையா செட்டியார் அவர்களும் மிகப் பெரும் பங்கு எடுத்துக் கொண்டவர்கள். அவர்களின் அன்புதான் எங்களை அங்கு இட்டுச் சென்றது.


இந்தக் கூட்டத்தின் தனித் தன்மை பேச்சாளர்க்கு மாலை அணிவிக்காமல், எல்லார்க்கும் சட்டைத் துணி அணிவித்தனைதான். அதை யாருமே மகிழ்ச்சியுடன் ஏற்றார்கள். 'கணேசனுக்கு இரண்டும் மூன்றுதான்' என்று கூட வந்தவர் கூறினாலும் பிறர்க்காவது ஆகட்டுமே என்று நானும்தான் அதைப் பத்திரப்படுத்திக் கொண்டேன்.

ஜோஹோர்பாருவுக்குச் சென்றிருந்த பொழுது ஓர் இன்பகரமான செய்தியைக் கேள்விப்பட்டேன். அங்குள்ள தமிழர்கள் திருமுருகன் கோவில் கட்ட ஏற்பாடு செய்து கொண்டிருந்ததுதான் அச்செய்தி. 'இதில் என்ன வியப்பு?' என்றுதானே கேட்கிறீர்கள்! மலேசிய அரசாங்கம் இக் கோவிலுக்கு நன்கொடை தர இசைந்திருக்கிறதாம். இஸ்லாமியரையே பெரும்பான்மையோராகக் கொண்ட ஒரு நாட்டு ஆட்சி இந்துக்களின் ஆலயத்துக்கு நன்கொடை கொடுப்பதென்றால் அது ஆளும் கணத்தவரின் சமநோக்குடைய பண்பாட்டையன்றோ பறைசாற்றுகிறது?

தீமையை வெறுத்து, சீலத்தையும், ஒழுக்கத்தையும் காக்க வேண்டும் என்ற உணர்வை ஊட்டுவது சமய வாழ்வே; சமயக் காழ்ப்பின்றிச் சமய நெறி நிற்பதே சன்மார்க்கம்; எந்த முறையினும், எந்தப் பெயரினும் இறைவனை நம்பி வாழ்வதே வாழ்வு என்றெல்லாம் நமக்குப் போதிக்கும் நூல்கள் பல உண்டு. ஆனால் நமது ஆட்சியாளர்கள் 'மதச் சார்பற்ற ஆட்சி' என்ற மாயையுள் மூழ்கிச் சிக்குண்டு கிடப்பதால் ஒருசில மனிதர்களின் வறட்டுத் தத்துவத்துக்கு அடிமைப்பட்டு மிகப் பெரும்பாலோர் மனம் புழுங்கிக் கொண்டிருக்கிறோம். காந்தியடிகள் வாங்கித் தந்த சுதந்திர நாட்டில் கடவுள் தீண்டத்தகாதவனாக, கேட்கத் தகாதவனாக, பார்க்கத் தகாதவனாக ஆக்கப் பட்டிருக்கிறான். தெய்வ நம்பிக்கை மதிக்கப்படாத எங்குதான் சீலத்தை, ஒழுக்கத்தைக் காண முடியும்?

முதலில் ஜோஹோர்பாருவில் கட்டப்பட இருக்கிற முருகன் கோவிலுக்கு மலேசிய ஆட்சி இலவசமாக நிலம் தந்துள்ளதாம். அக்கோவிலுக்கு மலேசிய அமைச்சரும், மலாயா இந்தியன் காங்கிரஸ் தலைவருமான டான்ஸ்ரீ வி. தி. சம்பந்தன் அவர்கள் கால்கோள் விழாவும் நடத்தினார் என்ற செய்தி சில நாள் முன் செவிக்குத் தேன் என இனித்தது. (அடுத்த இதழில் முடியும்)

நெப்போலியனின் .... உயரம்



இங்கிலாந்து நாட்டுக் கடற்படைப் பள்ளி ஒன்றில் பயிற்சி பெற்று வந்த மாணவன் அதிக உயரம் இல்லாதவன். அங்கே பயிற்சி பெற வேண்டுமானால் ஐந்தரை அடி உயரம் கட்டாயம் இருக்க வேண்டும். மேற்படி மாணவன் மிகவும் புத்திசாலியாக இருந்ததோடல்லாமல் சில பெரிய மனிதர்களின் சிபாரிசினாலும் அப்பள்ளியில் சேர்ந்து விட்டான். முதல் நாள் 'பரேடு'க்குப் போகும் வழியில் இன்னொரு மாணவனைச் சந்தித்தான் குள்ளன். அவன் நல்ல உயரம். குள்ளனைப் பார்த்துவிட்டு ஆச்சரியமடைந்து "இந்தப் பள்ளியில் உன்னைப் போன்ற குள்ளனைப் பயிற்சி பெற அனுமதிக்கிறார்களா? உன் உயரம் எவ்வளவு?" என்று கேட்டான் நெட்டை மாணவன். "நெப்போலியனை விட நான்கு அங்குலம் அதிக உயரம் நான்" என்று பதில் கூறிவிட்டு மிடுக்காகப் 'பரேடு'க்குப் போனான் குள்ளன். தகவல்: ஜோ

" மாகஸின் டைஜஸ்ட் "


Zam-Buk
ஜாம்-பக் சிறந்த மூலிகைக் களிம்பு
Zam-Buk
HERBAL BALM
WONDERFULLY SOOTHING AND HEALING
SORE ACHING FEET
ஜாம்-பக், பாரதத்தின் உன்னதமான
மூலிகைக் களிம்பு. விரைவாகவும்,
பத்திரமாயும் குணப்படுத்த உதவுகிறது.
காயங்களுக்கு
தீப்புண்களுக்கு
முகப் பருக்களுக்கு

அட்டைப் படக் கதை

காதலோ காதல்!



• ரா. கோ. •

மதுரையை நோக்கித் திருவனந்தபுரம் மெயில் அதிவேகமாய்ப் போய்க் கொண்டிருந்தது. அந்த வண்டியில் முதல் வகுப்புப் பெட்டி ஒன்றில் காலை நீட்டிப் படுத்துக் கொண்டிருந்த ராகவனின் மனம் அந்த ரயிலை விடப் படுவேகமாக டில்லி மாநகரை நோக்கிப் பறந்து கொண்டிருந்தது. டில்லிக்குச் செல்ல ரயிலில் மூன்று நாட்களும், விமானத்தில் எட்டு மணியும் ஆகும். ஆனால் நம் ராகவனின் மனமாகிய புஷ்பக விமானம் நினைத்த விநாடியே டில்லியை அடைந்து விட்டது. அங்கு கரோல்பாக்கிலுள்ள ஒரு பெரிய மாடி வீட்டின் மூன்றாவது தளத்தில் குடியிருக்கும் நிர்மலைச் சுற்றி வட்டமிட்டுக் கொண்டிருந்தது. அவளுடைய முகம், அவளுடைய பேச்சு, அந்தப் புன்னகை, இவை யெல்லாமாகச் சேர்ந்து அவனுக்குத் தூக்கம் வராமல் செய்தன. சொல்லப் போனால், அவளைப் பிரிந்து சரியாக இன்னும் நான்கு நாட்கள் கூட ஆகவில்லை. இதற்குள்ளேயே இந்தப் பாழாய்ப் போன மனம் இப்படிச் சஞ்சலப்படுகிறதே! ஹூம்... ஒரு நீண்ட மூச்சு ராகவனிடத்திலிருந்து வெளிப்பட்டது.

வண்டி திருச்சியைத் தாண்டிப் போய்க் கொண்டிருந்தது. வெளியிலிருந்து 'சிலு சிலு' வென்று காற்று வீசிக் கொண்டிருந்தது. அந்தக் காற்றுக்கும் ராகவன் போர்த்திக் கொண்டிருந்த காஷ்மீர்ப் போர்வைக்கும் சுகமான தூக்கம்தான் வரும். ஆனால் அவன் மனம்தான் இன்பத்தில் மிதந்து கொண்டிருக்கிறதே? ஒரு மனிதனுக்கு இன்பமோ, துன்பமோ எது வந்தாலும் தூக்கம் பிடிக்காது போலும்!

ராகவனுடைய சொந்த ஊர் மதுரை. அவன் பிறந்து வளர்ந்து படித்து ஆள் ஆனது எல்லாம் மதுரைதான். அவ்வளவு நாட்களாக அந்த ஊர்த் தண்ணீரில் வளர்ந்தவனுக்குப் படிப்பு முடிந்து ஒரு பட்டம் வாங்கினவுடன் அந்த ஊர் கசந்தது. எங்கேனும் கண்காணாத இடத்தில் சென்று சிறிது நாட்கள் நிம்மதியாக இருந்து விட்டு வரவேண்டும் போல் தோன்றியது. அந்த எண்ணம் மனத்தில் முளைத்ததிலிருந்து அவன் தினமும் பேப்பரில் 'தேவை'ப் பகுதியைத் துழாவி வந்தான். ஒரு நாள் அதிர்ஷ்டவசமாய் டில்லியில் ஓர் இங்லிஷ் மருந்துக் கம்பெனியில் 'சேல்ஸ்மேன்' வேண்டும் என்று கண்டிருந்தது. அதற்கு மனுப்போட்டான். கூடவே தன் போட்டோ ஒன்றையும் அனுப்பி யிருந்தான். திடீரென்று ஒரு நாள் அந்தக் கம்பெனியிலிருந்து உத்தியோகத்துக்கு ஆர்டர் வந்த போது அவன் கண்களை அவனால் நம்பவே முடியவில்லை. தந்தையிடம் ஒரு பெரிய யுத்தம் நடத்தி அவரைச் சம்மதிக்க வைத்தான். ஆயிரம் மைல்களுக்கு அப்பால் சென்று அவன் சம்பாதித்துத்தான் ஆகவேண்டும் என்பதில்லை. ஆனால் அவன் ஒன்றைச் சாதிக்க வேண்டுமானால் சாதித்தே தீருவான்.

டில்லி அவனுக்கு ரொம்பப் பிடித்து விட்டது. குளிர் என்றால் ஆளைக் 'கிடுகிடு'க்கச் செய்யும் குளிர். வெய்யில் என்றால் மனிதனை பஸ்மம் ஆக்கும் வெய்யில். இந்த இரண்டுக்கும் பழக்கப்பட்டு விட்டால் டில்லியைப்போல் ஒரு நல்ல நகரம் இருக்கவே முடியாது. ராகவனுக்கு இரண்டும் பழக்கப் பட்டு விட்டன. சொந்த ஊரில் இருந்ததை விட இப்போது அவனுக்குச் சதை போட்டிருந்தது. ராகவன் நல்ல சிவப்பு. யமுனை நதியின் தண்ணீர் அவனை இன்னும் சிவக்க வைத்தது. சற்றே நீண்ட முகம். சுருள் சுருளான கேசங்களில் இரண்டொன்று எப்பொழுதும் அவன் நெற்றியில் விழுந்து விளையாடிக் கொண்டிருக்கும். வெள்ளைச் சட்டையுடனும், வெள்ளைப் பேண்டுடனும் கிளம்பி விட்டால் எல்லோரும் ஒரு மாதிரியாகத் தான் பார்ப்பார்கள்.

அப்படி யிருக்க நிர்மல் தன் மனத்தை அவனிடம் பறி கொடுத்ததில் என்ன வியப்பு இருக்கிறது?

ஒரு முறை அவன் தாஜ்மஹால் பார்க்கப் புறப்பட்டான். அன்று பௌர்ணமி ஒரு காமிராவைத் தோளில் மாட்டிக் கொண்டு, ஒரு தோல் பெட்டி சகிதமாய் ரயில் வண்டியில் ஏறினான். ரயிலில் கூட்டம் அதிகமாகத்தான் இருந்தது. எப்பொழுது வண்டி நகரும் என்று காத்திருந்தான். அந்தச் சமயத்தில் ஒரு பெண்ணும் ஒரு வயோதிக மனிதரும் அவசரம் அவசரமாக ஏறினார்கள். அந்த மனிதர் ராகவன் மடியில் வந்து உட்கார்ந்து விட்டார். பாவம், அந்தப் பெண் மாத்திரம் நின்று கொண்டிருந்தாள். ராகவன் எழுந்து அவளுக்கு இடம் கொடுத்தான். அவள் நன்றிப் பெருக்கால் ராகவனை ஒரு முறை ஏறிட்டு நோக்கினாள். ராகவனை அப்போது அந்தப் பார்வை ஒன்றும் செய்யவில்லை. தாஜ்மஹால் பார்க்கப் போகிற ஆவலில் இருந்தது அவன் மனம்.



ஆனால் அன்று இரவு தாஜ்மஹாலில் அவளை மறுபடியும் பார்க்க நேர்ந்தபோது ஒரு கணம் திடுக்கிட்டான் ராகவன். கண்களைக் கசக்கிக் கொண்டு பார்த்தான். எவளுக்காகத் தாஜ்மஹால் கட்டப்பட்டதோ அவளே யௌவனக் கோலத்தில் வந்து நிற்பது போல் இருந்தது. தங்கக் கட்டியில் தந்தத்தைக் கொண்டு உரைத்தால் எப்படியிருக்கும்? அந்த நிறம் அவளுடையது. ஆனால் அவளது இரு கன்னங்கள் மட்டும் ரோஜா நிறம். அவள் நீண்ட மூக்கும், கரிய பெரிய கண்களும் அவள் ஒரு சிறந்த அழகி என்று பறைசாற்றிக் கொண்டிருந்தன. அப்பா! இப்படியும் ஓர் அழகு இருப்பதுண்டா?

அவளும் நோக்கினாள். இவனும் நோக்கினான். இல்லை. இருவரும் ஒருவரையொருவர் விழுங்கப் பார்த்தனர். அவள் தந்தையும் அவனிடம் பேசக் கொடுத்தார். ஒரு நிமிஷத்தில் அவர்களுள் காதல் நோய் பற்றிக் கொண்டது. இவன் அவளைப் பற்றி விசாரித்தான். அவள் இவனைப் பற்றிக் கேட்டாள். இருவரும் டில்லி வாசிகள்.

அவள் பார்ஸி வகுப்பைச் சேர்ந்தவள். டில்லியில் வேலை பார்க்கிறான். இவனை நம்பிப் பல தம்பி தங்கைகள். தந்தையோ வயதானவர். இவன்தான் அவர் குடும்பம் என்கிற படகின் துடுப்பு! மணந்தால் நிர்மல்; இல்லையேல் வாழ்நாள் முழுதுமே கல்யாணமே இல்லை என்ற முடிவுக்கு வந்து விட்டான் ராகவன். அவன் வாழ்க்கை ஒரே ஆனந்த மயம்தான். டில்லியில் அவன் நிர்மலுடன் சுற்றாத இடமில்லை. நுழையாத பெரிய ஹோட்டலும் இல்லை.

வருஷம் ஒன்று மறைந்து விட்டது. திடீரென்று அவனுக்குத் தன்னுடைய ஊரைப் பற்றிய நினைவு வந்தது. அதோடு தன்னைப் பெற்ற வயதான தந்தையும் தாயும் அவன் கண்முன்னால் தோன்றினார்கள். அவர்களைப் பார்த்து எவ்வளவு நாட்கள் ஆகி விட்டன? ஓடிப் போய் அம்மாவைப் பார்க்க வேண்டும் போல் ஓர் எண்ணம் முளைத்தது. அதோடு இன்னொரு முக்கிய காரணமும் அவர்களைப் பார்க்க வேண்டும் என்பதில் இருந்தது. ஊருக்குப் போய் நிர்மலைப் பற்றி அவர்களிடம் சொல்ல வேண்டும். எப்பாடு பட்டாவது அவர்களைச் சம்மதிக்க வைக்க வேண்டும். ஒருமாத லீவுக்கு எழுதிப் போட்ட பின் தான் வரப் போவதாகக் கடிதம் கூடப் போடாமல் புறப்பட்டு விட்டான் ராகவன். அதன் விளைவுதான் இப்போது திருவனந்தபுரம் மெயிலில் அவன் போய்க் கொண்டிருந்தான்!

ஃ ஃ ஃ

குதிரை வண்டியிலிருந்து குதித்து, திறந்து கிடந்த வீட்டினுள் நுழையும்போது அவன் வீட்டு வாசலில் ஒரு கார் நிறுத்தப் பட்டிருப்பதைக் கண்டான். இது டாக்டர் சுப்பிரமணியத்தின் காரல்லவா? இது ஏன் நம் வீட்டின் எதிரே நிற்க வேண்டும்?

''அம்மா!'' என்றவாறே வீட்டினுள் நுழைந்தான் ராகவன். ''யாரு? என்றபடி வந்த அவன் தாயார் ஒரு கணம் அவனைக் கண்டு திடுக்கிட்டு விட்டாள்.

''என்னம்மா அப்படிப் பார்க்கிறாய்? அப்பா எங்கே?'' என்று வினவினான்.

''என்ன ராகவனா? என்னடா இது! நேற்றுத்தானே உனக்குக் கடிதம் போட்டேன், புறப்பட்டு வரச்சொல்லி. அது இவ்வளவு சீக்கிரத்தில் கிடைத்து விட்டதா?''

''இல்லையம்மா. எனக்குத்தான் உன்னைப் பார்க்க வேண்டும்போல் தோன்றியது. புறப்பட்டு விட்டேன். அது சரி, யாருக்கு என்ன உடம்பு? டாக்டர் கார் ஏன் வாசலில் நிற்கிறது?''

''யாருக்கா? அப்பாவுக்குத்தான் ஒரு வாரமாய் உடம்பு சரியாக இல்லை. ஜுரம் நூற்றி நாலு டிகிரி இருக்கு. அதனால்தான் உன்னைப் புறப்பட்டு வா என்று கடிதம் போட்டேன்'' என்று விளக்கினாள் அவன் தாய்.

''அப்பா!'' என்று பதறியவாறு உள்ளே ஓடினான் ராகவன். ''ராகவனா? எப்பொழுதடா வந்தாய்?'' முக்கி முனகிக் கொண்டே கேட்டார் தந்தை.

டாக்டரை வழியனுப்ப வந்த ராகவனிடம், ''மிஸ்டர் ராகவன், ஒரு விஷயம். அப்பாவுக்கு வயதாகி விட்டது. இனி அதிக காலம் நம்பிப் பிரயோசனமில்லை. எவ்வளவு நாள் தாங்கும் என்று திடமாகச் சொல்ல முடியாது. ஏதோ மனத்தில் ஓர் ஏக்கம் இருப்பது போல் படுகிறது. ஜாக்கிரதை'' என்று சொல்லிவிட்டு டாக்டர் காரில் ஏறப் போனவர் திரும்ப அவனைக் கூப்பிட்டு, ''ராகவன், அப்பாவின் மனத்துக்கு அதிர்ச்சி ஏற்படாமல் பார்த்துக் கொள். அம்மாதிரி ஏதேனும் நிகழ்ந்து விட்டால் பிறகு என்னைக் கேட்டுப் பிரயோசனமில்லை'' என்று சொல்லி விட்டுப் போய் விட்டார்!

ராகவன் கண்ணெதிரே மதுரை நகரே சுழன்றது. ''பத்மினி! ராகவனுக்குக் காப்பி கொடுத்தாயா?'' என்று கேட்டுக்கொண்டே அங்கு வந்தாள் அவன் தாயார்.

''பத்மினியா? அது யாரம்மா?'' என்று அதிசயத்துடன் வினவினான் ராகவன்.

''யாரா? நன்றாகக் கேட்டாய்! உன் அத்தை மகள் பத்மினியடா! நீ இவளைப் பார்த்து எட்டு வருஷங்களாகி விட்டன. இப்பொழுது பார்!'' என்றாள்.

எதிரே காப்பி டம்ளருடன் நின்ற பத்மினியைப் பார்த்தான் ராகவன். ஐந்து நிமிடங்கள் அவன் கண்கள் அந்த இடத்தை விட்டு நகரவேயில்லை.

அன்று பிற்பகல் தந்தை அவனை வரச் சொல்லிப் பத்மினி மூலமாய்ச் சொல்லியனுப்பினார்.

''என்ன அப்பா!'' என்று கேட்டுக் கொண்டே அவரிடம் வந்து அமர்ந்தான்.

''ராகவன், உன்னிடம் ஒரு விஷயம் சொல்ல வேண்டும்'' என்றார் அவர்.

''அப்பா, நான் இன்னும் ஒரு மாதம் இங்கு இருக்கப் போகிறேன். பிறகு எல்லா விஷயங்களையும் பேசிக் கொள்ளலாம். இப்பொழுது நிம்மதியாகப் படுத்துத் தூங்குங்கள்!'' என்றான் அவன்.

''இது பேசினால்தான் என் வியாதி குறையும். இல்லையேல், நான்....'' என்று கூறி நிறுத்தினார் அவர்.

''அப்பா! அப்படியெல்லாம் சொல்லாதீர்கள்!'' என்றான் விம்மிக் கொண்டே.

''இதோ பார், அந்த வேலையை உடனே இங்கிருந்து கொண்டே ராஜிநாமா செய். அப்படியே இன்னொரு விஷயம். இந்தப் பத்மினி இருக்கிறாளே, இவள் ஒரு மாதம் முன்பு தன் தாயைப் பறி கொடுத்துவிட்டாள். அவள் தாய் சாவதற்கு முன்பு பத்மினியை என் மருமகளாக்கிக் கொள்ள வேண்டும் என்று அன்புக் கட்டளை இட்டிருக்கிறாள். நானும் சம்மதித்து விட்டேன். நான் பிழைத்தாலும் சரி, செத்தாலும் சரி, நீ அவளைக் கல்யாணம் செய்து கொள்ள வேண்டும். என் வாக்கைக் காப்பாற்றுவாய் என்ற நினைப்பில் என் சகோதரிக்கு வாக்குக் கொடுத்து விட்டேன். என் வாக்கைக் காப்பாற்றுவாயா?'' என்று கேட்டார் தந்தை.

எட்டுத் திக்குகளும் சுழன்றன ராகவனுக்கு. ஒவ்வொரு திக்கிலிருந்தும் நிர்மல் புன்னகை புரிந்து கொண்டிருந்தாள்.

அதே சமயத்தில் டாக்டர் காரில் ஏறும் பொழுது கூறியது நினைவுக்கு வந்தது. பேசவும் முடியவில்லை. நிர்மலை இழப்பதா? ஐயய்யோ, அவனால் நினைத்துக்கூடப் பார்க்க


புல்லரிக்கும் மக்ளீன்ஸ்
சுவை மூலம்
உங்கள் வாய்க்குப் புதுமலர்ச்சி புகட்டுவீர்!
மக்ளீன்ஸ்
3 வகைகளில் செயலாற்றுகிறது
1 சுத்தமாக்க — சொத்தை விழக் காரணமான உணவுத் துணுக்குகளை அகற்றுகிறது.
2 வெண்மையாக்க — மஞ்சள் படலத்தைப் போக்கிப் பற்களுக்கு மெருகிடுகிறது.
3 காக்க — திட வலுவுள்ள ஆரோக்கியமுடன் உங்கள் பற்களையும் ஈறுகளையும் பராமரிக்கிறது.
Macleans
TOOTH PASTE
அதிவெண்மையான பற்களுக்கு—
மக்ளீன்ஸ்
MTP-i-P-1-63/56 TM

முடியவில்லை. அப்படி எனில் அப்பா? இருவரில் யாரை இழப்பது? பீறிட்டுக் கொண்டு கதறி அழ வேண்டும் போல் தோன்றியது. இன்று வளர்ந்திருக்கும் இந்த உடல் அவருடையது. அதை அவர் இஷ்டப்படி செய்ய உரிமை இல்லையா? நிர்மலுக்கு நம்மை விட்டால் கலியாணமே ஆகாதா என்ன? அவள் இருக்கிற அழகுக்கு யாரேனும் வந்து கொத்திக் கொண்டு போய்விட மாட்டார்களா?

''என்ன ராகவா ? அப்படியானால் உனக்குப் பத்மினியைச் செய்து கொள்ள விருப்பமில்லையா ? ஐயோ, அப்படியானால் நான் கொடுத்த வாக்கு என்ன ஆவது?'' என்றார் அவர் மூச்சு வாங்க. மார்பு 'படபட'வென்று வேகமாய் அடித்துக் கொள்ள ஆரம்பித்தது.

''இல்லையப்பா இல்லை. நான் பத்மினியைக் கல்யாணம் செய்து கொள்கிறேன். பயப்படாதீர்கள்!'' என்று சொல்லி விட்டு, 'சரே'லென்று மாடிக்கு ஓடி விட்டான். தன் நிலையை விளக்கி நிர்மலுக்கு ஒரு கடிதம் எழுத வேண்டுமே !

அன்புள்ள நிர்மல்,

உன்னை நான் இனி இப்படி அழைக்க அருகதை இல்லாதவனாய் இருக்கிறேன். நான் என்னவென்று எழுதுவேன்? என் தந்தை இங்கு மரணப் படுக்கையில் கிடக்கிறார். அவர் மரணப் படுக்கையில் இருந்த தன் சகோதரிக்கு அவள் மகளைத் தன் மருமகளாக்கிக் கொள்ளுகிறேன் என்று வாக்குக் கொடுத்து விட்டாராம். நான் இப்போது மறுத்து ஏதாகிலும் கூறினால் அவர் உயிருக்கு ஆபத்து. நான் என்ன செய்வேன், சொல். தயவுசெய்து என்னை மறந்து விடு. இந்த ஜன்மத்தில் நம் காதல் ஈடேறாவிட்டாலும் அடுத்த ஜன்மத்திலாவது ஈடேற எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திப்போம்.

இப்படிக்கு, உன் சகோதரன்
ராகவன்.

கடிதத்தைத் தபால் பெட்டியிலுள் போட்டுவிட்டு வந்தபோது, ''உங்களுக்கு ஒரு கடிதம் வந்திருக்கு'' என்றபடி ஒரு கவரை அவனிடத்தில் கொடுத்தாள் பத்மினி. அவளை ஒரு முறை பார்த்து விட்டுக் கவரை வாங்கிக் கொண்டான். கவரை அவசரம் அவசரமாகப் பிரித்துப் படிக்கலானான் ராகவன்.

உங்களுக்கு இந்தக் கடிதம் ஆறாத் துயரம் அளிக்கும் என்பதில் சந்தேகமில்லை. இருந்தாலும் எழுதிவிட வேண்டியது என் கடமை.

நீங்கள் டில்லியை விட்டுப் போன மறு நாள் பம்பாயிலிருந்து எங்கள் தூர உறவினர் ஒருவர் வந்தார். பெரிய பணக்காரர். அவர் என்னைப் பார்த்தார். கூடவே தன் மகனையும் என் அருகில் நிற்க வைத்து மானஸீகமாகப் பார்த்தார் போலும்! என் தந்தையிடமும் அவர் தன் விருப்பத்தை வெளியிட்டார். என் அப்பாவுக்கோ சந்தோஷத்தால் இதயம் வெடிக்காத குறை. எங்கள் குடும்பத்தின் வறுமையெல்லாம் ஒரு நொடியில் போக்குகிறேன் என்று அவர் கூறியபோது என் தந்தையின் ஆனந்தத்துக்கு எல்லையில்லாமல் போய் விட்டது. என் சம்மதத்தைக் கேட்காமலே தம் சம்மதத்தைத் தெரிவித்து விட்டார். என் மனத்துடன் போராடினேன். நான் ஒருத்தி வாழ ஆசைப்படுவதினால் என் குடும்பமே அல்லவா நசுங்கி விடும்? நான் ஒருத்தி தியாகம் செய்தால் எவ்வளவு பேர் சந்தோஷப்படுவார்கள்! நானும் சம்மதித்து விட்டேன். தயவுசெய்து என்னை மன்னித்து மறந்து விடுங்கள். அடுத்த ஜன்மம் என்று ஒன்று இருக்குமானால் அப்போதாவது நம் காதல் நிறைவேறட்டும்.

தங்கள் சகோதரி
நிர்மல்.

ராகவனுக்குத் தலை சுற்ற, அவன் தடுமாறியதன் காரணம் பத்மினிக்குப் புரியவில்லை. அது புரியாமலே இருக்கட்டுமே !

படித்துப் பாருங்கள்

காவடிச்சிந்து

சிறந்த கவியாகிய அண்ணாமலை ரெட்டியார் 1865ல், திருநெல்வேலி ஜில்லாவில் உள்ள சென்னிகுளத்தில் பிறந்தார். இளமையிலேயே கவி பாடும் திறமை பெற்ற அவர் கழுகுமலையில் உள்ள முருகப் பெருமான் மீது ஏறக்குறைய இருபத்தைந்து சிந்துகள் இயற்றினார். வழிநடைச் சிந்து, நொண்டிச் சிந்து போன்றவை நாட்டுப் பாடல் இசை வகையைச் சேர்ந்தவை. இவற்றின் இசை அமைப்பும் முடுகிய நடையும் மிகவும் கவர்ச்சிகரமானவை.

அநேகமாக மறைந்து போன இந்த அருமையான பாடல்களைப் பேராசிரியர் எஸ். இராமநாதன் தமிழ் நாட்டிலுள்ள பல்வேறு பகுதிகளுக்கும் சென்று சேகரித்து, எளிய முறையில் எல்லோரும் கற்கும்படியாக ஸ்வரதாளக் குறிப்புடன் வெளியிட்டிருக்கிறார். இந்தப் பணிக்குத் தமிழுலகமும் இசையுலகமும் அவருக்குக் கடமைப்பட்டிருக்கின்றன.

1904ல் காவடிச் சிந்துப் பதிப்பு முதன் முதலாக வெளிவந்தபோது அரசாங்கம் தடை செய்தது. ஆகவே, பிற பிரசுரகர்த்தர்கள் சொற்களை யெல்லாம் மனம் போனபடி மாற்றி வெளியிட்டனர். பேராசிரியர் இராமநாதன் பாடல்களின் பண்டைய அமைப்பிலேயே வெளியிட்டிருப்பது பாராட்டத்தக்கது. அவர் எழுதியுள்ள ஆராய்ச்சி முன்னுரை மிகவும் பயன் உடையது.

இந்த அரிய பணிக்காகப் பதிப்பாசிரியரைப் பாராட்டுவதுடன் இதற்குப் பொருள் உதவி புரிந்துள்ள தமிழ்நாடு சங்கீத நாடக சங்கத்தினருக்கும் நம் பாராட்டு உரித்தாகும்.

காவடிச் சிந்து: ஸ்வரதாளக் குறிப்புடன்; பதிப்பாசிரியர்: சங்கீத பூஷணம் எஸ். இராமநாதன்; வெளியிடுவோர்: கலைமகள் இசைக் கல்லூரி, 20 சைடோஜித் தெரு, சென்னை—5; விலை: ரூ. 2.

— முசிறி சுப்பிரமணிய ஐயர்



- யாத்திரைக்குப் பாராட்டு
- கடின நெஞ்சமா ?
- சுலோகம் காட்டும் வழி
- சோக கீதம்
- அவமரியாதை வேண்டாம் !

சுகமான 'யாத்திரை' ஒன்று முடிவடைந்திருக்கிறது. புகைவண்டி நட்பு மாதிரி இல்லாமல், கதாபாத்திரங்களைப் பிரிய மனசு சங்கடப்படுகிறது! பாருக்குட்டி மாதிரி உலகில் எல்லாருமே இருந்துவிட்டால் ஓ....! எவ்வளவு பிரமாதமாக இருக்கும்.

திருச்சி
28-7-66 அரியமங்கலம் சுவாமிநாதன்

கதையின் இறுதியில் ஓர் அன்புச் சூழ்நிலையை — இன்பச் சூழ்நிலையை — ஆசிரியர் உருவாக்கினாலும், சுந்தரத்தின் நினைவு வந்து அந்த இன்பத்தை மீறியதோர் ஆழ்ந்த சோகத்தை நெஞ்சு முழுவதும் பரப்பிவிடுகிறது. ஆசிரியர் திரு ஏ. எஸ். ராகவனுக்கு இந்நாவல் ஒரு முழு வெற்றியே !

பெங்களூர்
29-7-66 த. கணேசன்

ராகவன் மனிதனின் மெல்லிய உணர்வுகளை எவ்வளவு கச்சிதமாக உணர்ந்துள்ளார்! பாத்திரப் படைப்பு பிரமாதம்.

பெங்களூர்
28-7-66 ஜெயதேவன்

தமிழ் நாட்டுப் பெண்களைப் பற்றிய இவ்வளவு மதிப்புக் குறைவான நோக்கை வெளியிடுவதைப் பார்த்து நாங்கள் மிகவும் வருந்துகிறோம். கணவன் ஆஸ்பத்திரியில் மரணப் படுக்கையில் மனைவியைக் கடைசி முறையாகப் பார்க்க ஆவலுடன் இருக்கும் பொழுது எவ்வளவு கடின நெஞ்சமுள்ள தமிழ்ப் பெண்ணும் தியேட்டரில் போய் நிற்கமாட்டாள்.

வலங்கைமான்
29-7-66 ஜே. ராஜலக்ஷ்மி, எஸ். லலிதா

''கல்கி'' 24-7-66 இதழில் ''நிமித்த மாத்ரம் பவ'' என்கிற தலைப்பின் கீழ் எழுதியுள்ள தலையங்கம் ''போர் முரசம்'' அறைவது போல் தெம்பும் வளர்ச்சியும் ஊட்டுவதாக இருந்தது.

ராஜாஜி மேற்கோள் காட்டிய சுலோகத்தில் ருசிகரமான உள்ளர்த்தம் ஒன்று அடங்கியுள்ளது. கண்ணன் அர்ஜுனனை நோக்கி ''ஸவ்யஸாசி'' என்று அழைக்கிறான். இடது கையால் வில்லைப் பிடித்துக் கொண்டு வலது கையால் அம்பு விடுவது பொது வழக்கம். வலது கையால் வில்லைப் பிடித்துக் கொண்டு இடது கையாலும் அம்பு விடும் மாவீரனை ''ஸவ்யஸாசி'' என்பர்.

''அர்ஜுனா! இவர்கள் (கௌரவர்கள்) ஏற்கெனவே எனது சங்கற்பத்தினால் வெல்லப்பட்டு விட்டார்கள். நீ ஒரு நிமித்தமாகவே இரு. இரண்டு கரங்களினாலும் கணைகளைத் தொடுத்துத் துரிதமாக உனது கடமையைப் பூர்த்தி செய்'' என்கிறான் கண்ணன்.

பார்த்தனைப் போல் நேரத்தை வீணாக்காமல், இடைவிடாத உழைப்பின் மூலம் ஜனநாயகத்தைக் காப்பாற்றிக் காங்கிரஸை வீழ்த்த வேண்டும் என்பதற்கு மேற்கண்ட சுலோகத்தைத் தவிர வேறு எதுவும் ஒப்பாக அமையாது.

காஞ்சி சடகோபன்
22-7-66 சென்னை-44

பல்சுவைப் பக்கத்தில் 'சோககீதம்' எனும் தலைப்பில் வெளியாகியிருந்த கவிதையைப் படித்ததும் உண்மையில் சோகமடைந்தேன். எஸ். எஸ். எல். ஸி.யில் தேர்வு பெறாத காரணத்தால் அல்ல, அப்படி நேர்ந்திருந்தால்கூட இவ்வளவு வருத்தப்பட மாட்டேன். பின் நடந்தது என்ன? இதே கவிதையைக்கூட இன்னும் நான்கு வரிகளுடன் ஓரிரு சொல் மாற்றங்களுடன், 'நாலிருக்கும் — நோட்டிருக்கும்' என்ற தலைப்பில் 1962ல் நான் எழுதியிருக்கிறேன். ஆகவே, எனக்கு இந்தச் 'சோக கீதத்'தைப் படித்ததும் வருத்தமாயிருந்ததில் வியப்பில்லையல்லவா?

சென்னை
22-7-66 சுதந்தா

திரைப்படத் தியேட்டர்களில் காட்சியின் இறுதியில், தேசியப் பாடலை ஒலிபரப்பும் போது மக்கள் எழுந்து நின்று மரியாதை செய்வதை விடுத்து, திரைப்படத் தியேட்டரை விட்டு வெளியேறுகின்றனர்.

இது ஒருபுறம் இருக்க, தியேட்டர்களில் அப்பாடல் ஒலிபரப்பும் சமயம் 'ஜனகணமன' எனத் தொடங்கி, அடுத்த விநாடியே, 'ஜயஹே' என நின்று விடுகிறது. எனவே, தியேட்டர்களில் தேசியப் பாடல் ஒலிபரப்பு முன் எழுந்து செல்வதைக் கண்டிப்பதுடன் பாடல் முழுவதையும் ஒலிபரப்புமுன் இடையில் நிறுத்தப்படுவதையும் கண்டித்து அரசு ஆவன செய்ய வேண்டுகிறேன்.

மானாமதுரை
15-6-66 சுப. சோமநாதன்

Edited printed & published by T. Sadasivam on behalf of Messrs. Bharathan Publications Private Ltd., at the Kalki Press, Kilpauk, Madras-10

REGISTERED No. M. 4202
Registered as a Newspaper in Ceylon

